# செம்மணி

நிலம் 2 துகள் 60 வள்ளுவர் ஆண்டு 2052, 11 - 17 புரட்டாதி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

## இலங்கை அரசு மீதான
# ஐ.நாவின் கடும் அழுத்தம் தொடர்வது மிக அவசியம்



இலங்கையில் மனித உரிமைகளின் நிலை மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் ஆகியன மோசமடைந்து வரும் நிலையில் கொழும்பு மீதான தனது இறுக்கமான, கடுமையான கண்காணிப்பு மற்றும் அழுத்தத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

மனித உரிமைகள் பேரவையின் புரட்டாதி மாத அமர்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் தொடங்குகின்றது. இந்த அமர்வில் இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் தாக்கல் செய்யவுள்ளார். பேரவையில் இலங்கை தொடர்பாக கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கொழும்பின் நகர்வுகள் இந்த அறிக்கையில் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அமர்வுக்கு முன்னதாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பல அணிகளாகக் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கின்றமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் ஒப்பமிட்டு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியுடனும் சட்டத்தரணி சிறிகாந்தா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரின் தமிழ்த் தேசியக் கட்சியுடனும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்துடனும் இணைந்து பிறிதொரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பான் கீன் மூன் இருந்தபோது அவரால் நியமிக்கப்பட்ட மூன்று நிபுணர்களைக் கொண்ட குழுவின் அறிக்கையின்

பக்கம் 02

## வெடித்து உள்ளாடை சர்ச்சை!

உள்ளாடைகளின் இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருப்பது சமூக ஊடகங்களில் கடுமையான கேலிக்குள்ளாகி இருக்கிறது.

கொரோனா பாதிப்பைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியைச் சமாளித்து அந்நியசெலாவணி இருப்பை உயர்த்தும் நோக்குடன் அத்தியாவசிய தேவையற்ற மற்றும் அவசர தேவையற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை

பக்கம் 02



### தமிழினத்தை அழிக்கும் கொரோனா

22



### தமிழ் நாட்டிலுள்ள ஈழ அகதிகளுக்குத் தீர்வு ஏது?

22



## முடக்கம் நீடிப்பு

இலங்கையில் நடைமுறையில் உள்ள முடக்கம் மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எட்டப்பட்டது.

எதிர்வரும் 21ஆம் நாள் வரையில் முடக்கத்தை நீடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தனது கீச்சக (ருவிற்றர்) பக்கத்தில் அறிவித்தார்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாகக் குறைந்துவரும் நிலையில் இலங்கையை விரைவில் முழுவதுமாகத் திறந்துவிட முடியும் என்று தாம் கருதுகின்றார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்றுப் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து நாட்டை குறைந்தது 4 வாரங்களுக்கு முடக்குமாறு மருத்துவத் துறை வலியுறுத்தி வந்தது. எனினும் தொடக்கத்தில் அதனை ஏற்க மறுத்து வந்த ஆட்சியாளர்கள், ஒரு வழியாக முடக்கத்தை அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு ஒவ்வொரு வாரமாக நீடிக்கப்பட்டு இப்போது நான்காவது வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

புரட்டாதி 13ஆம் நாள் காலை 4 மணிக்கு விலக்கிக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு 21ஆம் நாள் காலை 4 மணிக்கே நீக்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

21ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டைத் திறந்து விடுவதாயின் பின்பற்றப்படவேண்டிய சுகாதாரக் கட்டுப்பாடுகள் நடைமுறைகள் தொடர்பான அறிக்கையை முன்வைக்குமாறு அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தம்மிடம் வலியுறுத்தியிருக்கிறார் என்று ஊடகங்களிடம் தெரிவித்தார் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும் தரைப் படைத் தளபதியுமான லூட்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

## பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து ஆராய குழு நியமிப்பு

கடந்த சுமார் ஒரு வருட காலமாக முடிக்கிடக்கும் பாடசாலைகளைத் திறப்பது தொடர்பாக சுகாதாரத் துறையினரையும் உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவிடம் இருந்து பரிந்துரைகளைக் கேட்டிருக்கிறார் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச.

அவரது தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த கொவிட்-19 கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் சுமார் 7 லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதற்கு மேலதிகமாக முன்பள்ளிச் சிறுவர்களின் கல்வியில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இதையடுத்து பாடசாலைகளைத் திறப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கான சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை அதிகாரிகளை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவை நியமித்து அதன் பரிந்துரைகளைப் பெறும்படி அரச தலைவர் அறிவுறுத்தினார்.

முதற்கட்டமாக 100 பிள்ளைகளுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளைத் திறப்பது தொடர்பில் இந்தத் தொழில்நுட்பக் குழுவினர் தமது பரிந்துரைகளை முன்வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சாவு எண்ணிக்கை 11,000ஐ எட்டியது

கொவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்கள் தொடர்பில் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையின்படி 131 பேர் நேற்றுமுன்தினமும் உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து 10 ஆயிரத்து 995 பேர் மொத்தமாக உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் உயிரிழந்தவர்கள் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 110 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். எஞ்சிய 10 பேரும் 30 வயது முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள்.

இதுவரையில் 4 லட்சத்து 77 ஆயிரத்து 636 பேர்

பக்கம் 02

செம்மணி

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# எந்தத் தரப்பாயினும் விசாரிக்கத்தான் வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதங்களை அனுப்பி வைத்த விடயத்தில் ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமையோடு செயற்படவில்லை என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கடிதத்தையும் அதில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று கட்சிகளைத் தொடங்கியவர்களுடன் இணைந்து மற்றொரு கடிதத்தையும் அனுப்பி வைத்திருக்கும் பின்னணியில் இந்தச் சர்ச்சை தோன்றியுள்ளது.

இப்படித் தனித் தனியாகக் கடிதங்கள் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாக உடைந்துவிட்டது என்றும், தமிழ் அரசுக் கட்சி மட்டுமே இப்போது கூட்டமைப்பாக எஞ்சியுள்ளது என்றும் முன்வைக்கப்படும் விமர்சனங்களை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று யாழ்ப்பாணத்தில் மறுத்தார். கூட்டமைப்புக்குள் எந்தக் குழப்பமும் இல்லை என்றார்.

ரெலோ, புளொட் கட்சிகளின் செயற்பாட்டை விமர்சித்த போதும் அது கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைக்காது என்ற சாரப்பட அவர் கடுமையாக ஊடகங்கள் மீது பாய்ந்தார். தமிழ் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றார்.

போரின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தரப்புக்கள் அனைத்தையும் விசாரணை செய்யவேண்டும் என்று பரிந்துரைக்கும் தருஸ்மன் குழுவின் அறிக்கையை மேற்கோள்காட்டி சம்பந்தன் கடிதம் அனுப்பியிருப்பதன் மூலம் விடுதலைப் புலிகளையும் விசாரணைக்கு உள்ளாக்கும்படி கூட்டமைப்பு கேட்கிறது என்கிற குற்றச்சாட்டின் கீழேயே ரெலோ, புளொட் கட்சிகள் தனியாகக் கடிதம் அனுப்பும் முயற்சிக்குச் சென்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டின் சென்னையில் வசிக்கும் கவிஞர் காசி ஆனந்தன் அறிக்கை ஒன்றின் மூலம் கூட்டமைப்பை இந்த விடயத்துக்காக வெளிப்படையாகக் கண்டித்துமிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பான் கீ மூன் பதவி வகித்தபோது இலங்கையின் போரில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்த தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக உலகின் மிகச் சிறந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான தருஸ்மன், சூகா ஆகியோரை உள்ளடக்கிய 3 நிபுணர்களை நியமித்தார். அந்தக் குழு தனது அறிக்கையில் போரில் ஈடுபட்ட இரு தரப்புக்களும் அவற்றுக்குத் துணை நின்ற தரப்புக்களும் (துணைப் படைகள்) மனித உரிமை மீறல்களிலும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களிலும் ஈடுபட்டிருபதற்கான நம்பகமான சான்றுகள் இருக்கின்றன என்று தெரிவித்திருந்தது. அவை குறித்து விசாரிக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்திருந்தது.

அந்த அறிக்கையில் மட்டுமல்ல அதன் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கையிலும்கூட போரில் ஈடுபட்ட தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒரு இனப்படுகொலை அரசுக்கு எதிராக விசாரணை நடத்துவதற்குக் கோருகின்ற சமயத்தில் அத்தகைய கொடூர அரசுக்கு எதிராகப் போராடிய விடுதலை இயக்கத்தையும் விசாரிக்கக் கோருவது நியாயமில்லை என்று அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இந்தக் கருத்தில் எந்த நியாயமுமில்லை.

மக்களுக்காகப் போராடுகின்றவர்களாக இருப்பினும் அரசுகளாக இருப்பினும் எவருக்கும் மக்கள் மீது வன்முறையைப் பிரயோகிக்கவும் அவர்களின் மனித உரிமைகளை மீறுவதையும் போர்க் குற்றங்களில் ஈடுபடுவதையும் அறிவுடைய சமூகம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அதனால் இலங்கையின் போரில் ஈடுபட்ட தரப்புக்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தால் அவை குறித்து விரிவான சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்படவேண்டியது அவசியமே.

அது எந்தத் தரப்பு என்பது முக்கியமல்ல. அப்பாவி மக்களுக்கு எதிரான எத்தகைய செயற்பாடுகளும் அனுமதிக் கப்படமுடியாதவை. அவை மீள நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். அதனால் சரியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு தவறு இழைத்த தரப்புக்கள் பகிரங்கப் படுத்தப்படவேண்டியதே நியாயமானது. அதில் மாற்றுக் கருத்துக்கள் இருப்பதற்கு இடமில்லை.

## ஐ.நா.வின்...

அடிப்படையில் பேரவையின் நகர்வுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று சம்பந்தனின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளமை, விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களுக்காக விசாரிக்கப்படவேண்டும் என்று கோரப்படுவதற்கு ஒப்பானது என்று கூறியே கூட்டமைப்பில் உள்ள ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிச்சென்று தனியாகக் கட்சிகளைத் தொடங்கியவர்களுடன் இணைந்து மற்றொரு கடிதம் அனுப்பப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து தமிழ்த் தேசியத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்கிற கடிதத் தலைப்பில் மற்றொரு கடிதத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன. ஆனால் அதனை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன் உறுப்பினர்களான எஸ். சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் மறுத்துள்ளனர்.

இந்தக் கடிதத்தில் சிலரின் கையெழுத்துக்கள் மோசடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று கட்சியிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். இந்த விடயம் ஆராயப்பட்டபின் மோசடி நடந்தது உண்மையாயின் குற்றவியல் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கட்சி நிர்ப்பந்திக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை விவகாரம் கையளிக்கப்பட்டதே தருஸ்மன் தலைமையிலான மூவர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில்தான். அதனால்தான் அந்த அறிக்கையை மேற்கோள்காட்டி சம்பந்தனின் கடிதம் எழுதப்பட்டது. கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் மீதான கண்காணிப்பு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அறிக்கையை அப்படியே மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பது என்று சம்பந்தன் எடுத்த முடிவின் அடிப்படையில் அதனுடன் சேர்ந்து ஒரு கவரிங் லெட்டர்தான் அவரால் இணைக்கப்பட்டது. அதன் வரைவுகூட கூட்டமைப்பின் அனைத்துக் கட்சியினருக்கும் அனுப்பப்பட்டது" என்றார் சுமந்திரன்.

ஐ.நா. மனித உரிமைகள் தீர்மானத்தின்படி 36 விடயங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை பொறுப்புகளைக் கொண்டிருக்கின்றபோதும் அதில் 7 விடயங்கள் மட்டுமே இதுவரையில் இலங்கை அரசால் தொட்டுப் பார்க்கப்பட்டுள்ளன என்று அந்த அரச சார்பற்ற அறிக்கை கூறுவதாகச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அதுவொரு சிறந்த அறிக்கை என்பதால் அதனை அப்படியே அனுப்பி வைப்பதற்கு சம்பந்தன் தீர்மானித்தார் என்றும் தெரிவித்தார்.

"நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விசாரணை நடத்தும்படி கேட்கவில்லை. இலங்கை அரசே விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று சொல்கிறோம்" என்றார் அவர்.

தருஸ்மன் அறிக்கையில் போரில் ஈடுபட்ட தரப்புக்கள் எல்லாமே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருப்பதற்கு ஆதாரங்கள் இருப்பதால் அவை குறித்து விசாரிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துவது புலிகளையும் விசாரணைக்கு உட்படுத்துவதாக அமையும் என்று ரெலோ மற்றும் புளொட் தமது தனிக் கடிதத்திற்கு விளக்கம் கொடுத்திருந்தன.

தமிழ்க் கட்சிகள் இங்கு இப்படிப் பிச்சல் பிடுங்கல்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே இலங்கை மீதான இறுக்கமான கண்காணிப்பு தளர்த்தப்படக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது நடந்துவரும் அரச நிர்வாக அமைப்புக்கள், மக்களாட்சி, சட்டத்தின் ஆட்சி என்பன பலவீனப்படுத்தப்படுவது, அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் முறைகேடுகள் என்பன குறித்த தமது எச்சரிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகள் வெளிப்படுத்தவேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

"அதிகாரத் தரப்பினரால் கடும் அச்சத்துக்குள்ளாகி இருக்கும் சிறுபான்மைச் சமூகங்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு தொடர்ச்சியான பன்னாட்டு கவனக் குவிப்பு மற்றும் அழுத்தம் உதவும்" என்று தெரிவித்தார் கண்காணிப்பகத்தின் தென்னாசிய பிராதிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இந்த மாத அமர்வில் வாய்மொழி மூல அறிக்கை முன்வைக்கப்படுவதைத் தவிர வேறு எதுவும் பெரிதாக நடக்காது என்றும் தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப்படப்போவதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார். கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசவும் உடனிருந்தார்.

## வெடித்தது...

மத்திய இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதில் உள்ளாடைகளின் இறக்குமதிக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி அரசின் நடவடிக்கை எள்ளி நகையாடப்பட்டு வருகின்றது. உள்ளாடைகளின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக எவரும் உள்ளாடைகளே அணிய முடியாத நிலை ஏற்பட்டுவிடப் போவதான மிகைப் படுத்தப்பட்ட கற்பனைகளுடன் இந்த எள்ளி நகையாடல்கள் சமூக ஊடகங்களில் நிரம்பிக் கிடக்கின்றன.

உண்மை நிலவரப்படி உள்ளாடைகள் பெருமளவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. அதனால் உள்ளாடைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவானவை என்கின்றனர் வர்த்தகர்கள்.

இருப்பின் அரசின் நடவடிக்கைகளை விமர்சிப்பதற்கான ஒரு விடயமாக இது சமூக வலைத்தளப் பதிவர்களால் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கிடையில், நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த மக்கள் சக்திக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கர்ஷன ராஜகருன, இலங்கையில் முதற்றடவையாக உள்ளாடைகள் அவசியமற்றன என்று சொல்லப்பட்டிருப்பதாகக் கண்டித்தார்.

"மக்களின் கோமணத்தையும் உருவப் பாக்கிறது அரசு" என்று குற்றஞ்சாட்டினார் அவர். இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் பொருள்களின் பட்டியலில் 100 பொருள்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்றாகவே உள்ளாடையும் அடங்குகின்றது.

## சாவு...

தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 4 லட்சத்து 9 ஆயிரத்து 628 பேர் குணமடைந்துள்ளனர். 57 ஆயிரத்து 144 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் 1 கோடிக்கும் அதிக மானவர்களுக்கு இரண்டு கட்டத் தடுப்பூசிகளும் போடப்பட்டுவிட்டன என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தொற்றுநோயியல் துறையின் நேற்றைய அறிக்கையின்படி மொத்தம் 1 கோடி 2 லட்சத்து 11 ஆயிரத்து 537 பேருக்கு தடுப்பூசிகள் முழுமையாக ஏற்றப்பட்டுள்ளன.

# கூட்டமைப்பின் போக்கும் உட்கட்சி முரண்களும்

● வி.அருணாசலம்

சிங்கள அரசுக்கு எதிராக அல்லது அதற்கு இணையாகச் செயற்படும் நோக்கிலேயே "தமிழரசு" என்ற பெயருடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை எஸ். ஜே.வி.செல்வநாயகம் உருவாக்கினார். ஆனால், இந்தத் தமிழரசு என்ற உள்நோக்கம் சிங்களவருக்குத் தெரிந்துவிடாதபடி "பெடரல் பாட்டி" என்று வேறொரு தோற்றத்தை அந்தக் கட்சிக்குக் கொடுத்தபோதும் அந்தக் கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணியாக உருவெடுத்தது. இதன்முடிவாக 1976இல் தமிழீழம்தான் தீர்வு என வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டது.



இந்தக் கட்சியின் நரம்பு நாடிகளாகக் காணப்பட்ட சுதந்திரன் பத்திரிகை, தலைவர்களின் மேடைப் பேச்சுகள், கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் போன்ற எல்லாமே சிங்களவன் கெட்டவன் என்ற சாராம்சத்தைக் கொண்டவையாக இருந்தன. இதைத் தமிழ் மக்கள் மத்தியில் ஊட்டுவதில் இந்தக் கட்சி அதிக கவனம் செலுத்தியது. சிங்களவரும் தமிழரும் சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் போன்றவர்கள் என (ஒருபோதும் ஒட்ட மாட்டார்கள்) புத்தகம் வெளியிட்டதும் சிங்களவனின் முதுகுத் தோலில் செருப்புத் தைத்துப் போடுவோம், சிங்களவனின் குருதியைக் கூந்தலில் பூசுவோம் என வக்கிரமான பேச்சுகளாலும் தமிழ் மக்களுக்குக் கூறிய தலைவர்கள் நாடாளுமன்ற அரசியல் என்ற பெயரில் வருடத்தின் பெரும்பகுதி நாள்களைச் சிங்களவருடனேயே கழித்தார்கள்.

**2020தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சியின் வடக்குத் தலைவர்களின் மேலாண்மையை கிழக்கு மக்கள் புறக்கணித்திருந்தனர். இதுவிடயத்தில் "வடக்குத் தலமை கிழக்குத் தலைமைகளைக் கட்டுப் படுத்த முடியாது" எனக் கூட்டமைப்பின் தலைவர் வெளிப்படையாகக் கண்டித்தி ருந்ததும் குறிப்பிடத்தக்கது**

### மக்கள் மத்தியில் தோற்றுவிடுவோம் என்ற பயம்

தமிழ்த் தலைவர்களுக்குத் தேர்தல் காலத்தின்போது ஒரு சந்தேகம் எழுவதுண்டு. தாங்கள் பேசிய துவேசத்தின் உரப்பு காணாதுவிட்டால், மக்கள் தமக்கு வாக்களிக்காது விட்டுவிடுவர் என்ற பயமே அது. இந்தத் தலைவர்களின் மனநிலைக்கு ஏற்ப 1958, 1977, 1983காலப்பகுதிகளில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் இவர்களைத் தீர்க்க தரிசிகளாக்கின. தேர்தல் காலங்களில் எழுச்சியாக எதையாவது கூறினால்தன் மக்களின் வாக்குகளைப் பெற முடியும் என்ற விதத்தில் தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகளை விமர்சிப்பது, அந்தக் கட்சிகள் சார்ந்து வடக்குக் கிழக்கில் போட்டியிடுபவர்களைக் கொச்சைப்படுத்துவது என மற்ற அரசியல்வாதிகளை வைத்துத் தமது வெற்றியை உறுதிப்படுத்தவேண்டிய நிலை இருந்தது. எப்போதும் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் இந்தத் தலைவர்களுக்கு அபிவிருத்தி விடயங்களைக் கையாளும் வாய்ப்புகள் இல்லாதிருந்தன (2015-19 காலப்பகுதியில் நல்லாட்சி அரசில் இந்த வாய்ப்புக் கிடைத்தது). இந்த நிலையில் சிங்களக் கட்சிகளின் மூலம் தெரிவு செய்யப்படுவோரின் செயற்பாடுகள் இந்தத் தலைவர்களைப் பாதித்தன.

### புதியவர்களைக் களமிறக்குவது

லங்கா சமசமாசக் கட்சியின் தீவிர செயற்பாட்டாளராக இருந்த தர்மலிங்கத்தைத் தமிழ் அரசுக் கட்சியில் சேர்த்ததன் மூலம் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது மட்டுமல்லாது அவரின் தனிப்பட்ட சொத்துகளையும் கட்சிக்காகச் செலவிட வைத்தனர். ஆனால், தர்மலிங்கம் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால்போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். இதேபோன்றதொரு இறக்குமதியை 2013இல் வடமாகாண சபைத் தேர்தலின்போது மேற்கொள்ளவேண்டிய தேவை இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. முதலமைச்சர் வேட்பாளருக்குத் தகுதியான ஒருவர் தம்மிடம் இல்லை என்ற முடிவின் பின்னரே ஓய்வுபெற்ற நீதியரசரான விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கினர். அவரை முதலமைச்சராக நிலைப்படுத்திக்கொண்ட பின்னர் எல்லாவற்றுக்கும் ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டபோது அது (தமிழ் அரசுக் கட்சியிடம் ஆவணங்களைப்பேணும் மரபு இல்லை) தமிழ் அரசுக் கட்சியின் அதுவரையான ஓட்டத்துக்கு மாறான செயற்பாடாக அமைந்தது.

விக்னேஸ்வரனின் இந்தப்போக்கு கூட்டமைப்புக்கு எதிரான ஒரு மாற்றுத் தலைமை உருவாக்கிவிட வேண்டும் என்ற நோக்கில் சில அரசியல் ஆய்வாளர்கள், சட்டத்தரணிகள், மதத் தலைவர்கள், கூட்டமைப்புக்கு எதிரான போக்குடையவர்கள் எனப் பலரும் விக்னேஸ்வரனுக்குப் பக்க பலமாக நிற்பதாகக் காட்டியதால் விக்னேஸ்வரன் தமிழ் அரசுக் கட்சியைத் துணிந்து விமர்சித்தார். பிரிந்து தனிக் கட்சியும் அமைத்துக்கொண்டார்.

### 2020 தேர்தல் தந்த பாடம்

வடமாகாண சபையின் தோல்விக்குத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான சி.வி.கே.சிவஞானம் முக்கிய காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியிருந்தார். 2020தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சியின் வடக்குத் தலைவர்களின் மேலாண்மையை கிழக்கு மக்கள் புறக்கணித்திருந்தனர். இதுவிடயத்தில் "வடக்குத் தலமை கிழக்குத் தலைமைகளைக் கட்டுப் படுத்த முடியாது" எனக் கூட்டமைப்பின் தலைவர் வெளிப்படையாகக் கண்டித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. சிங்களவரையும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைவர்களையும் வைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகள் நடத்திச் சென்ற அரசியல் 2020இல் மிகவும் பாதிப்பான கட்டத்துக்குத் திரும்பியது. போர் முடிவுற்று 10ஆண்டுகள் கடந்தபின்பு தமிழ்த் தேசியக் கட்சிகளின் செயற்றிறன் இன்மையையும், வடமாகாண சபை அர்த்தமற்றதாக மாறியதற்குமாக மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் புறக்கணித்தார்கள்.

2020தேர்தலில் தமிழ் மக்கள் சுயமாகச் சில முடிவுகளை எடுத்திருந்தார்கள். ஒருபிரிவினர் தேசியத்திலிருந்து விலகாது தேசியத்தின் பக்கம் நின்ற கஜேந்திரகுமார் அணி, விக்னேஸ்வரன் அணிகளுக்கு வாக்களித்தனர். ஏனைய மக்கள் கூட்டமைப்பைத் தவிர்த்து நேரடியாகவே கொழும்பு அரசுடன் நிற்கும் கட்சிகளை ஆதரித்தனர். இதன் மூலம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் வடக்கிலும் செயலாளர் கிழக்கிலும் தோற்கடிக்கப்பட்டனர். தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பத்திரிகையை நடத்திய சரவணபவன் மற்றும் சாந்தி சிறிஸ்கந்தராஜா, வைத்தியர் சிவமோகன், கோடீஸ்வரன் போன்றவர்களும் தோற்கடிக்கப்பட்டனர். அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, திலீபன், காதர் மஸ்தான், பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்கள் வெற்றிபெற்றனர். இதில் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரின் வெற்றியும் கூட்டமைப்பின் மக்கள் செல்வாக்கின்மையால் ஏற்பட்டதே.

### தற்போதைய முரண்பாடு

ஜெனீவாவுக்குக் கடிதம் அனுப்பியதால் விபரீதம் நடந்துவிட்டது என்பது ஓர் உடனடிக்காரணமாகக் கூறப்பட்டாலும் கூட்டமைப்பின் உட்கட்சி முரண்பாடுகளின் உச்ச நிலையிலேயே ரெலோ, புளொட் ஆகியன கூட்டமைப்பிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறியிருக்கின்றன. கூட்டமைப்புக்குள் இவர்களை ஆயுதக் குழுக்கள் என்ற அடையாளத்துடனேயே

# தமிழ் நாட்டிலுள்ள ஈழ அகதிகளுக்குத் தீர்வு ஏது?

■ நியூட்டன் ■

30வருடங்களுக்கு மேலாகத் தமிழ்நாட்டிலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமையோ இந்திய மக்களுக்கு இருக்கக்கூடிய ஏனைய சமூக மதிப்போ வழங்கப்படவில்லை என்பது துயரமான வரலாறே. இலங்கையில் போர் முடிவுற்று 12 ஆண்டுகள் கடந்த பின்பும் அவர்கள் ஏன் நாடு திரும்பவில்லை? போர் முடிந்தபின் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தலை வர்களால் அவர்களை மீளவும் குடியேற்ற ஏன் முடியவில்லை? யாழ் குடாநாட்டின் மக்கள் தொகை குறைந்ததால் ஏற்கனவே இருந்துவந்த 7நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி ஏன் 6ஆகக் குறைந்திருக்கிறது. ஆனாலும் தமிழ்நாட்டிலுள் ஈழ அகதிகளை மீளக் குடியேற்றுவதற்கு யாழ்ப்பாணத் தலைவர்கள் முயற்சிக்கவில்லை. ஈழ அகதிகளின் நல்வாழ்வுக்காக 317கோடி ரூபாவை மு.க.ஸ்ராலின் தலைமையிலான தி.மு.க அரசு தனது பாதீட்டில் ஒதுக்கி அவர்களுக்கான வீட்டு வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு என்று நலத்திட்டங்களை வழங்கவிருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

**அங்குள்ள அகதிகளின் மனநிலை**

தமிழ்நாட்டில் நீண்டகாலம் அகதியாக வாழும் வவுனியாவைச் சேர்ந்த ஒருவரிடம் உரையாடியபோது, 30வருடங்களுக்கு மேல் அங்கு வாழ்ந்துவிட்டதாகவும் மீண்டும் வவுனியாவுக்கு வருவதை விரும்பினாலும் பிள்ளைகளின் படிப்பு, தொழில்வாய்ப்பு போன்ற காரணங்களால் அவர்கள் ஒரு போதும் இங்கு வரவிரும்புகிறார்களில்லை என்பதும் தெளிவாகியது. அங்குள்ள நிலமைகளுக்கு ஏற்ப ஏதோ கஸ்ரப்பட்டுக் கூலிவேலை செய்து சிலர் சிறிய கடை வைத்திருக்கிறார்கள். பலர் நடமாடும் வியாபாரம், மேசன் வேலை, தீந்தைபூசும் தொழில், கூலி வேலைகள் என வாழ்க்கை நடத்திவரும் நிலையில் காடு பத்திப்போன தங்கள் ஊர்க ளுக்கு மீண்டும் வந்து என்ன செய்ய முடியும்? என்பதாகக் கேள்வி எழுப்புகிறது அவர்களின் மனநிலை.



**இந்தியாவில் உள்ள அகதிகள் இந்தியப் பூர்வீகர்கள்தான்**

1977ஆம் ஆண்டில் உள்நாட்டில் நடந்த இனக்கலவர காலத்தின்போது மலையகப் பகுதியிலிருந்து அழைத்து வந்த மக்களைச் சாந்தியம் 12 கிராமங்களில் குடியேற்றினார்கள். அதில் முசல்குத்தி போன்ற கிராமங்கள் முற்றாகக் காடு பத்திக் கிடக்கின்றன. இந்தியாவில் அகதிகளாக உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த மலையக அடியைச் சேர்ந்தவர்களே. ஏற்கனவே தமிழ்நாட்டிலிருந்து கூலிகளாக மலையகத்துக்குக் கொண்டுவரப்பட்ட இவர்கள் மீண்டும் வெறுங்கையுடன் தமிழ்நாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வரவேண்டிய நிலையில்லை. தமிழ்நாட்டிலுள்ள ஈழ அகதிகளில் 20வீதமானவர்கள் திருச்சியில் வாழ்கின்றனர். அவர்கள் வெளிநாட்டுத் தொடர்புகள், பண பலம், நல்ல வீடுகள், முதலீடுகள் என வசதியாக உள்ள னர். திருச்சியில் மாவை சேனாதிராசாவுக்குச் சொந்தமான பெரிய வீடுகூட உண்டு. வெளிநாட்டு வசதியுள்ளவர்கள், இறுதிப் போர்க் காலப் பகுதியில் இந்தியாவுக்குச் சென்றவர் கள்கூட அகதிமுகாம்களில் இல்லை. அவ்வாறு வந்தவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். தற்போது முகாம்களில் உள்ளவர்களுக்கு இலங்கையில் பலமான உறவு இல்லை, வெளிநாடுகளிலும் இல்லை. இந்த நிலையில் அவர்கள் இந்தியாவில் இருப்பதையே விரும்புகின்றனர். ஈழ அகதிகளின் நல்வாழ்வுக்குப் பாதீட்டில் பணம் ஒதுக்கிய ஸ்ராலினின் முடிவை இலங்கையிலிருந்து வாழ்த்துத் தெரிவித்தவர்களும் விரும்புவதாகவே தெரிகிறது.



**யாழ்ப்பாணத்தில் காணி நிலமற்ற இந்த மக்களை அரச காணிகளில் குடியேற்றி அவர்களையும் தமது மக்களாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை யாழ்ப்பாணத் தமிழ் அரசியல் கட்சிகள் எதனிடமும் இல்லை. ஏழை மக்களான அவர்களை வெறும் கையும் காலுடனும் பொறுப்பேற்பதற்கு யாரும் தயாரில்லை**

**யாழ்ப்பாணத்து அகதிகள் இல்லை**

ஈழ அகதிகளை ஒரு பேசு பொருளாக வைத்து அரசியல் நடத்திய இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் அதை வைத்து இலங்கை அரசுக்குத் தலையிடியையும் பிரச்சினைகளையும் கொடுத்து வந்தனர். முதலமைச்சர் ஸ்ராலினின் இந்த முடிவு இலங்கையிலுள்ள தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்குப் பாதகமானது. ஆனால், நாட்டுக்குத் திரும்ப விரும்பாத அந்த மக்களைப் பொறுத்தவரை இந்தியாவில் உரிமையுடன் வாழ்வதற்கான ஒரு வாய்ப்பை இதன் மூலம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் காணி நிலமற்ற இந்த மக்களை அரச காணிகளில் குடியேற்றி அவர்களையும் தமது மக்களாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை யாழ்ப்பாணத் தமிழ் அரசியல் கட்சிகள் எதனிடமும் இல்லை. ஏழை மக்களான அவர்களை வெறும் கையும் காலுடனும் பொறுப்பேற்பதற்கு யாரும் தயாரில்லை. இதுவரை காலமும் ஈழ அகதிகளைப் பற்றி இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் கூறியதெல்லாம் பொய் என்பது ஸ்ராலினின் முடிவுக்கு அவர்களே வாழ்த்துத் தெரிவித்து வருவதிலிருந்து தெளிவாகிறது. அவர்கள் இந்தியப் பூர்வீகக் குடிகள் என்பதால் டெல்லி அரசும் கால கதியில் அவர்களைத் தமது பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளவே வாய்ப்புகளுண்டு.

## கூட்டமைப்பின்...

பேணி வந்தார்கள். தமிழ் அரசுக் கட்சி எப்போதோ மறுசீரமைக்கப்பட்டிருக்க வேண்டும் (குறைந்தபட்சம் போர் முடிவுற்றதும் இது நிகழ்ந்திருக்க வேண்டும்). நல்லாட்சி அரசின்போது மகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்குக் கூட்டமைப்பு உறுதுணையாக நின்றதற்குக் காரணம் விக்னேஸ்வரனின் செல்வாக்கு அதிகரித்துவிடக்கூடாது என்பதற்காகவே.

தற்போது உள்ளதுபோன்ற பல முரண்பாடுகள் ஏற்கனவே கூட்டமைப்புக்குள் வந்திருக்கின்றன. அவற்றைத் தங்களுக்குள் பேரம் பேசி ஒட்டுப்போட்டதன் பின்னர் இந்தியாவின் அழுத்தம், சர்வதேச அழுத்தம் காரணமாக ஒன்றாக இயங்குமாறு பணிக்கப்பட்டிருக்கிறது எனப் புதுக்கதை ஒன்றைக் கிளப்புவதே வழக்கமாக இருந்தது.

தற்போது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டுக்கும் மக்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இது கட்சித் தலைவர்களுக்கிடையிலான முரண்பாடுகளே. தமிழரசுக் கட்சி இளைஞர் அணி ஒன்றைக் கட்டி வளர்க்க முடியாமல்போனது கூட எதிர்காலத்தில் அந்தக் கட்சி மக்கள் மத்தியில் நிலைத்து நிற்க முடியாது என்பதையே காட்டுகிறது. 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருந்த கூட்டமைப்பு தற்போது 6ஆகச் சுருங்கிவிட்டதும் இத்தகைய முரண்பாடுகள் பரிசாக்கியதுதான்.

# கவிதை எனும் தேனாறு

## துயர் சொல்லும் கவிதைகள்

● வேலணையூர் _ தாஸ்

8

*அம்மா*
*கைநழுவிச் செல்கின்றாயா*
*காற்றின் காலே!*
*விழுந்து கெஞ்சுகிறேன்*
*எஞ்சிய என்னொரு சுடரையும் அணையாதே!*
*தொண்டைக்குழியில் மாத்திரமாவது தங்கி நில்*

இந்தக் கவிதையை எழுத்தாளர் உமாவரதராஜன் தனது முகநூல் பக்கத்தில் 07/2021/6.49AMக்கு எழுதினார்.

தனது தாயின் இறுதிக்கணங்களை அருகிருந்து பார்க்கின்ற ஒரு மகனின் துயர நிலையை எடுத்துக்காட்டுவதாக இருந்தது அது.



நீள எழுதாமல் ஒருசில சொற்களிலேயே ஆற்றொணா மனதின் துயரத்தை இறக்கி வைப்பதாக இருந்தது இக் கவிதை ... இது வெளியாகி மூன்று மணி நேரத்தில் உமாவின் அம்மா காலமானார் இந்தத் துயரச் செய்தியையும் தனது பக்கத்தில் பதிவு செய்து இருந்தார் உமாவரதராஜன் ....

**உமாவின் தாயாருக்கு அஞ்சலிகள்...**

இவ்வாறு மனதின் உணர்வுகளை வெளிப் படுத்தும் ஒரு செயலாய் அமைகிறது கவிதை.அதாவது துயர் சொல் லும் கவிதைகள் இன்னும் உணர்வுக்கு நெருக்கமாய் அமைகின்றன. ஏனோ வாழ்வில் துயரத்தை அதிகம் விரும்பாத மனிதர்கள் துயரக் கவிதைகளை அதிகம் விரும்புகிறார்கள் என்பதுதான் முரண்நகை .

**கவிஞர் கருணாகரன்**

இவர் கூடுதலாக இலக்கியக்காரர்கள் அறிந்த கவிஞர். அரசியல், சமூகம்சார்ந்து பல தளங்களில் எழுதி வருபவர் இவர் முன்பு எழுதிய கவிதை ஒன்று முகநூலில் வாசிக்க கிடைத்தது.

காதலின் துயரத்தை ஒரு பெண் வழியாகப் பேசுகின்ற கவிதை. நிலத்தை, பொழுதுகளை, மனித உணர்வுகளோடு இணைத்து எழுதுகின்ற சங்ககால தமிழ்க்கவிதைகளை நினைவூட்டுவதாய் அமைந்த ஓர் அழகான உணர்வுமிக்க கவிதை காதலின் துயர் சொன்னாலும் அந்தக் காதலின் மென்மையும் அன்பும் வெளிப்படும் இந்தக் கவிதையின் சொற்கள் வாசிப்பவரோடு நீண்ட நேரம் வரு கிறது....

*என்னுள்ளே*
*தாமரை பூத்தது இன்றிரவு*
*அல்லி மலர்ந்தது நேற்று*
*நீங்கள் வரவில்லை*
*யாரோடு சென்றீர் நெடுந்தூரம்?*



*இந்த வாசலில்*
*றோஜா பழுத்தது காலையில்*
*மல்லிகை சிரித்தது மாலையில்*
*அன்பென்ற சொல் தவிக்குது*
*ஏன் வரவில்லை இன்னும்?*

*மாலையில்*
*வானவில் தோன்றுது முன்னே*
*ஆறு பாயுது அருகே*
*எங்கே சென்றீர் பெயர்ந்து*
*எப்படியிருப்பேன் தனித்து?*

*கூதலில்*
*ஆடிக்களிக்கிறது மயில்*
*கூவிச்சிரிக்கிறது குயில்*
*அள்ளிச் சொரிகிறது துயர்*
*ஏது செய்வேன் இங்கிருந்து.*

இதேபோல் காதலின் அன்பும் பிரிவின் துயரும் வெளிப் படும் கம்பனின்கவிதையொன்றப்பார்க்கலாம், ராவணனால் அசோகவனத்தில் சிறை இருந்த சீதை தன் கணவனின் காதலை எண்ணி பிரிவால் வருந்தி இரங்குவதாக அமையும் அந்தப் பாடல்

*விழுதல், விம்முதல், மெய்உற வெதும்புதல், வெருவல்,*
*எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்*
*தொழுதல், சோருதல், துளங்குதல், துயர் உழத்து உயிர்த்தல்,*
*அழுதல், அன்றி, மற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள்.*

இப்பாடல் காதல் துயரின் பல நிலைகளை எடுத்துக் காட்டு வதாக அமையும் போர்ச்சூழல் காரணமாக தங்கள் துணையை இழந்து இருக்கிற, இன்னும் தேடிக்கொண்டிருக்கிற, புலப் பெயர்வு காரணமாகத் தங்கள் அன்பான துணையைப் பிரிந்தி ருக்கிற ஈழத்துப் பெண்களின் துயர் நிலையோடு இந்தக் கவிதையை ஒப்பிட்டு நோக்க லாம்.



இவ்வாறு வாழ்வின் துயர் நிலை பேசுகின்ற கவிதைகள் போல் சில கவிதைகள் வித்தியா சமான வேடிக்கையான உணர் வுகளையும் வெளிப்படுத்துவ துண்டு.

**வரணி சிவா**

வரணி சிவா என்று அழைக் கப்படுகின்ற சிவராசா அவர்கள் கவிதைகள் அதிகம் எழுதா விட்டாலும் எழுத்துத்துறையில் தொடர்ந்து இயங்குபவர்.அவர் தான் சிகரெட் பாவனையை நிறுத்தியதை நகைச்சுவையாகத் துயர் தோய்ந்த அனுபவத்தில் அண்மையில் எழுதியிருந்தார் பார்க்கிறபோது ஒரு பிரிவின் கவிதைபோல் தென்படுகின்ற இக் கவிதை கொஞ்சம் வித்தியாசமான வாசிப்பனுபவத்தைத் தருவது செம்மண் வாசகர்களுக்காக....

*நாளுக்கு நாலாறு தடவைக்குக் குறையாமல்*
*விரல்பற்றி,*
*விரலிடுக்கில் வைத்துருட்டி வருடி,*
*முகர்ந்து*
*இதழோடு இதழ் பொருத்தி*
*இழுத்து உறிஞ்சி*
*இப்பிறப்பில் இனி ஒரு நாளேனும் பிரிதல் அரிதென்றிருந்த*
*உறவொன்றைத் தொலைத்து*
*இன்றோடு ஆறாண்டுகள்*

(வரும் )




▮ கஜந்தன் ▮

# இயற்பியல் கோட்பாடுகளில் மிக அழகானது

**ஒருவரை பூமியில் விட்டு விட்டு மற்றவர் மிகவும் வேகமாக (ஒளியின் வேகத்தோடு ஒப்பிடத்தக்க கணிசமானளவு வேகம்) விண்கலத்தில் சில ஆண்டுகள் மட்டும் பயணித்து விட்டு பூமிக்கு மீண்டும் திரும்பினால், பயணித்த சூர்யா இன்னும் 'சிக்ஸ் பாக்' உடன் இளமையாகவே இருப்பார். ஆனால் பூமியில் பல ஆண்டுகள் கடந்து போய் , பூமியிலிருந்த சூர்யா 'வாரணம் ஆயிரம்' திரைப்பட வயதான தாத்தாச் சூர்யாவாக மாறிவிடுவார். (ஆனால் அப்பொழுதும் கௌதம் மேனன் அதே கதையை வைத்து படம் எடுத்துக்கொண்டிருப்பார்... னயனனலலலலல ஹ...)**

8

வேடனோ, பட்டாம்பூச்சியோ அலைந்து திரிவது இரையைத் தேடி. இந்த அலைதல் தெளிவான திட்டமிடல் இல்லாத ஒரு பயணம். ஆனால் இந்தப் பயணத்துக்குக் குறிக்கோள் இல்லை என்று கூற முடியாது. அந்தக் குறிக்கோள் இன்னும் எழாத பசிக்குள் புதைந்து கிடக்கிறது. அவ்வாறுதான் தனது இளமையில் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் அலைந்து கொண்டிருந்தார். நேரத்தை 'வீணடிக்காமல்' வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது. ஆனால் இது இன்றைய பெற்றோருக்கு சுத்தமாய்ப் புரிவதில்லை. அடிமைத்தனம் போன்ற உழைப்பை எதிர்பார்க்கும் பாடசாலைக் கல்விமுறையைத் தாக்குப்பிடிக்க முடியாமல், பாடசாலையை விட்டு இத்தாலியின் பாவியா (Pயஎயை) நகருக்கு வந்திருந்தார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் அது. இத்தாலியில் கைத்தொழில் புரட்சியின் ஆரம்பம்.

ஐன்ஸ்டீனின் தந்தை ஒரு பொறியியலாளர். இத்தாலியின் படுஆ (Pயனரய) பிரதேசத்தில் முதல் மின்சார உற்பத்தி நிலையத்தை நிறுவும் பணியிலிருந்தார். ஐன்ஸ்டீன் 'கான்ட்'டின் (முயவெ) எழுத்துக்களை வாசிப்பதிலும் , அவ்வப்போது பாவியா பல்கலைக்கழகத்துக்குப் பொழுதுபோக்குக்குச் செல்வதிலும் நேரத்தைக் கழித்தார். ஆம், பொழுதுபோக்கிற்குத்தான் சென்றார், ஏனென்றால் அங்கு அவர் தன்னைப் பதிந்துகொள்ளவில்லை, பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு அவர் தள்ளப்பட விரும்பவில்லை. வெறும் சந்தோஷத்துக்காக மட்டுமே விரிவுரைகளுக்குச் சென்றார். இவ்வாறுதான் சிறந்த விஞ்ஞானிகளும், கலைஞர்களும் உருவாகிறார்கள்.

பணம், புகழ் இவை இரையைப் பிடிக்க எறியப்படும் எலும்புத்துண்டுகள். இந்தச் சந்தர்ப்பத்தில் இரை, எம் ஆன்மா, இதயம். இதன் பின் சூரிச் (ணுரசஇஉH) பொலிடெக்னிக் கல்லூரியில் தன்னைப் பதிவு செய்துகொண்டு இயற்பியல் கற்பதில் மூழ்கினார், மூழ்கடிக்கப்பட்டார். சில ஆண்டுகள் கழித்து, 1905இல், அவர் அக்காலத்தின் பிரபல விஞ்ஞான இதழான 'அனலன் டெர் பிஸிக்'ல் (யுNயெடநN னநச PHலளைம) மூன்று கோட்பாடுகளை வெளியிடுகிறார். இவை ஒவ்வொன்றுமே நோபல் பரிசுக்குத் தகுதி உடையவை.



முதலாவது அணுக்களின் இருப்பை நிரூபிக்கிறது.

இரண்டாவது குவாண்டம் இயக்கவியலின் (ஞரயவெரஅ அநஉHயNIஉள) முதல் அடிக்கல்லை நாட்டுகிறது.



மூன்றாவது அவரின் முதல் சார்பியல் கோட்பாட்டைச் சொல்கிறது.

இன்று இது 'சிறப்புச் சார்பியல் கோட்பாடு' (ளுPநஉயைட வாநழசல ழக சநடயவஎைவல) என அறியப்படுகிறது. இந்தக் கோட்பாடே நேரம் எவ்வாறு பக்கச்சார்பாக நடந்துகொள்கிறது என்பதைப் பறை சாற்றுகிறது.

அனைவருக்கும் நேரம் ஒரே வேகத்தில் நகர்வதில்லை. குறிப்பிட்ட சில காரணிகள் வேறுபடுமாயின், ஒருவருக்கு ஒரு நிமிடம் இன்னொருவருக்கு நூறு நிமிடங்களாகக்கூட இருக்கலாம். ('நான் ஒரு நிமிடம் செலவளிச்சா, அது நூறு நிமிஷம் செலவளிச்ச மாதிரி'). தேவர்களின் பகல், நமக்குப் பல யுகங்கள் என்பார்களே, தேவர்கள் உண்மையோ பொய்யோ, நேரத்தின் சார்புத்தன்மை உண்மையாய்ப்போனது. இதை இயற்பியலில் ஒரு பிரசித்தி பெற்ற உதாரணம் மூலம் விளங்கப்படுத்துவார்கள். அதை 'இரட்டையர் புதிர்' (வுறIN Pயசயனழஒ) என்று கூறுவார்கள். அதாவது இரண்டு இரட்டையர்கள், நாம் மாற்றான் திரைப்பட சூர்யாக்களை எடுத்துக்கொள்வோம், அவர்களில் ஒருவரை பூமியில் விட்டு விட்டு மற்றவர் மிகவும் வேகமாக (ஒளியின் வேகத்தோடு ஒப்பிடத்தக்க கணிசமானளவு வேகம்) விண்கலத்தில் சில ஆண்டுகள் மட்டும் பயணித்து விட்டு பூமிக்கு மீண்டும் திரும்பினால், பயணித்த சூர்யா இன்னும் 'சிக்ஸ் பாக்' உடன் இளமையாகவே இருப்பார். ஆனால் பூமியில் பல ஆண்டுகள் கடந்து போய் , பூமியிலிருந்த சூர்யா 'வாரணம் ஆயிரம்'

திரைப்பட வயதான தாத்தாச் சூர்யாவாக மாறிவிடுவார். (ஆனால் அப்பொழுதும் கௌதம் மேனன் அதே கதையை வைத்து படம் எடுத்துக்கொண்டிருப்பார்...னயனனலலலலல ஹ...).

புகழ் ஐன்ஸ்டீனைச் சூழ்ந்தது. பல பல்கலைக்கழகங்கள் வேலை வழங்கி வரவேற்றன. ஆனால் தன் கண்டுபிடிப்பின் வெற்றியின் களிப்பைவிட அதனுள் மறைந்திருக்கும் ஒரு பிரச்சினை ஐன்ஸ்டீனின் கண்களில் நிதம் உலாவியது, நிழலாய், கனவாய், நீங்காத பேயாய். ஏனென்றால் இந்தக் கோட்பாடு அது வரை அறியப்பட்ட புவியீர்ப்புக் கோட்பாடுடன் முரண்பட்டது.

(தொடரும்)

**விஞ்ஞானி கார்லோ ரோவெள்ளியின் "சேவின் பிரீஎப் லெஸன்ஸ் ஒன் பிசிக்ஸ்"ஐத் தழுவி எழுதப்பட்டது.**




# மட்டக்களப்புக் கைதிகளின் மன உளைச்சல்

**12.9.2001**அன்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டேன். அங்கிருந்த நீதிபதி ராமச்சந்திரன் அவர்கள் வவுனியாவுக்கு மாற்றாலாகிவிட்டதால் அன்று நீதிமன்றம் இயங்கவில்லை. அடுத்த மாதம் 16ஆம் திகதிக்கு மறுபடியும் வழக்குக்குத் தவணைபோட்டார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு கைதி எந்தவித பிரயோசனமும் இன்றிச் சிறைக்குள் கிடக்க வேண்டியிருக்கும். அதற்கு நீதித்துறை எந்த மாற்று வழிகளையும் முன்வைப்பதில்லை. அல்லது கைதிகளைக் கண்டுகொள்வதேயில்லை. எதிர்பாராரத எந்த விடயத்தையும் மனம் எதிர்கொள்வதற்குச் சங்கடப்படுவது மனிதனின் பொதுவான இயல்பு. நல்லது நடந்தால் அது அதிஷ்டம். இல்லாவிட்டால் துரதிஷ்டம்.

**11.9.2001**இல் அமெரிக்க நகரான நியூயோர்க்கில் அல்கொய்தா ஆயுத இயக்கம் பயணிகள் வானூர்தி மூலம் இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்த செய்தியைத் தொலைக்காட்சியில் பார்த்தேன். முக்கியமான ஒரு தாக்குதலின்போது நான் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்தேன் என்பதை இப்போது நினைத்தாலும் ஞாபகம் வரும்.

**19.9.2001**இல் மட்டக்களப்புச் சிறையில் கைதிகள் தினம் கொண்டாடப்பட்டது. அன்று கைதிகளுக்கு ஒரு முட்டையும் ஒரு இனிப்பும் கிடைத்தது. எல்லாம் இறுகிப்போன சூழலில்தான் வாழ்க்கையின் அருமை தெரியும். மட்டக்களப்புச் சிறைச்சாலை தமிழ்ச் சூழலில் இருப்பதால் மனதுக்கு இதமாக இருப்பினும் பொழுதுபோவது மிகவும் கஸ்ரமாக இருக்கும். பூசாவில் நிறைய நண்பர்கள் இருப்பதாலும் நீண்ட நாள்களை அங்கு கழித்துவிட்டதாலும் அங்கு ஒரு நாளைக் கழிப்பது ஒப்பீட்டளவில் சுகம்போல தெரிகிறது. சிறைச்சாலைகளில் கைதிகளின் மனநிலை எப்போதும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை என்பதற்கு இத்தகைய துன்பங்களே காரணமாகும். ஒரு கோணத்தில் சரியெனப்படுவது இன்னொரு கோணத்தில் அதற்கு நேர் எதிரானதாக ஆகிவிடும். அதைவிட மட்டக்களப்புக் கைதிகள் பலரின் வீடுகள் சிறைச்சாலைக்கு அருகில் இருந்தன. அவ்வாறு குடும்பத்தவர் அருகில் இருக்கும்போது தங்கள் சொந்த ஊரி லேயே சிறைக்குள் முடங்கிக் கிடப்பது வேறுபட்ட மன உளைச் சலைக் கொடுக்கும்.

> **தனது மூத்தபிள்ளை சைக்கிள் சில்லுக்குள் காலைக் குடுத்துக் காயத்துடன் இருக்கிறாள் என்றும் சின்னப் பிள்ளைக்கும் மனைவிக்கும் காய்ச்சல் என்றும் அறிந்து எனது அறையிலிருந்த துரை என்ற கைதி குலுங்கிக் குலுங்கி அழுதான்**

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள் ஒரு சிறிய பிள்ளையார் கோவில் உண்டு. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அங்கு விசேட பூசை நடக்கும். பொங்கல், கடலை, பஞ்சாமிர்தம், அவல் எல்லாம் தருவார்கள். எமது பிரிவிலுள்ள சில கைதிகள் காலையிலேயே கோவிலுக்குப்போய் வேலைகளைச் செய்வார்கள். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சாதாரண சிறைக்கைதிகளைவிட அரசியல் கைதிகளுக்கு மரியாதை கொடுத்தே நடந்துகொள்வார்கள். சில சந்தர்ப்பங்களில் கைதிகள் அவற்றைத் துஷ்பிரயோகம் செய்து கீழ்நிலைக்குப் போவதுண்டு.

மட்டக்களப்புச் சிறையில் அரசியல் கைதிகளாக இருந்த பெரும்பாலானவர்கள் கிராம வாசிகள். அவர்களது குடும்பங்களும் இவர்கள் சிறைக்கு வந்தபின் நாளாந்த வருமானமில்லாது நொந்துபோயிருந்தன. சிலர் தம்மிடமிருந்த ஆடு, மாடு, காணி, நகை என்பற்றை விற்றுச் சிறையில் எடுப்போரை வெளியே எடுக்க முயன்று சட்டத்தரணி களை மேலும் பணக்காரர்களாக மாற்றி மேலும் கஸ்ர நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன. ஒருவன் தான் ஓடித்திரிந்த ஊரில் உள்ள சிறைக்குள் கைதியாக இருப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத துன் பம். வெளியே தெரியும் எல்லாமே அவனுக்கு மனக் கவலையை ஏற்படுத்தும். அவர்களது ஊர் ஆலயங்களில் எழுப்பப்படும் மணியோசை, காற்று, பருவ கால மாற்றம் என வெளியே அனுபவித்த எல்லாவற்றையும் உள்ளேயிருந்து யோசிக்கும்போது இரட்டிப்புத் துன்பமாக இருக்கும்.

**15.9.2001**இல் தனது மூத்தபிள்ளை சைக்கிள் சில்லுக்குள் காலைக் குடுத்துக் காயத்துடன் இருக்கிறாள் என்றும் சின்னப் பிள்ளைக்கும் மனைவிக்கும் காய்ச்சல் என்றும் அறிந்து எனது அறையிலிருந்த துரை என்ற கைதி குலுங்கிக் குலுங்கி அழுதான். நானும் ஐயரும் அவனுக்கு ஆறுதல் கூறினோம். அவ்வளவுதான் எங்களால் செய்ய முடிந்தது. துரை என்ற கைதிக்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றியோ வேறு பொது விடயங்கள் பற்றியோ தெளிவில்லாதவன். படிப்புக் குறைவாக இருந்தாலும் நல்ல உழைப்பாளி. அவனது வழக்கு விடயம் பற்றி விசாரித்த இன்னோர் கைதி, "உனது மூத்த பெண் பிள்ளைக்கு எத்தனை வயது?" என்று கேட்க, "7வயது" என்றான் துரை. "எப்படியும் பிள்ளையின் சாமத்தியச் சடங்குக்கு வீட்டுக்குப் போய்விடலாம் கவலைப்படாமல் இரு" என்றான். இப்படி ஒரு இடி விழுந்த செய்தியில் கவலைப்படாமல் இரு என்றால் அவனால் எப்படி முடியும்.

பொதுவாக மட்டக்களப்புச் சிறையில் உள்ள பிரச்சினை அங்கு வழக்குக்காக அல்லது உறவினர்களைப் பார்க்கவெனக் களுத்துறை, பூசா சிறைகளில் இருந்து வருபவர்கள்தான் அதிகம். மாலை 5.30 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் கீழேயுள்ள அறைகள் பூட்டப்படுவதால் மேல்மாடியிலுள்ள தொலைக்காட்சியின் ஊடாகச் செய்திகள் எதனையும் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. பத்திரிகைகளும் தினமும் கிடைப்பதில்லை. பத்திரிகைகளை எடுக்கப் பிரதம ஜெயிலர், நலன்புரி அதிகாரி, களஞ்சியப் பொறுப்பாளர் என அலையவேண்டியிருக்கும். விசிற்றில் (கைதிகளைப் பார்வையிட வருபவர்கள்) கைதிகள் வாங்கும் பத்திரிகைகள் சினிமாவை முக்கியப்படுத்துவதாக அமையும். சிறையில் சிறிய வானொலிப்பெட்டி ஒன்று இருந்தது. அதில் பாட்டுக் கேட்பது மட்டும் கைதிகள் அக்கறையாக இருப்பார்கள். நாட்டு நடப்புகளை அறிவது சிரமம். சிறைச்சாலைக்கு அருகில் துப்பாக்கிச் சமர் ஒன்று நடந்தால்கூட அந்தச் செய்தி பிந்தித்தான் எமக்குக் கிடைக்கும். (தொடரும்)



**சாய்ராம்**

# “பொலிரெக்னிக்” எனும் கொடூரக் கொலைக்களம்

உலகம் பல ரகங்களில் படுகொலைச் சம்பவங்களுக்கு முகம் கொடுத்திருக்கிறது. காலத்துக்குக் காலம் படுகொலைகள் பல வகைகளில் அரங்கேறிவருகின்றன. அந்த வகையில் இடம் பெறுவதுதான் இந்தப் பொலிரெக்னிக் படுகொலை. மிகப் பழமை யானதும்கூட. 1989ஆம் ஆண்டு மார்கழி மாதம் கனடாவின் கியூ பெக்கிலுள்ள மாண்ட்ரீல் பல்கலைக்கழகத்தில் நடந்த படுகொலைச் சம்பவத்தைத்தான் பொலிரெக்னிக் படுகொலை என்று விவரிக்கி றார்கள். இந்தச் சம்பவம் பெண்களைக் கொல்லும் நோக்கில் குறி வைத்துச் செய்யப்பட்டது. 15பேரைக் காவுகொண்ட இந்தச் சம்பவம் அப்போதைய கனடாவைக் உலுப்பிப் போட்டது. இப்போதும் இதை நினைத்தால் கனடா மக்கள் கவலைகொள்ளவே செய்கிறார்கள். 13 பேரைத் துப்பாக்கியால் சுட்டும் ஒருவரைக் கத்தியால் குத்தியும் கொன்ற குற்றவாளி இறுதியில் தன்னையும் சுட்டு உயிர்மாய்த்துக் கொண்டார். ஆக,மொத்தம் 15 உயிர்களைக் காவுகொண்ட சம்பவம் அது. இதை விட 10 பெண்களும் 4ஆண்களும் காயங்களுக்குள்ளாகி உயிர்தப்பினர்.

**அந்தப் பல்கலைக் கழகத்தின் இயந்திரப் பொறியியல் வகுப்புக்குள் துப்பாக்கியுடன் புகுந்த அவர் அங்கிருந்த ஆண், பெண் மாணவர்களை வகுப்பறையின் ஒருபக்கத்துக்குச் செல்லுமாறு மிரட்டல் விடுத்து ஆண்களை வெளியேறும்படி சொல்லிவிட்டு அந்த வகுப்பிலிருந்த ஒன்பது பெண்களையும் துப்பாக்கியால் சராமாரியாகச் சுட்டுத் தள்ளினார்**




### அரங்கேறிய கொடூரம்

1989ஆண்டு மார்கழி மாதம் ஆறாம் திகதியன்று இந்தச் சம்பவம் நடந்தது. மார்க் லோபின் எக்கோல் என்கிற இளைஞர்தான் அந்தத் துப்பாக்கிதாரி. அந்தப் பல் கலைக் கழகத்தின் இயந்திரப் பொறியியல் வகுப்புக்குள் துப்பாக்கி யுடன் புகுந்த அவர் அங்கிருந்த ஆண், பெண் மாணவர்களை வகுப் பறையின் ஒருபக்கத்துக்குச் செல்லுமாறு மிரட்டல் விடுத்து ஆண்களை வெளியேறும்படி சொல் லிவிட்டு அந்த வகுப்பிலிருந்த ஒன் பது பெண்களையும் துப்பாக்கியால் சராமாரியாகச் சுட்டுத் தள்ளினார். அதற்கு முன்னர் தான் பெண்ணி யத்தை எதிர்த்துப் போராடுபவர் என்று கூறிவிட்டே அந்தச் சூட்டை நிகழ்த்தினார். இந்தத் துப்பாக்கிச் சூட்டால் அந்தப் பல்கலைக்கழக வழாகமே அதிர்ந்துபோனது. நடு நடுங்கிக்கொண்டே அங்கிருந்த வர்கள் திக்குத் தெரியாமல் சிதறி ஓடினர். இந்த நிலையில், துப்பாக் கியுடன் மார்க் லோபின் அந்தப் பல்கலைக்கழகத்தின் பிற பகுதிகளி லும் பெண்களைத் தேடிக் குறிவைத் துச் சுடத்தொடங்கினார். சிற்றுண் டிச்சாலை அருகிலிருந்த மற்றொரு வகுப்பறை என்று தேடித் தேடிய லைந்த அவரது கண்ணில் பட்ட மேலும் ஒரு பெண்ணையும் சில ஆண்களையும் சுட்டுத்தள்ளினார். இவரது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கிட்டத்தட்ட 20நிமிடங்கள் வரை நீடித்தது.





### பெண்களே குறி

துப்பாக்கியுடன் வகுப்பு ஒன்றுக்குள் நுழைந்த ஆயுதாரி அங்கு விளக்கக் காட்சியை வழங்கிக் கொண்டிருந்த மாணவரை அணுகி அதை நிறுத்தும் படி சொல்லி வகுப்பறை யின் ஒரு பக்கத்துக்கு அனைவரையும் ஒதுங்கு மாறு சொல்ல, அதை நகைச்சுவையாகவே அங்கிருந்தவர்கள் எண்ணினர். அவர் துப்பாக்கியால் சுடும் வரைதான் அந்த எண்ணம் நீடித்தது. அங்கிருந்த ஐம்பது ஆண்களையும் வெளியேறும்படி கட்டளையிட்ட பின் னர் அங்கிருந்த பெண்களிடம் 'நான் பெண்ணியத்தை எதிர்த்துப் போராடுகிறேன்' என்று சொல்ல, அதில் ஒரு மாணவி 'பாருங்கள், நாங்கள் பொறியியல் படிக்கும் பெண்கள் மட்டுமே, நாங்கள் ஆண்களுக்கு எதிராக இருக்கிறோம் என்று சொல்லி தெருவில் அணிவகுக்க இல்லை. சாதாரண வாழ்க்கை நடத்தும் மாணவர்கள்'' என்றார், 'நீங்கள் பெண்கள், நீங்கள் பொறியியலாளர்களாகப் போகிறீர்கள். நீங்கள் அனைவரும் பெண்ணியவாதிகள். நான் பெண்ணியவாதிகளை வெறுக்கிறேன்.' என்று சொல்லிக்கொண்ட ஆயுததாரி அந்தப் பெண்களை இடமிருந்து வலமாகத் துப்பாக்கியால் சுட்டார். பின்னர், இரண்டாவது மாடி நடைபாதைப் பகுதியில் மூன்று மாணவர்களை நோக்கிச் சுட்டதில் அவர்கள் காயங்களுக் குள்ளாகினர், மற்றொரு அறைக்குள் நுழைவதற்கு முன்பு அவர் ஒரு மாணவியைச் சுட முற்பட துப்பாக்கி சுடத் தவறியது, பின்னர் தான் விட்டுச் சென்ற அறைக்குத் திரும்பிய துப்பாக்கிதாரி உள்ளிருந்து கதவைப் பூட்டிக் கொண்டிருந்தவர்களை நோக்கிச் சுட்டார். பின்னர் நடைபாதையில் நகர்ந்து, மற்றவர்களைச் சுட்டார். பின் னர் அவர் பூட்டிய கதவின் ஜன்னல் வழியாகப் பிறிதொரு பெண்ணைச் சுட்டுக் கொன்றார்.

சிற்றுண்டிச்சாலைக்குச் செல்ல அங்கு நூறு பேர் வரை கூடியிருந்தனர். சமையலறைகளுக்கு அருகில் நின்றிருந்த ஒரு பெண்ணை அவர் சுட்டார். சிற்றுண்டிச்சாலையின் முடிவில் இருந்த சேமிப்புப் பகுதிக்குள் நுழைந்து அங்கு மறைந்திருந்த மேலும் இரண்டு பெண்களைச் சுட்டுக் கொன்றார். மேசைகளின் கீழ் ஒளிந்துகொண்டவர்களையும் குறிவைத்துச் சுட்டார். இந்த நிலையில், காயமடைந்த பெண் ஒருத்தி உதவி கோரத் தனது

(10ம் பக்கம் பார்க்க)

**18ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட உலகு கைத்தொழிற் புரட்சியின் வேகத்தால் ஆனது. அந்தத் தொழிற்புரட்சி மனிதர்களின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டது. இயந்திரங்களுக்கு ஈடாக மனிதர்கள் இயங்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது**




# மகிழ்ச்சியைத் தேடி...




1981 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் நசான் பிரான்சிஸ்கோ நகரில் தனது மனைவி, பிள்ளையுடன் வாடகை வீட்டில் வாழ்க்கை நடத்துகிறார் கிறிஸ்ட் கார்ணர். ''சேல்ஸ் மென்'' என்று ஆங்கிலத்தில் சுட்டப்படுகிற விற்பனையாளர் அவர். தன்னிடமிருந்த சேமிப்புப் பணத்தில் ஒருவகை மருத்துவ உபகரணங்களைத் தொகையாகக் கொள்வனவு செய்கிறார். மருத்துவர்கள் மற்றும் ஆய்வுகூடத் தரப்பினருக்கு அவற்றை அன்றாடம் கொண்டு சென்று ஒன்றிரண்டாக விற்பதே அவருடைய வேலை. அந்த இயந்திரம் ஆற்றும் வேலை, அதன் நன்மைகள், அதை இயக்கவேண்டிய முறை ஆகியவற்றை விவரித்து, வாங்குபவர்கIளைக் கவர்ந்து அவற்றை விற்றாக வேண்டும் என்கிற குடும்பச் சுமையும், இறுக்கமும் அவருக்கு. ஆனால், ஒரு நாளில் ஒன்றை விற்பதற்குப் படாத பாடு படவேண்டியிருக்கிறது. அவற்றை விற்றால்தான் குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியும். வீட்டு வாடகை, மகனுடைய கற்றல் செலவு, அவனுக்குரிய உபகரணங்களை வாங்கிக் கொடுப்பது, தரிப்பிடப் பணம் (கார் பார்க்கிங் ரிக்கெற்) இதுபோக அரசுக்கு வரிசெலுத்துவது எனப் பல சுமைகளும் அவரது கழுத்தை நெரிக்கின்றன. மறுபக்கம் அவருடைய மனைவியும் வேலைக்குப்



போகிறாள். அவளது வருமானத்தில்தான் உணவு, மற்றும் உடுதுணிகள் வாங்குவது உட்படச் சில காரியங்கள் நடக்கின்றன. ஆனாலும் அந்த நகரிலுள்ள மனிதர்களின் வாழ்க்கைப்போக்கு துரித கதியில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கக் கிறிஸ்ட் கார்ணரின் நிலை அததற்கு மாறாகக் கீழிறங்கிக் கொண்டேயிருக்கிறது.

இந்தநிலையில், பெரு நிறுவனம் ஒன்றில் புதிய வேலை ஒன் றைத் தேடிச் செல்கிறார் கிறிஸ்ட் கார்ணர். அவருடைய இந்த இக் கட்டான பொருளாதார நெருக்கடிக்குள் அந்த நிறுவனம் 6மாதப் பயிற்சிக் காலம் என்றும் அந்தக் காலப்பகுதிக்குள் ஊதியம் வழங்கப் படாது என்றும் நிபந்தனையுடன் வேலை வழங்குகிறது. அந்த வேலையைக் கைவிடக்கூடாது என்ற நிலையில் விற் பனையாளராக மருத்துவ உபகரணங்களையும் விற்றுக் கொண்டு, தனது மகனையும் பராமரித்துக்கொண்டு அந்த வேலையைத் தொடர்கிறார். வாடகை செலுத்தா ததால் தங்கியிருந்த இடத்திலிருந்து அகற்றப்படுகிறார். பின்னர் நீளும் படத்தின் பெரும்பகுதி முழுதும் வீடில்லாமல் தெருக்கள், பஸ்கள், தொடருந்து நிலையங்கள், பராமரிப்பு இல்லங்கள், தங்குமிடங்கள், கழிப்பறைகள் எனத் தினம் ஒரிடத்தில் உறங்கி எழுந்து வாழ்க்கையைக் கழிக்கிறார். அந்த ஆறுமாத ஊதியமற்ற பயிற்சிக்காலத்தையும் கவனித்து, போட்டியாளர்கள் மிகுந்த அதில் முதலிடம் பெற்றுச் சில வருடங்கள் வரை தன்னைச் சூழ்ந்திருந்த ஏழ்மையை எதிர்கொண்டு ஆனால் துவண்டு போகாமல் முயற்சிகளை அதிகமாக்கி அதிலிருந்து மீண்டு செல்வந்தராகிறார். அவருடைய வாழ்க்கைப் போராட்டங்களே திரையில் காண்பிக்கப்படுகின்றன. பிற்காலத்தில் நிறுவனம் ஒன்றைத் தொடங்கிப் பெருவர்த்தகராகிச் செல்வந்தராகியமை வசனங்களில் குறிப்பிடப்படுகிறது.

18ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட உலகு கைத்தொழிற் புரட்சியின் வேகத்தால் ஆனது. அந்தத் தொழிற்புரட்சி மனிதர்களின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டது. இயந்திரங்களுக்கு ஈடாக மனிதர்கள் இயங்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. வாழ்க்கை நடத்துவதாயின் வேலையும் அதன்மூலமான வருமானமும் கட்டாயம் என்றாகியது. இதனால் மனிதர்கள் இயந்திரங்களாகி இயங்க வேண்டியிருந்தது. அவ்வாறே மனிதர்களை இயங்க வைத்தும் அதன்போக்கில் வாழ்க்கையை வேகமெடுக்கச் செய்தும் பந்தயக் குதிரைகIளைப்போல மனிதர்களுக்கு உந்துதலளிக்கும் நிகழ்ச்சி நிரல்களை வகுத்துச் செயற்படத் தொடங்கின அரசுகள். அதுவே இன்றுவரை தொடர்கிறது.

**மகிழ்ச்சியைத்...**

இத்தகைய வாழ்வில் மகிழ்ச்சியளிப்பதாகப் பணமே இருந்தது. அந்தப் பணத்தை - மகிழ்ச்சியைத் தேடிய போராட்டத்தில் வெற்றி கண்ட ஒருவரின் உண்மைக் கதைதான் இந்தத் திரைப்படம். கறுப்பின அமெரிக்கரான கிறிஸ்ட் கார்ணர் என்ப வரின் கதை. 2006ஆம் ஆண்டில் இதைத் திரைப்படமாக்கியிருக்கிறார் கேப்ரியல் முசினோ. வில் ஸ்மித் இதில் கிறிஸ்ட் கார்ணராகவும், அவ ருடை மகன் ஜேடன் ஸ்மித் இதில் மகனாகவும் நடித்திருக்கிறார்கள்.





வீடில்லாமல் தனது மகனுடன் கிட்டத்தட்ட ஒரு வருடமாக அல்லாடுகின்ற கிறிஸ்ட் கார்ணரின் வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற கதை என்று இதைச் சுருக்கமாகச் சொல்லலாம். பின்னர் அவர் முன்னேற்றமடைந்தார் என்று குறிப்பிடப்படுகிறது. தந்தையும் மகனும் அலைந்து திரியும் காட்சிகள் மனதில் பரிதவிப்பை ஏற்படுத்துகின்றன. தொட ருந்து நிலையக் கழிப்பறைக்குள் ஒருதடவை அவர்கள் இரவைக் கழிக்கவேண்டிய சூழலில் தந்தை மகனுக்குச் சொல்லிக்கொள்ளும் கதையும் அதைச் சாட்டாக வைத்துக் கழிப்பறைக்குள் தங்கி அந்தப் பிஞ்சு உள்ளத்துக்குத் தனது அவல நிலை யைக் காட்டாமல் மறைக்கின்ற உத்தியும் மனதை ஈர்க்கிறது. அதைவிட மருத்துவ உபகரணமும் கையுமாகத் தெருத் தெருவாக அலையும் காட்சி கள், சில சமயங்களில் அவற்றை யாரிடமாவது பறிகொடுப்பது - மீட்பது எனவரும் வாழக்கைப் போராட்டத்தைக் காட்டும் காட்சிகளும் ஸ்சுமித் தின் நடிப்பால் கவர்கின்றன. மருத்தவ உபகரணம் ஒரு கையில் மகன் மறு கையில் எனப் பின்னர் அதைவிட அவருக்குப் பாரம் அதிகரிக்கிறது. இரவு முழுதும் காவல் நிலையத்தில் சிறைவைக் கப்பட்டு நேர்முகத்தேர்வுக்குக் காவல் நிலையத்தி லிருந்தே நேராக ஓடிச் சென்று தீந்தை பூசிய அழுக்காடையுடன் சென்று முகங்கொடுக்கும் விதம், ஆனாலும் அவர் தெரிவாகும் காட்சி, மக னைக் கவனிக்கவேண்டிய காரணத்தால் மற்ற வர்களைக் காட்டிலும் குறைந்தளவு நேரமே வேலைசெய்ய முடிகின்ற இக்கட்டு எனத் தொடராக வரும் காட்சிகள் அவரது வாழ்க்கைப் போராட்டத்தைப் பார்க்கின்ற பார்வையாளர்கள் மனதைக் கனக்க வைக்கின்றன. மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறுகிய நேரமே நிறுவனத்தில் இருக்கின்ற அவர், மிக அதிகமான நேரம் வேலைசெய்வது (நீர் அருந்தும் நேரத்தையும் அதனால் சிறுநீர் கழிக்கும் நேரத்தையும்கூட வீணடிக்காமல் இருக்கிறார் என்பதன் மூலம் தன்னை உருக்கி அவர் கஸ்ரப்பட்டமையைக் கதைசொல்லியாக அவர் மூலமே சொல்கிறார்கள்) எனப் படம் முழுதும் அவரது அர்ப்பணிப்பு மற்றும் விடா முயற்சி எனப் பலவும் காட்டப்படு கின்றன. இவற்றால்தான் போட்டி மிகுந்த இந்த உலகில் அவரால் தடம் பதிக்க முடிந்தது என்ப தைப் பிற்பட்ட வாக்கியங்கள் உணர்த்துகின்றன. அரசுகளின் விதிமுறைகள், சட்ட திட்டங்கள், நவீன வர்த்தக உலகின் பாய்ச்சல் எனத் தடை தாண்டலாக மனிதர்கள் மீது விழுந்துள்ள சுமைகளையும் மனித வாழக்கை மகிழ்ச்சியைத் தேடி (பணம்) பயணிப்பதும்கூட இதன் உள்ளே மறைந்திருக்கின்ற சங்கதிகள்தான்.

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## பிரச்சினைக்குரிய வீடுகளைப் பொய் சொல்லி விற்பது

■ கற்பகம் - கொக்குவில் ■

பொதுவாகத் தமிழர்கள் வீடு கட்டும்போது நிலையம் பார்த்து, அத்திபாரத்துக்குள் ஐந்து சந்தி மண் போட்டு, யானையின் காலடி பட்ட மண், மற்றும் பல பொருள்க ளைப் போட்டுச் சுபநேரத்தில் நாட்கள் நாட்டுகின்றனர். இதைவிட வாஸ்து, வடக்கு வாசல் என்றெல்லாம் பல விடயங்களைப் பார்த்த பின்னரே வீட்டைக் கட்டுகின்றனர். ஆனாலும் இந்த வீடுகள் கால கதியில் தமக்குப் பொருந்தவில்லை என்பதை உணர்ந்து விடுகின்றனர். பல காணிகள் ஏற்கனவே சுடலைகளாக இருந்த பகுதிகளாகவும் மழை காலத்தில் அதிகம் தண்ணீர் தேங்கும் பகுதிகளாகவும் பேய் அல்லது ஆவிகளின் நடமாட்டம் உள்ளதாகவும் அறிந்தபின் அது பற்றி வெளியே யாருக்கும் கூறாது அந்த வீட்டை நல்ல விலைக்கு விற்பதற்குத் திட்டமிடுகின்றனர்.

பொருத்தம் இல்லை என்பதை வெளியில் கூறாது தொழில், பிள்ளைகளின் படிப்பு, மருத்துவத் தேவை எனப் பல காரணங்கள் கூறி வீட்டை விட்டு வெளியேறி விடுகின்றனர். அந்தக் கட்டத்திலேயே மற்றவர்களுக்குப் பொய் சொல்லித் தரமான வீடு எனவும் தங்களுக்கு அந்த வீட்டை விட்டுப்போவது மிகவும் மனக் கஸ்ரமாக இருக்கிறது என்றும் நடிக்கின்றனர்.

ஒரு குடும்பம் தாம் விரும்பிக் கட்டிய வீட்டை ஏன் விற்கிறார்கள் என்பதை அந்த வீட்டை வாங்குபவர்கள் சிந்திக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஓரிடத்தில் இருந்த பெரிய வீடொன்று கிழக்கு வாசல் வீடு என்பதால் தமக்குப் பொருந்தமில்லை என்று விற்க முயன்றபோது இன்னொருவர் அந்த வீட்டை வாங்கத் தயாராக இருந்துள்ளார். தமக்கு வாசல் எல்லாம் பிரச்சினையில்லை வீடுதான் வேண்டும் என வீட்டுக்காரர் சொன்ன விலைக்கே வாங்கியிருக்கிறார்கள். சிறிது காலத்திலேயே அந்த வீட்டை வேறு யாருக்கோ விற்று விட்டார்கள். சில பொருத்தமற்ற வீPடுகள் இவ்வாறு பல தடவைகள் ஏமாற்றிப் பலருக்கு விற்கப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளில் குடியேறு பவர்கள் அந்த வீட்டில் வாழமுடியாத நிலை ஏற்படும்போது அதுபற்றி வெளியே சொல்லாது இன்னொருவருக்கு விற்றுவிடுகின்ற சுத்துமாத்து மிக நீண்ட காலமாகவே நம்மவர் மத்தியில் இருந்து வருகிறது.



உடுவில் பகுதியில் இவ் வாறான ஒரு பொருத்தமற்ற வீட்டில் யார் குடியேறினாலும் விரைவிலேயே அவர்களின் குடும்பத்தில் யாராவது இறந்து விடுகின்றனர். பெரும்பாலும் இவ்வாறு வீட்டுச் சொந்தக்காரருக்குப் பொருத்தமற்ற வீடுகள் வாட கைக்காவது கைமாறுவ தைக் காணலாம். உடுவில் பகுதி வீட்டில் இருந்த ஒரு வர் மரணித்துவிட அந்தச் செத்தவீட்டுக்குச் சென்ற போது அயல் வீட்டுக்காரர் என்னுடன் கதைத்தபோது, "இவை ஏன் இந்த வீட்டை வாடகைக்கு எடுத்தினமோ தெரியாது. இந்த வீட்டில் குடியேறுகின்ற யாரும் நல்லா இருந்ததில்லை" என்றார்.

பொருத்தமில்லாத இந்த வீடுகளை ஏமாற்றி விற்பதன் மூலம் மேலும் பலர் துன்பப்படுகின்ற நிலை ஏற்படுகிறது. இது நம்மவரிடம் காணப்படுகிற மிகப் பெரிய குறைபாடாகும். இவ்வாறான கைவிடப்பட்ட வீடுகள் அல்லது உரிமையாளர்களைக் குடியெழுப்பிய வீடுகளை வாங்க நினைப்பவர்கள் விழிப்புடன் இருந்தால் மாத்தி ரமே இதிலிருந்து தப்ப முடியும். சிலர் இவ்வாறான பிரச்சினைக்குரிய வீடுகளை மலிவு விலைக்கு வாங்கிப் பொலிவு விலைக்கு விற்றுவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

**பொலிரெக்னிக்...**

கத்தியால் குத்தி அவளைக் கொன்றார். பின்னர் முடிவாக அவர் தனது தொப்பியைக் கழற்றி, தனது கோட்டைத் தனது துப்பாக்கி யால் சுற்றி, ' ஓ ஷிட் ' என்று கூச்சலிட்ட பின்னர் தன்னைத்தானே சுட்டுக் கொண் டார்.

**விளையாட்டு வேட்டை**

இந்தப் படுகொலையானது பெண்க ளுக்கு எதிரான போக்குடைய நபரால் செய்யப்பட்ட பெண் எதிர்ப்புத் தாக்குதல் என்றே வகைப்படுத்தப்படுகிறது இந்தப் படுகொலையின் ஆண்டு நினைவுகூரல் களைப் பெண்களுக்கு எதிரான வன்முறைக் கான தேசிய நினைவு தினமாகக் கனடா கடைப்பிடிக்கிறது. ஆயுதத்தை முறை கேடாகப் பயன்படுத்திய ஒரு பெரிய பைத் தியக்காரனின் செயல் இது என்று ஆயுததாரி மீது தமது ஆத்திரத்தையும் கோபத்தையும் கொட்டித் தீர்க்கிறார்கள் கனேடியர்கள். மான்ட்ரியலில் உள்ள செக்மேட் விளை யாட்டுக் கடை ஒன்றில்தான் சம்பவத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் குறித்த துப்பாக் கியை ஆயுததாரி வாங்கியுள்ளார். சிறிய விளையாட்டு வேட்டை ஒன்றுக்கு அதைப் பயன்படுத்தப் போவதாகத் தெரிவித்தே அதை அவர் வாங்கியிருக்கிறார். இந்த சம்பவத்துக்குப் பின்னர் கனடா அரசு துப் பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை அதிகப்படுத்தியது.

மைல் 15

# தொலைதூர காதல்

கலியுக பித்தன்

ஆபிஸ் போன சங்கரன், தன்னுடைய கபினில் போய் அமர்ந்தான். அவன் சிந்தனைகளை எல்லாம் ரவீனா ஆக்கிரமித்துக் கொண்டி ருந்தாள். நீண்ட காலத்திற்குப் பின் ஏற்பட்ட ரவீனாவுடனான தொடர் புகளால் அவன் வாழ்க்கை வசந்தமாகப் பிரகாசிக்க தொடங்கியிருந்தது. ஆனால் பத்து நாட்களுக்குள்ளேயே ஏற்பட்ட காரணம் அறியா திடீர் இடைவெளியில் சங்கரன் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தான். அவளுடன் கழித்த நாட்களின் அழகை எண்ணியவாறே நிகழ் காலத்தை கழித்து கொண்டி ருந்தான்.

*** *** ***

'எப்பிடி இருக்கிறா சங்கரா?' காத்திருக்கும் நேரத்தில் சம்பிர தாயத் திற்காகக் கேட்காமல் வலு கரிசனையோடு கேட்டாள்.

'என்னடி திடீரென்டு இப்பிடி கேக்கிறா?' கேலி கலந்த சிரிப்போடு கேட் டான்.

'சிரிக்காமச் சொல்லுடா. எப்பிடி இருக்கா?'

'நான் நல்லா இருக்கன்டி.'

'ஆமா ஆமா நல்லா தான் இருக்கா..' அசடு வழிந்தாள்.

'நல்லா என்டா எப்பிடி' வலு புழு கத்தோடு கேட்டான்.

'நல்லா என்டா நல்லா தான்' நாக்கை கொடுப்புப் பற்களுக்குள் செருகிச் சிரித்தவாறே சொன்னாள்.

'அதான் எப்பிடி என்டு சொல் லன்..' இருக்கையில் கொஞ்சம் முன்னே நகர்ந்தவாறு கேட்டான்.



பெண்ணின் வாயினால் தன் னைப் பற்றிய அபிப்பிராயங்களைக் கேட்டறிவ தில் ஓர் ஆணுக்கு அலாதிப் பிரியம் இருப்பது இயற்கை. பெண்களுக்கும் அதுவே தான்.

'நல்லா என்டா எப்பிடி?????' நாடி யில் ஆட்காட்டி விரலை வைத்தவாறே யோசனை செய்வதாகக் காட்டிக் கொண்டு, 'எப்பிடிச் சொல்லுறதென்டு தெரியேல டா' கீழ் இதழை வெளி நோக்கி வளைத்தாள்.

'எப்பிடியாச்சும் சொல்லேன்..' அவனின் அசைவுகளில் ஆர்வம் வெளிப்பட்டது.

'நல்லா என்டா நல்லா... அழகா... ஹான்ட்சமா.. க்யூட்டா... ஸ்மார்ட்டா... சொவ்றடா...' சொல்லி விட்டு வெட்கப்பட்டு முகத்தை மறைத்து கொண்டாள்.

அவள் வெட்கப்படும் அழகை இரசிக்கவா இல்லை, தன்னைப் பற்றி இவ்வளவு உயர்வாகக் கூறிவிட்டாள் எனப் பெருமைப்படுவதா என்பதில் அவனுக்குள் ஏகப்பட்ட குழப்பங்கள்.

வானம் முழுதையும் மூடி நகரும் மேகக் கூட்டங்களின் நடுவே, இடைக்கிட எட்டிப் பூமியைப் பார்த்து மின்னுகின்ற நட்சத்திரங்களை போல், மூடிய கைவிரல்களின் இடைவெளியிலே அவள் கண்களும் மிளிர்ந்து கொண்டிருந்தன.

அவளும் கண்களை மூடித் திறந்து, அவனை இரசித்து கொண்டி ருக்க, அவனும் அவள் அழகிலே அவன் இலயித்து போயிருக்க அங்கே ஒரு காதலுக்கான ஒத்திகை அரங்கேறி கணப்பொழுதில் ஓய்ந்தது.

தன் வெட்கத்துக்குக் கஷ்டப்பட்டுக் கடிவாளம் இட்டுக் கொண் டாள்.

'உண்மையாத் தான் சொன்னியோ?' திடீரென அங்கே ஏற்பட்டி ருந்த ஏற்றங்களை சரி செய்து நிலமையைச் சமன் செய்வதற்காக ஒரு கேள்வியை எழுப்பினான்.

'அப்பிடியே வைச்சுக்கோவன் ' சிறு தலை அசைப்போடு சொன் னாள்.

*** *** ***

'சங்கரா... சங்கரா...'

ரவீனாவுடனான கடந்தகால நினைவுகளில் இலயித்து இருந்தவனுக்கு மேகலாவின் அழைப்பு கேட்கவில்லை.

சத்தமாக அழைத்தும் செவிசாய்க்காத சங்கரன் மீது மேகலாவிற்குச் சிறு எரிச்சல் எட்டிப் பார்த்தது. ஆனால் அவன் மீது அவள் கொண்டிருந்த அளவு கடந்த மரியாதை அவளைக் கோபப்படும் அளவுக்குக் கொண்டு போகவில்லை.

சங்கரனின் அருகே சென்று அவனின் தோள்களில் மெதுவாகத் தட்டினாள்.

'என்ன சேருக்குப் பகலிலையே கனவோ?'

'ச்சாச்சா... இன்டைக்கு என்னவோ தலை இடியா இருக்கு.. அதான் ' சுதாகரித்தவாறே சமாளித்தான்.

'இன்டைக்குத் தானோ, இல்லையென்டா இப்ப கொஞ்ச நாளாவோ?' பொடி வைத்துக் கேட்டாள்.

'விளங்கேல' குரலில் சிறு தடுமாற்றத்தோடு கேட்டான்.

'இல்லை ஐயாவுக்குத் தலையிடி இன்டைக்குத் தானோ, இல்லையென்டா ரவீனா இங்கால் பக்கம் வராத நாளில இருந்தோ என்டு கேட்டன் ' சொல்லி விட்டுச் சிரித்தாள்.

'இவளுக்கு இது எப்பிடி தெரியும். நானொன்டும் இதைப் பற்றிச் சொல்லேலையே.. ஒருவேளை ரவீனா ஏதாச்சும் உளறி இருப்பாளோ?' தனக்குள் தானே கேட்டு கொண்டிருந்தான்.

'என்ன சைலண்ட் ஆயிட்டீங்கள்? இதெல்லாம் எனக்கு எப்பிடி தெரியுமென்டோ யோசிக்கிறீங்கள் '

'ஓம்' எனும் பாணியில் மேகலாவைப் பார்த் தான்.

'ஹா.. ஹா.. அதெல்லாம் சொல்ல ஏலாது ' குறும்புச் சிரிப் பொன்றை உதிர்த்தாள்.

சங்கரனுக்கு அவ்வ ளவு பரிச்சயமில்லாத ஒரு பெண் மேகலா. அதனால் மேற் கொண்டு எதனையும் வற்பு றுத்திக் கேட்டு அவளிடளி ருந்து பெற்று கொள்ள அவன் மனம் ஏவவில்லை. அப்படிக் கேட்டாலும் தான் அவளி டம் ஜொல்லு விடுவதாக அமையும் என்பதாலும் அமைதியாக இருந்தான்.

'என்ன கடுமையான பேச்சு வார்த்தை நடக்குது போல' சங்கரனின் பின்னால் ஒரு குரல் வந்தது.

அந்த குரலை சங்கரனால் நன்றாகவே அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

'மேகலா, தேவையில் லாத கதையளோட இங்க யாரும் வர வேண்டாம்..' கோபத்தை உமிழ்ந்தான்.

'எங்களுக்குள்ள ஆயிரம் இருக்கும், அவை அவேன்ர வேலையைப் பாத்து கொண்டு போகட்டும்' வார்த்தைகளை அடுத் தடுத்து கொட்டினான்.

'என்னடா சங்கரா.. உன்னை ஒரு சொப்டான ஆளென்டு பாத்தா இவ்வளவு டர்ஃப்பான ஆளா இருக்கியே ' ஆச்சரியத்தோடு கேட்டாள்.

'அவர் சொப்ட் தான், என்ன கோபம் வந்திச்சென்டா இப்பிடு ஆயிடுவாரு..' சொல்லி கொண்டே சங்கரனின் முன்பாக வந்து, அவனின் முகத்தையே உற்று பார்த்தாள் ரவீனா.

சங்கரன் முகத்தைத் திருப்பிக் கொண்டு,

'என்ட கபினில இவைக்கு என்ன வேலை? இங்க இருந்து அவங்கள போக சொல்லுங்க மேகலா..' என்றான்.

'எனக்கு எதுக்குபா தேவையில்லாத வேலை.. நானே இங்க இருந்து போயிடுறன்.. நீங்களாச்சு அவங்களாச்சு ' மெல்லிய சிரிப்போடு அங்கிருந்து விலகிப் போனாள் மேகலா.

'என்ன அவ்வளவு கோவமோ என்னில..?'

அவனிடமிருந்து பதில் இல்லை.

'கோவப்படுறதுல நியாயம் இருக்கு தான். உனக்குச் சொல்லி இருக்கோனும். இவ்வளவு காலத்துல போனிலையாவது கதைச்சு இருக்கோனும். ம்ம்... என்ட பிழை தான்..' மென்மையான குரலில் சோகம் தொற்றியிருக்கக் கூறினாள்.

சாதாரணமாகப் பழகியிருந்தால் இந்த வார்த்தைகளே சமாதானம் ஆவதற்குப் போதுமாயிருந்திருக்கும். ஆனால் சங்கரனும் ரவீனாவும் சாதாரணமாகப் பழகவில்லை.

'இஞ்சே உன்ட மண்ணாங்கட்டி ரீஸனெல்லாம்...' அவன் கூறி




ரஞ்சித் - பொரளை

# தினமும் பேயைக் காணும் தொழில்

எனது மாமனார் ஒருவர் எப்போதும் போதையில் இருப்பார். அவருடன் பழகுபவர்களுக்கு அது புதினமாக இருக்காது. ஏனெனில் அவர் பார்க்கும் தொழில் பேயுடன் தொடர்புபட்டது. அனேகமாக இரவில்தான் அவருக்கு வேலை. கொழும்பிலுள்ள மிகப் பெரிய சுடலையான பொரளை கனத்தைச் சுடலையில் காவல் காரராகப் பணிபுரிபவர் அவர். அவர் எப்போது தொழிலுக்குப் போவார், எப்போது திரும்பி வருவார் என்பதுகூட எங்களுக்குத் தெரிவதில்லை. அவரைப் பொறுத்தவரை வீட்டில் கிடப்பதும் சுடலையில் கிடப்பதும் ஒன்றுதான்.

அவர்கூறிய சில திகிலான விடயங்களை இங்கு குறிப்பிடுகிறேன். எல்லா இரவுகளிலும் அசாதாரண சம்பவங்கள் நடக்கும். காற்று வீசுவதில் வித்தியாசம் இருக்கும். நறுமணங்கள் வீசுவது, கரும் புகை உருவங்கள் நகர்ந்து செல்வது, வித்தியாசம் வித்தியாசமான அவலச் சத்தங்கள் கேட்பது, அது வந்த திசையை நோக்கிப் போய்ப் பார்த்தால் அங்கு எதுவும் இருக்காது.

பொதுவாகப் பௌர்ணமி நாள்களில் நள்ளிரவுக்குப் பின் வெள்ளை ஆடை அணிந்த பெண் உருவங்கள் உலாவுவதையும் அவை கதைக்கும் குரல்களையும் கேட்டிருக்கிறேன். ஆனால், அந்த உருவங்கள் காவலர்களுக்குத் தொல்லை கொடுப்பதில்லை. ஒரு நாள் விடியப்புறம் 3மணியிருக்கும், எனக்குத் தண்ணீர் விடாய்த்ததால் குடிப்பதற்காகக் குழாய் நீர் இருக்கும் இடத்துக்குச் சென்றேன். தண்ணீர் குடிப்பதற்கு முன்னர் பத்தடி தூரத்தில் ஒரு பெண் நிற்பதைக் கண்டேன். வீதி விளக்கொளியில் அந்த உருவம் தெரிந்தது. வெளியே இருந்து யாரும் உள்ளே வரமுடியாதவாறு கம்பி வலையடித்த வேலியும் பெரிய கதவுகளும் அடைக்கப்பட்டிருந்தன. அந்த உருவம் தன்னை நோக்கி வருமாறு கூறியது. நான் நிற்கும் இடத்துக்கு வருமாறு கூறியதும் அந்த உருவம் மறைந்து விட்டது.




இவ்வாறான தொழில் ரீதியான பயம் தினமும் இருப்பதால் தான் எந்த நேரமும் வெறியில் இருக்கிறேன். பொரளைச் சுடலையில் ஏராளமான நாக பாம்புகள் உள்ளன. அவைகூடப் பேய்களின் வடிவமாக இருக்கலாம் என்று நம்புகிறேன். ஆனால், அந்தப் பாம்புகள் யாரையும் தீண்டியதாக இல்லை.

ஒரு தடவை கொத்துரொட்டி, மீன் பொரியல் என மணம் குணமாகச் சாப்பாட்டுப் பொதி ஒன்றை இரவுச் சாப்பாட்டுக்காகக் கொண்டு போய் வைத்து விட்டு பின்னர் அந்தப் பொதியை அவிழ்த்தபோது அதில் எந்தவிதமான மணம் குணமும் இருக்கவில்லை. அதேவேளை எவ்வித சுவையும் இல்லாமலிருந்தது. இன்னொரு தடவை பெரிய நாய் ஒன்று சுடலைக்கு நடுவில் நிற்பதைக் கண்டேன். அதைத் துரத்தியபோது மொதுவாக நடந்துபோய் உயரமான வேலிக்கு மேலால் குதித்து விழுந்ததைக் கண்டேன். ஆனால், அது பாய்ந்த இடத்தில் வீதி விளக்குகள் நல்ல வெளிச்சமாக இருந்தபோதிலும் நாயைக் காணவில்லை.

பொரளைச் சுடலையில் எப்போதுமே அமானுஷ்ய விடயங்கள் நடந்துகொண்டேயிருக்கும். ஆரம்பத்தில் இவற்றைக் காணும்போது பயமாக இருந்தது. பின்னர் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். நான் மது அருந்திச் சுயநினைவில்லாது இருந்தால்தான் இந்தத் தொழிலைத் தொடரமுடியும் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரை சுடலையில் பேய் நடமாட்டம் உள்ளது என்பதே உண்மை.

---

## தொலைதூர...

முடிப்பதற்குள் அவனின் இதழை தன் இதழால் கவ்வி கொண்டாள் ரவீனா. சங்கரனின் கபினில் திடீரென ஏற்பட்ட நிசப்தம் எல்லோரையும் அவனுடைய கபின் பக்கமாகத் திருப்பியது.

அங்கே முத்தப்பரிமாற்றம் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தோர் மத்தியில் சிறுசிறு பேச்சுக்களும், மெலிதான சிரிப்பொலிகளும் தோன்றித் தோன்றி மறைந்தன.

சுற்றி ஆட்கள் இருப்பது தெரிந்திருந்தாலும் முத்தக் காதல் பரிமாற்றம் நின்றபாடாயில்லை. ரவீனா மீதிருந்த கோபங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்து கொண்டிருந்தது அவளது உமிழ்நீர்.

அவளிடமிருந்து விலகிக் கொள்ள விரும்பாத சங்கரன், அவள் இதழை ருசித்து, முத்தத்தை இரசித்து கொண்டிருந்தான். இரண்டு நிமிட யுத்தம் ஓய்ந்து இருவரும் விலகிக் கொள்ள, அங்கே வெட்க ரேகைகள் படரத் தொடங்கிற்று.

பயணம் தொடரும்....

# பிளக்விடோவில் கலக்கும் புளோரன்ஸ் பஞ்ச்



நடாஷா என்று பெயர்சூட்டப்பட்டு மார்வெல் கலையகத் திரையில் கலக்கிவருபவர் ஸ்கார்லெட் ஜொஹான்ஸன். அவரைச் சுப்பர் ஹீரோவாகக் கொண்ட பிளக்விடோ திரைப்படம் அண்மையில் வெளியாகியிருந்தது. நடாஷா என்கிற பிளக் விடோவாக ஸ்கார்லெட் ஜொஹான்ஸன் இதுவரை வந்த மார்வெல் படங்களில் எப்படித் தன்னுடைய பங்கைச் சிறப்பாகச் செய்திருந்தாரோ அதையே இந்தப் படத்திலும் செய்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் பின்னியெடுக்கிறார். இதில் கவனிக்க வைக்கின்ற மற்றொரு பாத்திரம் எலினாவாக வரும் புளோரன்ஸ் பஜ்ச். நடாஷாவின் தங்கைதான் எலினா. அக்கா, தங்கை இருவரும் ஒன்றாகச் சேர்ந்துதான் வில்லனை எதிர்த்துச் சண்டையிட்டு வெல்வதுதான் படத்தின் கதை. சண்டைக் காட்சிகளில் ஸ்கார்லெட் ஜொஹான்ஸனுக்கு ஈடாகக் கலக்குகின்ற எலினா என்கிற புளோரன்ஸ் பஜ்ச் பார்வையாளர்களைக் கவனிக்க வைக்கிறார். அத்தோடு கவர்ச்சியும் காட்டுகிறார்.

1996ஆம் ஆண்டில் பிறந்து 2014 ஆம் ஆண்டில் தி ஃபாலிங் என்ற நாடகத் திரைப்படத்தில் அறிமுகமாகிப் பிரிட்டிஷ் சுயாதீன திரைப்பட விருதை வென்றவர்தான் இந்தப் புளோரன்ஸ் பஜ்ச். 2016ஆம் ஆண்டில் சுயாதீன நாடகமான லேடி மேக்பெத்தில் இளம் மணப்பெண்ணாக முன்னணிப் பாத்திரமேற்று நடித்தவர். பிறகும் பல நாடகப் பாணியிலான திரைப்படங்களில் நடித்துப் பிரபலமடைந்தார். 2019 இல் மல்யுத்த வீரர் பைஜின் வாழ்க்கை வரலாற்று விளையாட்டு திரைப்படமான ஃபைட்டிங் வித் மை ஃபேமிலியிலும் திகில் திரைப்படமான மிட்சோமரிலும், லிட்டில் வுமன் என்ற நாடகத் திரைப்படத்திலும் நடித்து ஒஸ்கார் விருது மற்றும் பாஃப்டா விருதுக்கான பரிந்துரைகளைப் பெற்றார். இவ்வாறாகச் சிறுவயதிலிருந்தே திரையில் அதிகம் கலக்கி வந்த அவர் இப்போது பிளக்விடோவிலும் தன்னைக் கவனிக்க வைத்திருக்கிறார்.

# தமிழினத்தை அழிக்கும் கொரோனா

இலங்கையில் வாழ்கின்ற தமிழரின் இனப்பரம்பல் மிக நீண்ட காலமாகவே குறைவடைந்து வருகிறது. பாரம்பரிய நிலங்களில்கூடக் குடியேறுவதற்கு அல்லது அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்கு மக்கள் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள எச்ச சொச்ச மக்களும் தமது பாரம்பரிய நிலம் பற்றிய பேணுதல் இல்லாமல் வாழ்கின்றனர். 1983ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் நாட்டை விட்டுவெளியேறிய மக்கள், இனக்கலவரங்களாலும், போராலும் அழிந்த மக்கள், தமிழருக்கு இடையிலான உட்கட்சி மோதல்களால் கொல்லப்பட்டவர்கள், சுனாமிப் பேரழிவுப் பாதிப்பு என ஓர் இனம் எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் அழிய வாய்ப்புள்ளதோ அத்தனை வாய்ப்புகளையும் தமிழர்கள் உள்வாங்கியுள்ளனர். இத்தகையதொரு இனப்பெருக்கப் பின்னடைவைச் சந்தித்துள்ள இனம் கொவிட் 19 தடுப்பு வழிமுறைகளை உரியவாறு பின்பற்றாததாலும் அதிகம்பேரை இழக்கும் நிலைக்குள் போய்விழுந்திருக்கிறது. இது அதிகம் வடக்குக் கிழக்கில்தான் ஏற்பட்டுள்ளது.


■ ரவீந்திரன்

### சரியான வழிநடத்தல் இல்லை

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களை வழிநடத்தத் தகுந்த அரசியல் தலைவர்களோ (தமக்குள் முரண்பட்டு மக்களையும் பிளவுபடுத்தி வைத்திருக்கின்றனர்), சமூகத் தலைவர்களோ (சாதி முரண்பாடுகள்), மதத் தலைவர்களோ (மத முரண்பாடுகள் அதிகமுள் ளன) இல்லாத காரணத்தால் மக்களை வழிப் படுடத்த முடியாத நிலை காணப்படுகிறது. மக்க ளைப் பொறுத்தவரை சுயமாகச் சிந்தித்துச் செயற்படுகின்ற வல்லமை இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு சமூகம் கவனிக்கப்படாது விட்டால் மது, போதைப் பொருள் பாவனை, விபச்சாரம், இளம் குடும்பப் பிரிவுகள், உயிர்மாய்ப்புகள், கொலை, கொள்ளை, வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம், போதைக் கடத்தல், தமது நிலத்திலுள்ள கனிய வளங்களைத் தோண்டி விற்றல், அதிகாரிகள் மத்தியில் நிலவும் ஊழல், ஒருவரில் ஒருவர் நம்பிக்கையின்மை, கல்வி கற்க மறுப்பது போன்ற வேண்டத்தகாத விடயங்கள் மலிந்துபோகும். இவை எல்லாம் ஒரு சமூகத்தின் அழிவுக்கான அடையாளங்களே. இவை தமிழர் சமூதாயத்தில் நிறையவே இருக்கின்றன. இவ்வாறான சூழலில் தமிழர்களை வேறு யாரும் திட்டமிட்டு அழிக்கவேண்டிய தேவை இருக்காது. பொறுப்பற்ற வகையில் தாமாகவே அழிந்துவிடுவார்கள்.

### கொரோனா விழிப்புணர்வின்மை

பொதுவாகத் தமிழர்களுக்குத் தம்மை மேதாவிகளாக நினைக்கும் தன்மையுண்டு. ஆனால், அந்த மேதாவித்தனத்துக்குரிய உள்ளடக்கம் அவர்களிடம் உண்டா என்று பார்த்தால் இல்லை என்பதாகவே முடிவு வரும். அண்மையில் மின்னல் தாக்கி இறந்த அச்சுவேலியைச் சேர்ந்த சாரதியின் இறப்பு வீட்டில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டதும் ஒரு தனிநபர் வறுமைப்பட்ட மக்களுக்கு தலா 2ஆயிரம்ரூபா வழங்க முற்பட்டபோது கொவிட் தடுப்பு வழிமுறைகளை மீறிச் செயற்பட்டதையும் காண முடிந்திருந்தது.

### சமய நிறுவனங்கள் மக்களைக் கட்டுப்படுத்தவில்லை

இந்து சமயத் தலைவர்கள் பிராமணர்கள் கோவில் நிர்வாகிகள் எனப் பலரும் தமது வருமானத்துக்காகப் பொலிஸாருக்கும், பொது சௌக்கிய அதிகாரிகளுக்கும் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அதிகாலை 3மணிக்கு தேரிழுத்துவிட்டு தமக்கு எதுவும் தெரியாததுபோல இருந்துவிடப் பின்னர் சமூக வலைத்தளங்களில் "தமிழேன்டா" என்ற பாணியில் படம்போட்டுப் பிடிபட்டுத் தனிமமப்படுத்தப்பட்ட சம்பவங்கள் பல நடந்துள்ளன.

ஒரு கோவில் திருவிழ விடயத்தில் ஐயர் உட்பட தரம்கத்தா சபையையும் காவல்துறையினர் அழைத்து கொரோனா நடைமுறைகளை மீறி ஏன் திருவிழா நடத்தினீர்கள், நாட்டு நிலமை தெரியாதா? என்று கேட்டபோது "எனக்குக் கடன்தொல்லை இருந்ததால் திருவிழாவை நடத்திவிட் டால் பணம் கிடைக்கும் என நினைத் தேன்" என்று கொரோனாப் பரவல் பற்றிக் கருத்தில் எடுக்காமலே ஐயர் பதில் கூறியிருக்கிறார். அப்போதுதான் தர்மகத்தா சபையினர் தாம் ஏமாற்றப் பட்தை அறிந்திருக்கிறார்கள்.

### இரகசியத் திருமணங்கள்

திருமண நிகழ்வுகளை 17.8.2021 பின்னர் நடத்த முடியாது என்று அரசு கடும் உத்தரவு பிறப்பித்த பின்னரும் ஏற்கனவே திட்டமிட்ட திருமணங்கள் இரகசியமாக நடந்தேறின. ஐயர் இரகசியமாக அந்த இடத்துக்குச் சென்று 10 நிமிடத் துக்குள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு வழமையாக வாங்கும் அரிசி, தேங்காய், பொருள்கள் எதையும் வாங்காது (அதை வீதியால் கொண்டு போனால் பொலிஸ், இராணுவம், பொதுச் சௌக் கிய பரிசோதகர்கள் பிடித்துவிடுடவார்கள் என்ற பயம்) அதற்கும் சேர்த் துப் பணம் வாங்கிக் கொண்டு தலைமறைவாகியிருக்கின்றனர். இந்த இரகசியத் திருமணங்களையும் சமூக வலை தளங்கள் காட்டிக் கொடுத்திருக்கின்றன.

"திருமணம் சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படுகிறது" என்பதற்கு மாறாகத் திருமணம் முடித்தவுடன் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போய்ச்சேரவே இந்த இரகசியத் திருமணங்கள் வழிவகுத்துள்ளன.

30வருட கால போரில் வடக்குக் கிழக்கில் அவ்வப்போது ஒவ்வொரு பகுதியாகப் பாதிக்கப்பட்டது இறுதிப்போர் கூட வன்னிக்குள் முடக்கப்பட்டதால் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இறக்கவில்லை. ஆனால் கொரோனா வடக்குக் கிழக்கு எங்கும் ஒரே நேரத்தில் வயது வித்தி யாசமின்றியும் சாதி சமய வேறுபாடின்றியும் மக்கள் இறந்துபேர்கும் நிலையை

**பொதுவாகத் தமிழர்களுக்குத் தம்மை மேதாவிகளாக நினைக்கும் தன்மையுண்டு. ஆனால், அந்த மேதாவித்தனத்துக்குரிய உள்ளடக்கம் அவர்களிடம் உண்டா என்று பார்த்தால் இல்லை என்பதாகவே முடிவு வரும்**



## ஒற்றுன்னி

*அவர்கள் தம்மை எவ்வாறு உணர்ந்தார்கள்*
*நடுச்சாமத்தில்*
*குசினியில்*
*திடீர் என வீட்டுக்காரர்கள்*
*மின்விளக்கை தூண்டினால்*
*திடுக்கிட்டு*
*செய்வதறியாது நிற்கும்*
*கரப்பான் பூச்சிகளைப் போலவா*
*இல்லை*
*திரைச் சீலையை விலக்கும் பொழுது*
*இடுக்கிலிருந்து*
*வெடுக்கெனப் பறக்கும்*
*வண்ணத்து பூச்சிகளைப் போலவா*
*தாம் செய்தது சரியெனவா தவறெனவா*
*தோட்டத்தில் இருந்த மலரைப்*
*பறித்து வந்து*
*ஒருவன்*
*சுவாமி அறையில் வைத்தான்*
*தனக்கு சொந்தமான தேனை*
*குடிக்க வந்த*
*வண்ணாத்துப் பூச்சியை*
*திருடன் என்பதா*
*இல்லை இறைவனைக்*
*கஞ்சன் என்பதா*
*திராட்சைகளின் உயிரைத்திருடி*
*கண்ணாடிப் போத்தல்களில் விற்கும் உலகில்*
*இந்த நியாயத்தை எதிர்பார்க்க முடியுமா ?*

**-ரதிதேவி, மானிப்பாய்**


(PARASITE திரைப்படக்காட்சியைத் தழுவியது)

## தமிழினத்தை...

ஏற்படுத்தியிருக் கிறது. தமிழர் தமது ஊர்களுக்குக் கொரோனா வைரஸைக் காவிச் செல்கிறார்கள் அதற்கான நன்றிக் கடனாக அவர்களின் சடலத்தைக் கூடக் காவ முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு வீட்டுக்குள் முடங்குவது மட்டுமே ஒரே வழியாகும்.

அதுமட்டுமல்லாது காய்ச்சல் இருந்தால்கூட உடனடியாக மருத்துவமனைக்குச் செல்லுங்கள் என்று யாழ்ப்பாண மருத்துவமைனப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். கடந்த காலத்தில் தடுப்பூ10சி போட்டுக்கொள்ளாமல் கைமருந்துகளைச் செய்துகொண்டிருந்தவர்களே அதிகம்பேர் இந்த நோயால் இறந்திருக்கின்றனர். பாரம்பரிய நம்பிக்கைகள் பல குடும்பங்களை இல்லாது செய்திருக்கின்றன.

தமிழ்மக்கள் கொரோனா விடயத்தில் தமிழ் அரசியல்தலைவர்களை முன்னுதாராணமாக எடுத்திருந்தால்கூட அதிகம்பேர் தொற்றிலிருந்து தப்பியிருக்கமுடியும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மருத்துவ ஆலோசனைகளை உரியவாறு பின்பற்றிக் கொழும்பிலும் யாழிலும் ஏனைய இடங்களிலும் கொரோனா தொற்றில்லாமலே இதுவிடயத்தில் தூரநோக்குடன் செயற்பட்டு வருகின்றனர். மக்கள் இந்தவிடயத்தில் மாத்திரம் இந்தத் தலைவர்களை முன்னுதாரணமாக எடுத்துத் தம்மைத் தாமே தனிமப்படுத்த முடியும். இதன்மூலம் தமிழ் இனத்தை ஓரளவுக்காவது கொடிய நோயின் பாதிப்பிலிருந்து காப்பாற்ற முடியும்.









# எள்ளுருண்டை

இளைத்தவனுக்கு எள்ளு கொழுத்தவனுக்குக் கொள்ளு என்பது நம்மூர் பழமொழிகளில் ஒன்று. இதன் அர்த்தம் என்னவெனில் தேகம் இளைத்தவனுக்கு எள்ளு மிகுந்த ஊட்டம் அளிக்கும் என்பதுவே. எள்ளு என்பது ஆரோக்கியமும் ஊட்டமும் நிறைந்த நல்லதொரு தானிய வகை. நவதானியங்களுள் ஒன்றும்கூட. இதனால்தான் நம்மவர்கள் அதிலிருந்து பெறப்படுகின்ற எள்ளெண்ணையைப் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்வது அதிகம். அதிலிருக்கின்ற ஏராளம் நன்மைகள் காரணமாக அதை நல்ல எண்ணை (நல்லெண்ணை) என்றழைக்கும் வழக்கமும் உண்டாயிற்று. நல்லெண்ணை, எள்ளுருண்டை, எள்ளுப்பாகு என அந்த எள்ளில் இருந்து பெறப்படுகிற பொருள்கள் - பண்டங்கள் பலவுள்ளன. அதில் எள்ளுப்பாகு பற்றி நாம் இந்தப் பகுதியில் ஏற்கனவே பார்த்துவிட்டோம். இந்த முறை எள்ளுருண்டை எப்படிச் செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்**

கால் கிலோ அளவான - எள்ளு, அதே அளவு சீனி, நல்லெண்ணெய் சிறிதளவு.

**எப்படிச் செய்வது?**

எள்ளைச் சுத்தம் செய்து எடுத்து ஒரு சட்டியில் இட்டு நன்கு வத்துக்கொள்ளுங்கள். வறுத்துக் கொண்டிருக்கும்போதே சிறிது சிறிதாகச் சீனியையும் தூவி வறுத்துக்கொள்ளுங்கள். சீனிப்பாணி குழைவான பதத்துக்கு வந்ததும் சூடாறுவதற்கு முன்னர் அதை உருண்டைகளாக்கிக் கொள்ளுங்கள். இதைவிட எள்ளுப்பாகுவைத் தனியாக வறுத்து இறக்கிப் பின்னர் சீனியைப் பாணியாகக் காய்ச்சி, சிறிதளவு நல்லெண்ணை விட்டு, அதற்குள் வறுத்த எள்ளைச் சேர்த்துக் குழைத்து உருண்டைகாளாகவும் பிடித்துக்கொள்ளலாம். எப்படியிருப்பினும் கடைகளில் வாங்கியுண்கின்ற இனிப்புகளைக் காட்டிலும் குழந்தைகளுக்கு நலம் சேர்க்கக் கூடிய இனிப்பு உருண்டை இது. போத்தல் ஒன்றுக்குள் போட்டு வைத்து அவ்வப்போது எடுத்து உண்ணமுடியும்.

# அதுவும் நிஜம்தான்!

*பூமி சுழலுது*
*அதுபாட்டுக்கு*
*சாமி இருக்குது*
*தன்பாட்டுக்கு.*
*காற்றிலை கலந்தது*
*நோயொன்று நேற்றோடு*
*நூற்று கணக்கிலை*
*வெற்றுடல் ஆக்கி*
*பழிதீர்க்குது மனிதன்*
*ஆணவம் தீர்ந்திட*
*ஆமானுஷம் ஒன்று.*

*நம்ம நாட்டிலை*
*பணவீக்கமோ பெறுமாத*
*பெண்ணின் வயிறாட்டம்*
*விலைவாசியோ?எவரெஸ்ட்*
*மலை தாண்டிய உச்சம்*
*வளர்ந்து வரும் நாட்டின்*
*ஊர்வாசி நிலையோ? அவர்*
*உயிர்தான் மிச்சம் அதுவும்*
*கோரோனாவின் பசிக்கு*
*போகுமோ என்ற அச்சம்.*

*வருடங்கள் கழியுது*
*வெறும் இலக்கங்களாய்*
*வாழ்க்கை நகருது*
*தினம் முடக்கங்களாய்*
*முககவச வாழ்க்கை*
*முடிவின்றி தொடர்ந்து...*
*வறுமை ஒருபுறம் வதைக்க*
*வெறுமை மனதை மிதிக்க*
*வாழ்தலிலும் சாதல்மேலென*
*நொந்து சனம்சாக அதையும்*
*கொரோனா சாவில்*
*சேர்ப்பதொன்றும் பெரும்*
*தப்பில்லையே அதுவும் நிஜம்தானே.!*

■ தாரன்யா சிவதாஸ் ■







சந்திரஹாசன் சுஜந்தினி

# “நான் ஒரு பெண்”

ஆண், பெண் ஆகிய முதன்மைப் பாலினங்களைக் கொண்ட மனிதர்கள் மத்தியில் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பாலினத்தைப் பலரும் வித்தியாசமானதாகவே பார்க்கிறார்கள். பொதுவாகவே பாலினம் என்றால் பெரும் சமூகத்தைப் பொறுத்தவரை ஆண் அல்லது பெண் என்று பொருள் கொள்வதாக இருக்கிறது. எமது நாட்டில் அதிகம் இல்லாவிட்டாலும் அயல்நாடான இந்தியா மற்றும் ஆசிய, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பரவலாக அதிகரித்து வருகிற பேசுபொருளாக இருப்பது திருநங்கைகள் என்கிற பாலினத்தவர் விவகாரம். திருநங்கைகள் என்கிற மரியாதைக்குரிய பெயர்கூட அயல்நாட்டில் அண்மைக்காலங்களில் சூட்டப்பட்ட ஒன்றுதான். அதுவரை காலமும் அந்தப் பாலினத்தவர்களைக் குறித்து நின்ற பெயரை இழிவுடன் உச்சரிக்கும் வழக்கமே பெருஞ் சமூகத்தில் ஊறிக் கிடந்தது. ஆண், பெண்களைப்போல இப்போதெல்லாம் இந்தத் திருநங்கைகளும் சகல விடயங்களிலும் கால் பதிக்கத் தொடங்கிவிட்டதாலும்கூட அவர்களுக்குரிய சமூக மதிப்புக் கூடியிருக்கிறது. விளையாட்டு, வர்த்தகம், கல்வி, விஞ்ஞான தொழில்நுட்பத்துறை, சினிமா எனத் திருநங்கைகளின் வளர்ச்





சிப்படி உயர்ந்து நின்று பலரது பார்வையையும் அவர்களது பக்கம் திருப்பியிருக்கிறது. இதுவும் சமூகத்தில் அவர்களுக்குரிய மதிப்பை மீட்டுக்கொடுத்த காரணங்களில் ஒன்றாகியுள்ளது.

**பாலினமும் தனிமனித உரிமையும்**

வெளிப்படையாக ஆடை, அணிகலன்களிலும் உள, உடல் ரீதியாக உணர்ச்சிகள், நடத்தைகளாலும் தீர்மானிக்கப்படுகின்ற இந்தப் பாலினத்தவர் விவகாரம் தனிமனித உரிமைக்கு முக்கியமளித்து அவர்களை அவர்கள் விருப்பப்பட்ட பாலினமாக வாழ்வதற்கு வித்திடுகிறது. இதன்படி பிறப்பால் ஒருவர் பிறந்த பாலினத்துடன் தொடர்பு கொள்ளாமல் பாலியல், பாலினம் தொடர்பான உள்ளக்குழப்பத்தை வெல்ல முடிகிறது. இதுவரை காலமும் சமூகத்தில் அதுபெரிய குழப்பமாகவே இருந்தாலும் அந்தக் குழப்பத்திலிருந்து மீண்டு அதை வெற்றிகொண்டவர்கள் முன்மாதிரிகளாகப் பேசப்படும் சம்பவங்களும் நடந்தேறி வருகின்றன. அந்த முன்மாதிரிகளில் ஒருவர்தான் மீரா சிங்கானிய ரெஹானி.

**மீரா சிங்கானிய ரெஹானி**

21 வயதான மீரா சிங்கானியா ரெஹானி இந்தியாவின் கொல்கொத்தாவைப் பூர்வீகமாகக் கொண்டவர். டெல்லி பல்கலைக் கழகத்தில் சமூகவியல் கற்கை நெறியைத் தொடர்கிறார். அதற்கு முன்னர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் படித்தவர். 2019ஆம் ஆண்டில்தான் அவர் பெண்ணாகத் தனது பாலினத்தை மாற்றிக் கொண்டார். அதுவரை ஆணாக இருந்த திருநங்கையான அவர் 2019இல்தான் தனது தாயிடம், "நான் ஆண் அல்ல, பெண்" என்று கூறினார். அன்றுமுதல் பெண்ணாகியும் விட்டார். பெண்ணாக மாறுவதற்கு முதல் அவர் எடுத்த முக்கிய நடவடிக்கை சட்டபூர்வமாகத் தன்னை மாற்றிக்கொள்வது. காரணம் இங்கு பாலினத்தைத் தீர்மானிப்பதாகச் சட்டமே இருக்கிறது. ஆனால், இது தனிமனிதர்களின் உடல், உளம் சார்ந்த விடயம் என்பதே யதார்த்தமும் உண்மையும். ஊரில் பெற்றோர்களுடன் கூட்டுக் குடும்பமாக இருந்தபோது தனது பாலினம் பற்றி வெளிப்படையாகப் பேச முடியாத சூழலில் படிப்பு நிமித்தம் டெல்லிக்குச் சென்ற பின்னர் தன்னை அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தினார். ஆனாலும் தனி வீடு, வாழ்வதற்குப் பணம், பாதுகாப்பு, அன்பு செலுத்தத் தேவையான மனிதர்கள் என்பவற்றுக்கு ஏங்குபவராகவே அவர் இருக்கிறார். பாலின அடையாளத்துக்காகப் போராடும் எவருக்கும் விருப்புக்குரிய வாழ்க்கையை வழங்குவதற்கான கட்டமைப்பை நாம் உருவாக்க வேண்டும் என்கிறார் அவர்.

> **வெளிப்படையாக ஆடை, அணிகலன்களிலும் உள, உடல் ரீதியாக உணர்ச்சிகள், நடத்தைகளாலும் தீர்மானிக்கப்படுகின்ற இந்தப் பாலினத்தவர் விவகாரம் தனிமனித உரிமைக்கு முக்கியமளித்து அவர்களை அவர்கள் விருப்பப்பட்ட பாலினமாக வாழ்வதற்கு வித்திடுகிறது**

# எமையறிதல்

23

ஐயங்கொண்டான் சுவாமிகள்

ஏதிர்பார்ப்பு நிறைவடைவதை இன்பமென்றும் எதிர் பார்த்ததை அடைய முடியாவிட்டால் துன்பமென்றும் குழப்பி வைத்திருக்கிறோம். எதிர்பார்த்தது அப்படியே கிடைப்பதில் ஏதும் சுகமிருக்கிறதா? அப்படிக் கிடைத்தது நிலைக்குமா? என்கின்ற ஏக்கம் உருவாகுவதில்லையா? ஒன்று எதிர்பார்த்தபடி கிடைத்ததை இன்பமென்று கூறித் தொடர்ந்து அனுபவிக்க முடிகிறதா? நிலையாமை பற்றியும் பேசுகிறோம் நிலைக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம் என்பதிலிருந்து எமது சிந்னை எப்படியிருக்கிறது?

எதுவுமே நிரந்தரமானதில்லை என்பதைச் சொல்லிக் கொண்டே நிலையறுந்த கானல் நோக்கி விரைகிறோம் என்பது ஒரு புறமாயிருக்க அதற்குத் துணைக்கழைக்கிறோமே? அங்கேதான் இருக்கிறது எமது சிந்தனையாற்றலின் வெற்றிடம்.

நாம் நிலைக்குமென நம்பி நிகழ்காலத்து அனுபவிப்புகளை உதறிவிட்டு ஓடுகிற ஓட்டத்துக்குக் கடவுளைப் பிராயச் சித் தம், சோதிடம் செய்வினை-சூனியம் என ஒன்று மிச்சமில்லா மல் அத்தனையையுமல்லவா துணைக்கிழுக்கிறோம். நல்வாழ்வு என்றொன்று இருக்குமாயின் அது இவ்வளவு சிக்கலுக்குள் வந்து மாட்டுப்பட்டுக்கொண்டு உங்களோடேயே இருந்துவிடுமா?

நல்வாழ்வு என்கிற பேராசைக்கு முடிவிடம் எது என்றா வது சிந்தித்திருக்கிறோமா? ஆசைகள் தான் வாழ்வைச் சீர்குலைக்கின்றன. அதிலும் எம்மிடமிருப்பது பேராசை. அது ஆசுவாசமாகச் சாப்பிட, உறங்க எம்மை அனுமதிக்கு மென்று நம்புவது அறிவுள்ளவன் செயலாக இருக்கமுடியுமா? ஆசைகள் குறைவாயிருந்தபோது தேவைகளும் குறை வாகவே இருந்தன. தேவைகள் அளவோடு இருக்கையில் பிரச்சினைகள் குறைவாகவே இருந்தன. மறுவழமாக எண்ணினால் பிரச்சினைகளுக்கான மூலமே தேவைகள்தான்.

தேவைகள் என்பது தேவையற்றவையா? உயிர் வாழ அத்தியாவசியமாக உள்ளவை போக மீதமானவற்றைத் தேவைகளென்று குழம்பிப்போவதாக எண்ண இடமுண்டா? ஆசையும் தேவையும் ஒன்றா? வேறுவேறானதா? ஒன்று போலத் தோற்றமளிக்கும் வேறானதா? இதற்குத்தான் வாய்ப்பு அதிகமதிகமாயுண்டு. நிச்சயமாக ஒன்றுபோல இன்னொன்று இல்லை. பௌதிகச் சடங்களாகட்டும் எண்ணங்களாலான உளமாக இருக்கட்டும் ஒன்று போல் மற்றொன்று இருக்கமுடியாதல்லவா?

இங்கேயும்தான் நாம் கணிசமானளவு எம்மைத் தொலைத்து விட்டு அலைவுறுகிறோம். அவன்போல இவன் போல அதுபோல இதுபோல ஆகுதல் வேண்டும் என்று அங்கலாய்க்கிறோம். அவ்வாறாகவேண்டும் என்பதற்காக நான் என்பதையும் எனது என்பதையும் மறந்து போகிறோம். நான் என்பதையும் எனத என்பதையும் தொலைத்து விடு கிறோம். நான் என்பதினூடாக எனதை அடையாளங்கண்டு அனுபவிக்க முடியாமல் யாராகவோ எதுவாகவோ ஆகி அனுபவிக்க முயல்கிறோம். அப்படியே அல்லது அது போலவே ஆகினால்கூட அதில் நானிருப்பேனா? எனக்கு என்பது இருக்குமா? நான் என்பதை விட்டொழிதல் வேண்டும் என்கிறார்களே என்று கேள்வியெழுப்பமுடி யுமல்லவா?

ஒன்றைச் சிந்திப்போம் எமது எண்ணங்கள் செயல்க ளுக்கான ஒரு அடிப்புள்ளி அல்லது மையப்புள்ளி எது? அது எது? எங்கேயிருக்கிறது? இவற்றைக்கடந்து அப்படி யொரு புள்ளி இருக்கிறதா? இருக்கமுடியுமா? அதுவும் கடவுளைப்போல கற்பனையா? எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிடுவோம். ஆனால் எமது எண்ணங்களை எப்புள்ளிபற்றி விரிக்கப்போகிறோம்? அந்தப் புள்ளிதான் நான் என்று இருந்துவிட்டுப்போகட்டுமே? எத்தனையோ இருக்கின்றனவே அதுபோல? எண்ணங் கள்வழி செயல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் உண்டல்லவா? அந்த நோக்கம் அதை அடைவதற்கான முயற்சி என யாவுக்குமான உந்து விசை எங்கேயிருந்து வரவேண்டும்? எண்ணத்துக்குரியவனாகிய நானிலிருந்து அந்த உந்துவிசை கிடைக்காதுவிட்டால் எண்ணத்துக்கான செயல்வடிவம் எப்படிக் கிடைக்கும்? ஆக நான் என்பது தவிர்க்கக் கூடியதா? நான் என்பதை விட்டொழிதல் என்பதிலிருந்துதான் நம்பிக்கை என்று கொண்டாடப்படுகின்ற நம்பிக்கையீனம் பிறக்கிறது என்று கொள்ள இடமுண் டல்லவா? நான் எனக்குள் என்னோடேயே இருக்கும் என்னை ஏற்றுக்கொள்வதைவிடவும் வெளியேயுள்ள ஏதோ வொன்றையோ, பலதையோ ஏற்றுக்கொள்ளுதல் சரியா னதுதானா? ஏற்புடையதா? சிந்திப்போம்.

## நான் ஒரு . . .

**பெண்ணாக...!**

18 வயது வரைக் கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தேன். உரிமை மறுப்பு, இடப் பற்றாக்குறை, கூட்டுக் குடும்பம் எனப் பல பிரச்சினைகள் இருந்தன. பிறகு பெங்களூரு சென்று படித்தேன். பாடசாலையில் பெயர் கூப்பிடுவதில் தொடங்கி நிறைய துஷ்பிரயோகங்கள், முட்டாள்தனங் களை எதிர்கொண்டேன். எனது பாலியல் பற்றி நான் மிகவும் குழப்பமடைந்தேன். இதனால், காதல் அனுபவம் தோன்றவில்லை. நான் என் பாலினத்துடன் போராடிக் கொண்டிருந்தேன்;. அதை அடக்கிக்கொண்டிருந்தேன். தலைமுடிக்கு வண்ணம் தீட்டத் தொடங்கியபோது, பெங்களூரில் நிறைய கொடுமைப்படுத்துதலை எதிர் கொண்டேன். கல்லூரியை விட்டு வெளியேறினேன். 5 மாதங்களுக்குப் பிறகு நான் அம்பேத்கர் பல்கலைக்கழ கத்தில் சேர்ந்தேன். சமூகவியல் படிப்பைத் தொடர்ந்தேன். என் பெண்மையில் நம்பிக்கை பெற்றேன். குர்தி, பாவாடை அணிந்தேன். நான் ஒரு பெண் என்கிற உணர் தல் வந்தது. பிறகு எனக்கு நிறைய தூண்டுதல்கள் இருந் தன. எனக்கு நிறைய ஆடைகள் கிடைத்தன, நான் ஒரு ராணியாக மாறினேன்! என் முகத்தை லேசர் செய்தேன் என் தாடி போய்விட்டது. மருத்துவ ரீதியாக மாற்றப்பட் டேன். நான் ஹார்மோன் மாற்று சிகிச்சை பெற்றேன்.



எனக்கு டிஸ்ஃபோரியா சான்றிதழ் கிடைத்தது. நான் சட்டரீதியாக மாற்றப்பட்டேன். எனது பாலினத்தை சட்டப்பூர்வமாக மாற்ற வேண்டும் என்பதால் முழுச் செயல்முறையையும் அரசிதழில் செய்தேன். ஆனால், அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய காலம் மிகவும் வேதனையானது! உடல் அதிர்ச்சி, மன அதிர்ச்சி என உடல் வலி பயங்கரமாக இருந்தது. அது குணமடைய நீண்ட காலம் பிடித்தது. ஆனாலும் தாங்கிக்கொண்டு பெண்ணாகிவிட்டேன்.

**நகைக் கடை விளம்பரத்தில் புதிய தடம்**

நீண்ட வருட வர்த்தக நாமத்தைக் கொண்ட கேரளா நகைக் கடை நிறுவனம் ஒன்று திருநங்கை ஒருவரைத் தனது விளம்பரத்தில் நடிக்க வைத்திருக்கிறது என்கிற செய்தியைப் பின்தொடர்ந்தபோதுதான் மீரா சிங்கானிய ரெஹானி பற்றி அறிய முடிந்தது. ஆம்! அந்த விளம் பரத்தில் நடித்தது நிஜத்திலும் திருநங்கையான அவர் தான். தாடி, மீசையோடு ஆனால் பெண் தன்மையோடு இருப்பதைப்போல தோன்றும் நபர் தனது குடும்பத்தின் ஆதரவுடன் அழகான மணப் பெண்ணாக மாறுவதைக் காட்டும் விளம்பரம் அது. திருநங்கையாக மாற எத்த னிக்கும் அவரை ஒவ்வொரு கட்டத்திலும் அன்புடன் ஏற்றுக் கொண்டு தங்க நகைகளைப் பரிசாக்குகின்றது அவரது குடும்பம். 'அன்பைப் போல பரிசுத்தமானது' என்பதுதான் அந்த விளம்பரத்தின் தலைப்பும்கூட. பலரிடமிருந்து இவ்விளம்பரத்துக்கு நல்ல விமர்சனங்கள் கிடைத்திருக்கின்றன. திருநங்கைகள், திருநம்பிகள் என்போர் தங்கள் வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்படும் நிலையிருக்கையிலும், ஆதரவற்ற அவர்கள் நிகழ்ச்சிக ளில் ஆடியும் பாடியும், யாசகம், பாலியல் தொழில் என்றும் வாழ்க்கை நடத்திவருவதே பெருமளவில் நிகழ் வதாக இருக்கையில் இந்த நகைக் கடைவிளம்பரம் அதில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று பலரும் பாராட்டத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனாலும் இந்த விளம்பரம் ஆண்- பெண் இந்து திருமண முறை யைக் கேள்விக்கு உட்படுத்துவதாக இருப்பதால் எதிர்ப் புகளையும் சம்பாதித்துள்ளது. மறுகோணத்தில் திருநங் கைகள் விடயத்தில் அது புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மிதிலா

**நா.சத்தியபாலன்**



8

மனித உள்ளங்களுள் கிளர்ந்து எழுகின்ற ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும் இன்னும் என்னவோ தாகங்களின் பரிதவிப்புகளும் எல்லோராலும் வெளிப்படையாகச் சொல்லப்படுவதில்லை. அவ்வாறான சூழலும் அவ்விதமான பகிர்தலுக்கு ஏற்ற துணைகளும் யாருக்குமே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாகப் பெண்களுக்கு இவ்விதமான துணைகள் கிடைப்பது அரிதுதான். கோமதியின் ஆற்றாமைக்கும் துயரத்துக்கும் பின்னால் இருக்கக்கூடிய துயரத்தின் கனதியை நான் புரிந்துகொண்டேன். வீடு - குடும்பம் என்ற வட்டங்களுள் தம்மை நிறுத்திக்கொண்டுள்ள பெண்களில் பலரது மனங்களுள் சொல்லப்படாத எண்ணங்களும் துயரக் கதைகளும் நிலையாய் இருக்கத்தான் செய்கின்றன.

எனது மடியில் தலைசாய்த்துக் கிடந்த கோமதியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டேயிருந்தது.

''ஏனம்மா கோமதி ஏனிப்படி உடைஞ்சு போறாய்...? ஒரு பெண்ணுக்குத்தான் இன்னொரு பெண்ணின் மனது புரியும். நீ சொல்லாட்டிலும் உனக்குள் இருக்கக்கூடிய கவலைகள் எனக்கு விளங்கும் பிள்ளை. கிட்டத்தட்ட எல்லாப் பெண்களின்ர மனதின் சுமை எண்டது முழுசாய் இறக்கி வைக்கப்படுவதில்லை. மிகப் பல பெண்கள் சுமை நிறைஞ்ச மனசுகளோடதான் வாழுவினம். இறுதிவரை அந்தச் சுமைகள் முழுசாய்ப் பகிர்ந்துகொள்ளப்படுகிறதுமில்லை. இறக்கி வைக்கப்படுகிறதுமில்லை'' என்று சொல்லி நான் நிறுத்திக்கொண்டபோது, ஆதரவுக்குத் தவிக்கும் ஒரு பறவைக் குஞ்சுபோல் என்னுள் ஒடுங்கி என்னை இறுக அணைத்துக் கொண்டாள் கோமதி. இப்படியாவது அவளது துயரங்கள் கரையட்டும் என்று அவளைத் தாங்கிக் கொண்டேன் நான். ஒரு தாயாக அந்தப் பெண்ணின் கவலைகளுக்கு ஒரு வடிகாலாக என்னால் அமைந்துகொள்ள முடியாதெனில் என்னை ஒரு பெண் என்றோ, ஒரு தாய் என்றோ அழைத்துக்கொள்ளும் தகுதியை அல்லவா நான் இழந்ததுபோலாகிவிடும்?

அழுகையில் கரைந்துகொண்டிருந்த கோமதி அவளாகவே ஓயும் வரை அவளோடு அமர்ந்திருந்துவிட்டு அவள் உறங்கத் தொடங்கியபிறகு நான் எனது அறைக்கு மீண்டேன்.

படுக்கையில் சரிந்த பிறகும் என்னால் உறங்க முடியவில்லை. கண்களை மூடிக்கிடந்தபோதும் மனதுள் கடந்த காலமும் எனது மகள் மிதிலாவின் கவலை மிகுந்த கடந்த காலமும் இப்போது ஒரு மகள்போலாகிவிட்ட கோமதியின் வாழ்வும் நினைவுகளாய் என் மன அரங்கில் அணிவகுக்கின்றன.

**அழுகையில் கரைந்துகொண்டிருந்த கோமதி அவளாகவே ஓயும் வரை அவளோடு அமர்ந்திருந்துவிட்டு அவள் உறங்கத் தொடங்கியபிறகு நான் எனது அறைக்கு மீண்டேன்.**

ஒவ்வொரு பெண்ணும் தனது வாழ்க்கையில் திருமணத்துக்கு உட்படும்போது தனது துணையாக வருபவன் தன்னை, தனது உள்ளுணர்வுகளை மனம், உடல் சார்ந்த தேடல்களைப் புரிந்துகொள்ளக்கூடியவனாக அமைய வேண்டுமென்றே எதிர்பார்க்கிறாள். ஒருவருக்கொருவர் ஆதரவாகி ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சொல்லப்படாத பல உணர்வுகளை, கோலங்களை அடையாளம் கண்டு, தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றே ஒரு பெண் எதிர்பார்க்கிறாள். தாகங்களின் தணிவைத் தாண்டி, தேவை நிறைவேற்றங்களைத் தாண்டி, ஒரு மனைவியாய், ஒரு தாயாய், ஒரு பெண் எவ்விதமான எதிர்பார்ப்புகளை உடையவளாய் இருக்கிறாள் என்பதை எல்லாக் கணவர்களும் புரிந்துகொள்ள முடியும் எனில் ஒரு பெண்ணின் துயரச் சுமைக்கும் அவள் உருக்கும் கண்ணீருக்கும் வரம்புகள் அமைந்திருக்கும்.

மிதிலாவின் அப்பா என்னைத்திருமணம் செய்துகொண்டதும் என் வாழ்வின் அர்த்தம் மிக்க துணையாய் ஒரு கணவனாய் ஒரு தந்தையாய் ஒரு நண்பனாய் என்னோடு வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறேன்.

ஓ... எவ்வளவு உயர்ந்த மனிதர் அவர்...! ஆர்ப்பாட்டமோ... ஆர்ப்பரிப்புகளோ இல்லாத அமைதியான எங்கள் தாம்பத்தியத்தில் எங்கள் குடும்ப வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் என்னை முழுதாய்ப் புரிந்துகொண்டு துணை வந்த அவரது அன்பு மறக்கமுடியாத ஒன்றாயிருந்தது. எதிர்பாராமல் நோய்வாய்ப்பட்டதும் படுக்கையில் சாய்ந்த சில நாள்களிலேயே காலன் அவரைப் பறித்துப்போனதும் ஆறாத துயரமாய் என்னுள் நிலைகொண்டுள்ள நினைவுகள் இறந்துபோவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் அவர் என்னை அழைத்து, ''உன்னையும் பிள்ளையையும் விட்டுவிட்டு நான் அகதியாய்ப் போய்விடுவேனோ என்று பயமாய்க் கிடக்கு - ஏனோ தெரியேல்ல என்ர உள்மனம் சொல்லுது - அப்பிடி ஏதும் ஆகிப்போனால், நீ கலங்கிப் போய் விடக்கூடாது. உன்ர மனம் மிகவும் திடமானது எண்டு எனக்குத் தெரியும். எப்பிடியெண்டாலும் அவளை ஒரு நல்ல இடத்தில் குடுத்துப்போடு - பதவி, பணம், இதெல்லாம் பெரிசில்ல. நல்ல மனிசராய்ப் பார். எங்கட குடும்பத்துக்கேற்ற ஒரு பொடியனாய்ப் பாத்தெடு. அந்தக் கடமையை முடிக்க முன்னம் காலம் என்னைக் கூப்பிடப் பார்க்குதுபோல கிடக்கு. கலங்காமல் நீதான் அவளின்ர வாழ்க்கைக்கு ஒரு நல்ல துணையைத் தேடிக் குடுக்க வேணும்'' என நோயின் துன்பத்திலும் தான் நினைத்ததைச் சொல்லி

# புல்லரிக்க வைக்கும் மறுபிறவிக் கதை

■கமலநாதன்



2001ஆம் ஆண்டு தை 31ஆம் நாள் கண்டியைச் சேர்ந்த திலங்க மதுஷங்க ரணசிங்க என்ற 15 வயதுச் சிறுவன் லெபெல்ல என்ற இடத்தில் (கண்டி) மகாவலி கங்கையில் மூழ்கி இறந்தான். 2002ஆம் ஆண்டு தை 31ஆம் நாள் (சரியாக ஒரு வருடம் கழித்து) ஹீசற ஆசித்த கௌ என்ற பெயரில் மாத்தறையில் அவன் திரும்பவும் வேறொரு தம்பதிகளுக்குக் குழந்தையாகப் பிறந்திருக்கிறான். அவன் மறுபிறவி எடுத்துத் தற்போது 19 வயதையெட்டியுள்ளான். இந்த மறுபிறப்புப் பிறந்து இரண்டரை தொடக்கம் 3வயதுக்குள் அவன் தனது முற்பிறவிப் பெற்றோரைத் தேடி கண்டுபிடித்த உண்மைச் சம்பவமே இங்கு பதிவு செய்யப்படுகிறது. ஹரீந்திர ஜெயலால் என்பவர் தனது யூரியூப் பதிவில் சிங்கள மொழியில் இதைப் பதிவு செய்திருந்தார். மறுபிறவி பற்றியிருக்கின்ற கற்பனைக் கதைகள் பலவற்றுக்குள் நம்பவைக்கும் ஆதாரங்களுடன் இந்தச் சம்பவம் பதிவாகியிருக்கிறது. இந்தப் பிறவியில் அவனுடைய பெயர் ஹீசற ஆசித்த கௌ. அவன் தனது அனுபவங்களைப் பொதுவெளியில் ஒரு சில ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளான்.

### கண்டிக்கு அழைத்துச்செல்லுமாறு அடம்பிடித்த குழந்தை

''எனக்கு இரண்டரை தொடக்கம் 3வயதாக இந்தபோது எனது முற்பிறவி விடயங்களை நான் ஞாபகப்படுத்தத் தொடங்கினேன். என்னைக் கண்டிக்குக் கூட்டிச் செல்லுங்கள் என்று அடம்பிடித்திருக்கிறேன். அம்மா, அப்பா, இளைய அக்காமார் இருவரும் பயம் காரணமாக என்னைக் கண்டிக்குக் கூட்டிச்செல்லவில்லை. ஆனால், எனது மூத்த அக்கா நான் அவ்வப்போது கூறுவதைச் செவிமடுத்து அவற்றை ஒரு கொப்பியில் பதிவு செய்து வைத்திருந்தார். ஏறத்தாழ 20 சம்பவங்களை அவர் பதிவு செய்திருந்தார். இந்த விடயத்தில் உண்மையிருக்கிறதா இல்லையா என்பதை அறிய அவருக்கு ஆவல் பிறந்திருக்கிறது. கண்டிக்குச் சென்றதும் தலதாமாளிகையில் என்னை இறக்கிவிட்டால், மிகுதி இடங்களை நான் காட்டுவேன் என்று கூறினேன். அதன்படி அவர்கள் இறக்கியதும் அந்தச் சூழல் எனக்கு நன்கு ஞாபகமிருந்தது. தலதா மாளிகைக்குச் சென்று வணங்கிவிட்டு எல்லோரும் ஓரிடத்தில் அமர்ந்திருந்தபோது, புத்தரின் புனிதப் பல் வைத்திருக்கும் இடத்தைப் பூட்டப்போகிறார்கள். என்னை அங்கு கூட்டிச் செல்லுங்கள் என்று நான் கூறினேன். எனது மறுபிறவிப் பெற்றோர் மாத்தறை தேவிநுவர பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் தலதாமாளிகையின் நடைமுறைகள் அவர்களுக்குத் தெரியாது. அங்கு சென்று வணங்கியபோது அங்கிருந்த பிக்குவுடன் நான் சரளமாகக் கதைத்தேன். 3வயதுப் பிள்ளைக்கு இவ்வளவு விவரம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று கூறி அவர், என்னிடம் சில கேள்விகளைக் கேட்டார். தலதாமாளிகையின் ஒரு பக்கத்தைக் காட்டி, அங்கு என்ன இருக்கிறது?'' என்று அவர் கேட்க, ''புனிதப் பல்லைச் சுமக்கும் யானைகள் தங்குமிடம்' என்று நான் கூற, பின்புறமாகக் கையைக் காட்டி, 'அங்கு என்ன இருக்கிறது,?' என்று கேட்டிருக்கிறார். 'அங்கு பணம் கொடுத்துப் பார்க்கும் இடமிருக்கிறது' என்று கூறினேன். அது நூதனசாலை என்று கூற எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

அந்தப் பிக்கு பௌத்த மதத்தின் பிரதானமான சுலோகம் ஒன்றைக் கூறுமாறு கேட்டார். நான் அதை முழுமையாகக் கூறினேன். 3வயதில் அதை எனக்கு யாரும் சொல்லித்தரவில்லை. இப்போதும் முதல் பிறவியில் கற்ற அந்த விடயத்தைத் தெளிவாகக் கூற முடிகிறது.

பின்னர் நூதன சாலைக்கு என்னைக் கூட்டிச் சென்றபோது அங்கு தல தாமாளிகைக் குண்டுவெடிப்புச் சம்பவப் படங்கள் (1998 தை 25) காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதைக் காட்டி, 'இது தலதாமாளிகைக் குண்டுவெடிப்புப் படங்கள். கீர்த்தி ஐயாவிடம் (முந்தைய பிறவியில் அயல் வீட்டில் இருந்தவர்) இந்தப் படங்கள் இருக்கின்றன' என்று கூறினேன். தலதாமாளிகைக்கு அருகில் எங்கள் வீடு இருந்ததால் (முற்பிறவியில்) அங்கு குண்டுத் தாக்குதல் நடந்தபோது அந்தச் சத்தம் பெரிதாகக் கேட்டது. இப்பவும் அந்தச் சத்தம் எனக்கு ஞாபகத்தில் உண்டு.

### முற்பிறவி வீட்டைத் தேடியது

முற்பிறவியில் நான் பிறந்து வளர்ந்த வீட்டைக் காட்டுவதற்குத் தலதாமாளிகையிலிருந்து கூட்டிச் சென்றபோது எங்கள் வீடு இடிக்கப்பட்டிருந்தது. எனினும் வீட்டுக்கு அருகிலிருந்த பெரிய மரத்தை அடையாளம் காட்டினேன். பின்னர் அயலவர்கள் பலரை அடையாளம் காட்டினேன். அயலவர்கள் பலரிடம் கேட்டு எனது பெற்றோர் உறுதிப்படுத்திக் கொண்டனர். சமுர்த்தி அலுவலர் ஒருவர் என்னிடம் ''பொடி மாத்தையா குடும்பம் (எனது முற்பிறவி அப்பாவின் பெயர்) தற்போது கண்டியில் ஹாரகம பகுதியில் இருக்கிறது'' என்று கூறினார். அந்த அலுவலரின் சகோதரி ஒருவர் முற்பிறவியில் எனது வகுப்பில் கல்வி கற்றவர். நான் அவரிடம் நீங்கள் இன்னாரின் அண்ணா அல்லவா என்று கேட்டு உறுதிப்படுத்தினேன். அவரது ஏற்பாட்டின்படி மறுநாள் கண்டி டேவோன் ஹோட்டலில் எனது முற்பிறவிப் பெற்றோரைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். நாங்கள் முன்னதாகவே அந்த இடத்துக்குச் சென்று காத்திருந்தபோது எனது முற்பிறவி அம்மா வருவதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியில் அவரிடம் நான் ஓடிச் சென்றேன். அதை ஆதாரப்படுத்தும் ஒளிப்படமும் உண்டு.



### முற்பிறவியில் நான் பாவித்த பொருள்கள்

முற்பிறவியில் நான் இறக்கும்போது பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது பதினைந்து வயது. நான் இறந்தபின் எனது பொருள்கள் அனைத்தையும் வீட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். எனது முன்னைய படம் பெரிதாக்கப்பட்டுச் சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அலுமாரியைத் திறந்து காட்டினார்கள். நான் பாவித்த எல்லாப் பொருள்களையும் அடையாளம் காட்டினேன். முற்பிறவி அக்காமாரைக் கண்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் அகால மரணம் அடைவதற்குச் சில நாள்களுக்கு முன் எங்கள் வீட்டுக் கொம்பியூட்டரில் படம் கீறி வர்ணம் தீட்டிய தலதா மாளிகையின் படங்களை அக்காமார் பத்திரமாகப் பேணி வைத்திருந்தார்கள். அதை மீண்டும் பார்க்கக் கிடைத்தது மகிழ்ச்சி.

> **முற்பிறவியில் நான் இறக்கும்போது பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப் போது பதினைந்து வயது. நான் இறந்தபின் எனது பொருள்கள் அனைத்தையும் வீட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள்**

### கிரிக்கெட்டும் நானும்

நான் முற்பிறவியில் கண்டி தர்மராஜ வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் கொண்ட நான், 15வயதுக்குட்பட்ட அணியில் விளையாடி இந்தியாவுக்குச் சென்றும் விளையாடினோம். எனது முற்பிறவி 15வயதுப் பிரிவு அணியில் பின்னர் இலங்கைக் கிரிக்கெட் அணியில் பிரபல்யம் அடைந்த சாமர கப்புகெதரவும் இருந்தார். நான் 3வயதில் தர்மராஜ வித்தியாலயத்தைப் பார்க்கப்போனபோது எங்களுக்குக் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக இருந்த மாத்தற ஆராய்ச்சி என்பவர் படிக்கட்டில் இறங்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டு அவருடன் கதைத்தேன். அவர் மிகவும் சந்தோசப்பட்டார். எனது வீட்டிலிருந்த முற்பிறவியில் நான் பாவித்த பொருள்களில் கிரிக்கெட் பந்தையும் பற்றையும் வாங்கி வைத்திருக்கிறேன். முற்பிறவியில் பாவித்த எனது பொருளை இப்பிறவியில் கண்டுகொண்டது யாருக்கும் கிடைக்காத ஒன்று.

எனது தற்போதைய பிறவியில் மாத்தறை சாந்த சேவேசஸ் வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். அங்கும் கிரிக்கெட் அணியில் விளையாடி 15வயதுக்குட்பட்ட அணியில் இந்தியச் சுற்றுலாவுக்குப் போய் வந்தேன். இதுவும் என்னால் மறக்க முடியாத ஒன்று.

முற்பிறவியில் நான் இறந்தபோது எனது தாய் வேண்டுதல் ஒன்றை வைத்திருக்கிறார். 'எனது பிள்ளை மீண்டும் பிறந்து என்னைத் தேட வர வேண்டும்' என்பதே அவர் கேட்ட வரம். அது போல நடந்துவிட்டது என்று அம்மா சந்தோசப்பட்டார். நான் தற்போது பாடசாலை விடுமுறைக் காலங்களில் கண்டிக்குச் சென்று எனது முற்பிறவிக் குடும்பத்தாருடன் தங்கிச் செல்கிறேன். இதுபோன்றதொரு அனுபவம் வேறு யாருக்கும் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. முற்பிறவியில் ஆற்றில் மூழ்கி இறந்த இடத்தை இதுவரை நான் போய்ப் பார்க்க விரும்பவில்லை.

---

## மிதிலா...

முடித்தபிறகு அவர் முகத்தில் நான் கண்ட அமைதிதான் கடைசி நிமிஷம் வரை அவரில் இருந்தது.அதையெல்லாம் உணர்ந்திருந்த ஆண்டவன்தான் பின்னால் நிகழ்ந்த எல்லாவற்றையும் நடாத்தி முடித்திருக்க வேண்டும்.

அந்த நல்ல கணவரின் தந்தையின் ஏக்கத்துக்கான தீர்வாகத்தான் மிதிலா - மகேஷ் திருமணத்தை ஆண்டவன் முடித்து வைத்தானா? அந்த நல்ல உள்ளத்தின் பிரார்த்தனைதான் மிதிலாவின் நல்ல வாழ்வைத் தேடித் தந்ததா? அந்த யோசனைகளோடே நான் தூங்கிப் போனேன்.

(தொடரும்)



# எங்கடையாக்கள் விசுவாசியளல்லோ?

■ கதிரேசன் காத்தவராயன் ■

வீட்டுக்கை இருக்க விசராக்கிடக்கெண்டுபோட்டு அதிபர் வீட்டடிக்குப் போனன். இவ்வளவுகாலமும் நான் ஒராள் தான் வீட்டுக்கை இருந்திருக்கிறன்போலை. றோட்டு வழமைமாதிரி கலகலப்பாத்தான் இருந்துது. மாஸ்ரர் வீட்டிலை முருகேசர் இருந்தார். சுதனோடை ஒரு பெடியன் கதைச்சுக்கொண்டிருந்துது.

"வாரும் கதிரேசு...ஆளைக் காணுறது வலு கஸ்ரமாய்க்கிடக்குது?" எண்டு மாஸ்ரர் வரவேற்றார். முருகேசரும் மற்றவையும் சிரிச்சினம். மாஸ்ரர்தான் கதையைத் தொடங்கினார்.

"எங்கடையாக்கள் எவ்வளவைப் பட்டுக்கழிச்ச ஆக்கள் பக்கு வந்தான் வருகுதில்லை... கதையிலை விட்டால் எங்களைமிஞ்ச ஒருத்தனும் இல்லையென்பினம்..." எண்டார்.

"ஓம் சேர் வடிவா யோசிச்சு முடிவெடுத்து ஒண்டாய் நிக்கிற தெண்டால் எங்கடையாக்களுக்கு வேப்பங்காயாயல்லே கிடக் குது?" எண்டான் சுதனோடை இருந்த பெடியன். அவை ஏதோ கதைச்சுக்கொண்டிருந்த கதையின்ரை தொடர்ச்சிபோலை. நான் ஒண்டும் சொல்லயில்லை.

"சரியாத்தான் சொன்னீர் தம்பி... இண்டையான் செய்தியிலை சொல்லிச்சுது... கேட்டிருப்பியள்தானே... உங்கடை வடக்கு வாத்திமார்தான் பிள்ளையளிலை கரிசனையுள்ள வாத்திமார் எண்டு அமைச்சர் ஒராள் சொன்னவராமில்லே?" நான் உசாராகி விட்டன். இப்பதானே கதையோட்டம் பிடிபட்டுது...

"ஓஓ நானுங் கேட்டனான்தான்... சீலையுரிஞ்சமாதிரியல்லே கிடக்குது?" எண்டன்.

"ஓம் மாமா... எல்லாஇடத்திலையும் தொழிற்சங்கம் போரா டேக்கை எங்கடையாக்கள் கைநாட்டு மிசினிலையல்லே விரல் வைச்சவை..." எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க, "அட.. அது பறவாயில்லை... கொப்பியிலை பின்பக்கத்திலை சைன் பண்ணினதுதான் ஆகமோசம் ..." எண்டான் சுதனோடையிருந்த பெடியன்.

"அதென்ன தம்பி கொப்பியின்ரை பின்பக்கச் சைன்?" எண்டு கேட்டன்.

"அது மாமா எங்கடை சுத்துமாத்து அதிபர்மாரும் வாத்தி மாரும் செய்த புத்திசாலித்தனமான ஏமாத்து வேலை... அதென னண்டால் உத்தியோக ரீதியாக் கடமை செய்யேல்லை எண்டு தொழிற்சங்கத்துக்குக் காட்டுறது.. கடமைக்கு வந்தம் எண்டு அரசாங்கத்துக்குக் காட்டுறது... எவ்வளவுக்கு மண்டையைப் போட்டுடைச்சு ஏமாத்தினவங்கள் பாத்தியளே?" எண்டு சுதன் சொல்ல, எனக்கு உண்மை விளங்கிச்சுது.

"ஏன்ரா தம்பி ஒன்லைனிலை படிப்பிச்சதையும் சேத்துச் சொல்லன்?" எண்டு மாஸ்ரர் பெரிசாச் சிரிச்சார். பெடியள் ரண்டு பேருமே சிரிச்சாங்கள்.

"அதுகளுக்கும் மேலாலை ஒன்லைனிலை மாகாணச் சோதினையுமல்லே நடத்தி முடிச்சிருக்கிறம். நாங்கள் ஆர் எண்டு நினைச்சியள்?" எண்டுது பெடியன். "இணையப்படிப் பித்தல்தான் தோல்வியெண்டதை அரசாங்கமே ஏற்றுக்கொண்ட பிறகும் உது பெரிய கூத்தல்லோ?" எண்டு சிரிச்சார் முருகேசர். "கூத்திலை சாதனை" எண்டான் சுதன். "முப்பது பிள்ளையிருக்கிற என்ரை வகுப்பிலை நாலு பிள்ளையள் சோதினை எழுதினதாப் போடுதுகள்... அதிலையும் ஒண்டுதான் பகுதி ரெண்டுப் பேப்பர் செய்திருக்குதாம்..?..?" எண்டு பெருமூச்சு விட்டுது சுதன்.

"உது உமக்குப் பறவாயில்லைச் சுதன்.. என்ரை ஸ்கூல் ஏரியாவிலையே கவரேஜ் இல்லை. இருவத்தாறு பிள்ளையளிலை ஒண்டுமே எழுதேல்லை. ஸ்கூல் முடிஞ்ச பிறகு குவாட்டேசாலை வெளிக்கிட்டு குளக்கட்டுக்குப் போய்த்தானே நாங்கள் கதைக் கிறது... பிள்ளையளைக் குளக்கட்டிலை ஏறுங்கோ சோதினை எழுதுங்கோ எண்டு சொல்ல ஏலுமோ?" எண்டான் அந்தப் பெடியன்.

"உதுகளுக்கும் சேத்துத்தானே அமைச்சர் பாராட்டியிருக்கிறார்" எண்டு சிரிச்சார் மாஸ்ரர்.

"அது எல்லாம் சரிதான் தம்பியவை உங்கடை போராட்டம் வெற்றிதானே? ஐயாயிரம் கூட்டுறாங்களல்லே?" எண்டார் முருகேசர். சுதனும் பெடியனும் சிரிக்க மாஸ்ரர்தான் சொன் னார், "முருகேசு உதாலை ஒரு பிரயோசனமும் இல்லை. உது பேக்காட்டுதான். ஆனால் அந்தப் பேக்காட்டாலை கிடைக்கப் போற ஐஞ்சாயிரத்துக்கு வடக்கிலை அனேகமான வாத்திமாருக்கு அருகதையில்லை எண்டுறதுதான் உண்மை. போராடினவனுக்கு கிடைக்கிறது சரி.. போராடாமலுக்கிருந்தவைக்கு? அட ரோசமுள்ளவங்களாயிருந்தால் நான் போராடேல்லை எனக்குது வேண்டாமெண்டு சொல்லுவங்களோ?" எண்டு கொதிச்சார் மாஸ்ரர். "போராடினவங்களே வேண்டாமெண்டிற காசுதான் உது..." எண்டான் சுதன்.

"தம்பியவை எங்கடை அரசாங்க விசுவாசத்தைக் காட்டின னாங்கள்ளே? விசுவாசங்காட்டிக் காட்டி இப்பிடியே இருக்கிறதி லையும் ஒரு சுகமிருக்கல்லே" எண்டுகொண்டு வந்திட்டன் நான்.

---

# பாராட்டு மழையில் ஆல்ஃபா அடிமை



ஜினோவியின் இயக்கத்தில் உருவாகிய விறு விறுப்பூட்டும் ஓர் இரவுக் கதைதான் இந்தப் படம். ஈஸ்வர், வினோத் வர்மா, விஜய் ஆனந்த், அருண் ஆகியோர் இதில் நடித்துள்ளனர். புதிய முகங்களை வைத்து 3பாகங்களாக எடுக்கப்படுகிற படம் இது. நாயகத்தனம் மிக்க நாயகர்கள், பெருமெடுப்பிலான திரைப் படங்களைக் கொண்டாடிவருகின்ற சூழலில் மிகச் சிறிய வசதிகளுடன் திரைக்கதையின் சுவாரசியத்தால் பார்வையாளர் களை ஆச்சரியப்படுத்திப் பாராட்டு மழைக்குள் குளித்து வரு கிறது இந்தப் படம். ஒரு சிறிய சம்பவத்தைக் கதையாக எடுத்து அதை எந்த அளவுக்கு சுவாரஸ்யப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு சுவாரஸ்யப்படுத்தியிருக்கிறார்கள் என்றும் ஒன்றரை மணி நேரத் திரைப்படமான இது ஓர் இடத்தில்கூட தொய்வ டையாமல் ஒரே வேகத்தில் செல்வதும் சிறப்புகள் என்றும் புகழ்கிறார்கள் பலரும். ஒரு வீடும் ஒரு காருமே படம் நெடுக வந்தாலும் ஒரு இடத்தில்கூட சலிப்புத்தட்டாமல் நகர்கிற கதை, படத்தின் ஒளிப்பதிவு, படத் தொகுப்பு, இசை போன்றவையும் பாராட்டப்பட்டு வருகின்றன. ஆனால், தன் பாலின ஈர்ப்பா ளர்கள் குறித்த மிகக் கேலியான வசனங்கள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கடிந்தும் கொள்கிறார்கள். எது எப்படியி ருப்பி னும் வழக்கமான நாயகத்தன மற்றும் வணிகத் திரைப்படங்களில் இருந்து விலகித் தனித்துத் தெரிவதுடன் ஒருபடி மேலெழுந்தும் நிற்கிறது இந்த அல்பா அடிமை.

**முதலாவது கொவிட் 19 தொற்று உருவாகியபோது நாடு பல மாதங்களுக்குத் தொடர்ந்து முடக்கப்பட்டி ருந்த வேளையிலேயே போட்டி போட்டு நானா நீயா என்று உதவிகளை வாரியிறைத்த அரசியல் பிரமுகர்களின் முகங்களை தற்போதைய முடக்க காலப்பகுதியில் காணக்கிடைக்கவில்லை**

என்.குமரன்

# உதவ முன்வாரீர்..!!



கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் நாளுக்கு நாள் ஆயிரக் கணக்கில் அதிகரித்துச் செல்லும் நிலையில் பல கிராமங்கள், நகரங்கள், குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகி அவர்களது வாழ்வாதாரம் முதற்கொண்டு அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் முடங்கியுள்ளன.

வசதிபடைத்தவர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் தமது தேவைகளை ஏதோ ஒரு வழியில் பூர்த்திசெய்யக்கூடியதாக இருந்தாலும், அன்றாடம் உழைத்துண்பவர்களும், நாள்கூலியை நம்பி வாழ்க்கையை நடத்துபவர்களும் படுகின்ற துயரங்கள் சொல்லிலடங்காதவை. தனிமைப்படுத்தல் என்று வந்துவிட்டால் ஒரு சில பணக்கார மற்றும் நடுத்தர வர்க்கத்தினருடைய நிலையும் இதுவே.

என்ன தான் தனிமைப்படுத்தலில் இருக்கின்ற குடும்பங்களுக்குரிய நிதியை அரசு ஒதுக்கியிருந்தாலும் அது உரிய முறையில் அவர்களைச் சென்றடைகின்றதா என்றால் அது சந்தேகமே. அவ்வாறு நிதிவழங்கப் பட்டாலும் வெளியில் நடமாட முடியாத அவர்களால் அந்த நிதியைப் பயன் படுத்தி அந்த நேரத்தில் என்ன செய்துவிட முடியும். சில இடங்களில் நிதினக்குப் பதிலாக நிவாரணத்தை வழங்கினாலும் அது அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்ற தேவைக் குரிய காலத்தில் இல்லாமல் இழுத்தடித்து வழங்கப்படுவதாகவே இருக்கிறது.

**ஆங்காங்கே ஒருசில தனிநபர் உதவிகள்**

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்று சொல்வது போல் கொரோனா தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்ட வீடுகள் ஏதோ தீண்டத்தகாத வீடுகள்போல நெருங்கிய உறவினர்கள் முதற்கொண்டு அனைவரும் ஒதுக்குமளவுக்குச் சென்றுவிட்ட நிலையில் எவராலும் கண்டுகொள்ளப்படாத, தேவையான நேரத்தில் தேவையான உதவிகளைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தான் எம்மவர்கள் உள்பட அனைத்துப் பிரதேசத்தவர்களுக்கும் முன்னுதாரணமாகத் தென்னிலங்கையில் களனிப் பிரதேசத்தில் பிரபல வர்த்தகர் ஒருவர் 2.5கோடி ரூபாவைத் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் தலா 1000ரூபா வீதம் வழங்கியிருந்தார். ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாகக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இது அதிகம் பகிரப் பட்டிருந்தது.

கொரோனாப் பெருந்தொற்றின் காரணமாக நாடு 10நாள்கள்வரை முடக்க நிலைக்குச் செல்கின்றது என்று ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே அத்தியாவசிய தேவைக்கான பொருள்களை மக்கள் வாங்குவதற்கு முண்டியடிப்பார்கள் என்பதை ஏலவே ஊகித்து பொருள்களைப் பதுக்கியது மட்டுமன்றி விலைகளை இரட்டிப் பாக்கி விற்பனை செய்த வர்த்தகர்களின் மத்தியில் துன்பப்படும் வேளையில் என்ன நோக்கமாக இருந்தாலும் முன்வந்து உதவிய குறித்த களனி வர்த்தகர் பாராட்டப்பட வேண்டியவரே.

**காணாமல்போன அரசியல் புள்ளிகள்**

அது அவ்வாறிருக்க, முதலாவது கொவிட் 19 தொற்று உருவாகியபோது நாடு பல மாதங்களுக்குத் தொடர்ந்து முடக்கப்பட்டி ருந்த வேளையிலேயே போட்டி போட்டு நானா நீயா என்று உதவிகளை வாரியிறைத்த அரசியல் பிரமுகர்களின் முகங்களை தற் போதைய முடக்க காலப்பகுதியில் காணக்கி டைக்கவில்லை. அந்த நேரத்தில் நாடாளுமன் றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தமைகூட அவர்களுடைய நீயா நானா போட்டிக்குக் காரணமாக இருக்கலாம். ஓரிரு பிரமுகர்களின் முகங்கள் இடையிடையே தென்பட்டாலும், அவர்களும் யாரேனும் புலம்பெயர்ந்தவர்க ளின் பெயர்களைத் துணையாகக் கொண்டே உதவிகளை வழங்கி வருகின்றனர். பத்துவரு டம், பதினைந்து வருடம் என நாடாளுமன்றம் சென்று சம்பாதித்தவை வற்றிவிட்டதோ என்னமோ தெரியவில்லை..??



இன்றைய இந்த சூழ்நிலையில், முடக்கம் அறிவிக்கப்பட முன்னர் இருந்தே கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த வீடுகளுக் குத் தேவையான உதவிகளை பொதுநல நோக்குடன் செயற்படுகின்ற அமைப்புகளும், கழகங்களும் பலரதும் உதவிகளுடன் தனிமைப்படுத்தப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களது உதவிகளை முடியுமான ளவு இன்று வரைக்கும் வழங்கி வருகின்றமை போற்றுதலுக்குரியது.

**ஆலயங்கள் தேடிச் சென்று உதவவேண்டும்**

எமது பிரதேசங்களில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பலவற்றினதும் திரு விழாக்கள் இன்றைய நாள்களில் நடைபெற்று வருகின்றன. பொதுவாக பண்டைய காலங் கள் தொட்டு இன்றுவரைக்கும் ஆலயங் களிற்கு வருபவர்களுக்கும், ஆலயங்களைச் சூழ இருப்பவர்களுக்கும், குறித்த ஆலயங் களின் திருவிழாக்காலத்தில் தானங்களில் சிறந்த தானமாகக் கூறப்படுகின்ற அன்ன தானம் வழங்குவது வழமை. ஆனால் இன் றைய இந்த கொரோனா சூழ்நிலையால், திரு விழாக்கள் நிறுத்தப்பட்டும், கட்டுப்பாடு களுடன் இடம்பெற அனுமதிக்கப்பட்டும் உள்ளமையினால் அன்னதானம் உள்ளிட்ட வழமையான நடைமுறைகள் தடைப்பட்டுள் ளன. இந்த நிலையில் திருவிழா உபய காரர்களும், ஆலய நிர்வாகம் சார்ந்தவர்களும் முன்வந்து வழமையாக திருவிழா காலப் பகுதியில் அன்னதானத்துக்கும், ஆடம்பரச் செலவுகளுக்காகவும் பயன்படுத்தும் நிதி யினை, இன்றைய சூழலில் தனிமைப்படுத் தப்பட்டு இருப்பவர்களுக்கும், பொது முடக் கத்தினால் அன்றாட வாழ்வினைக் கொண்டு நடத்தமுடியாமல் தவிப்பவர்களுக்கும் உதவும் முகமாக அவர்களைத் தேடிச் சென்று ஆலயத்தின் பெயரில் உதவிகளைப் புரிவதற்கு முன்வர வேண்டும்.

**கொண்டாட்டங்களைத் தவிர்த்து உதவலாம்**

இந்தக் காலப்பகுதியில் எம்மவர் பலராலும் திருமணங்கள், மஞ்சள் நீராட்டு வைபவங்கள், பிறந்த தினங்கள் என விழாக்கள் கொண்டாடுகி றார்கள். இந்தக் கட்டத்தில் மிகவும் எளிமையாக எமது விழாக்களை நடத்தி முடித்துவிட்டுச் சிறப்பாகச் செய்வதற்கு எவ்வளவு பணத்தினைச் செலவு செய்வோமோ அதில் சிறிதளவு இன்று அன்றாட வாழ்க்கையி னைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு உதவி புரிய முன்வர வேண்டும். விமர்சையாகக் கொண்டாடி வீணாகச் செலவு செய்யும் பணத்தினை எமக்கும் எமது சந்ததிக்கும் புண்ணியம் பெற்றுத்தரும் வகையில் செலவு செய்தாலே, ஒருவேளை உணவையேனும் உங்கள் பெயரால் உண்ணும் அவர்கள் வாழ்த்தும் வாழ்த்துக்கள் காலத்துக்கும் உங்களை வாழவைக்கும்..!!

■



# மருத்துவம்

## எந்நாளும் நலம் வாழ

## குழந்தைகளுக்கான உணவுகள் 1

மருத்துவர்
கந்தையா -சோதிதாசன்



**தாய்ப்பால்**

பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைத் தவிர சிறந்த தொரு உணவு இல்லை. தாய்ப்பால் உயிரைக் காப் பாற்றவும் குழந்தைகளின் ஆரோக்கியம் பேணி உடல் மற்றும் உள்ளுறுப்புகளின் வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவுமென உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. தாய்ப்பால் குழந்தைகளுக்கு இயற்கை யான முறையில் வழங்கப் படும் சிறந்த ஊட்டச்சத்துக் கான ஆதாரமாகத் திகழ் கிறது. எனவே தவிர்க்க முடி யாத நிலைமைகள் தவிர குழந்தையின் ஒன்றரை வயது வரையாவது தாய்ப்பால் ஊட்ட வேண்டியது ஒவ் வொரு தாயினதும் கட்டாயக் கடமை ஆகிறது. போதிய ஊட்டச்சத்துக் குறைபாடு சில நோய் நிலைமைகள் போன்ற பல காரணிகளால் சில தாய்மார்களுக்குப் போதிய தாய்ப்பால் சுரப்பதில்லை. இயற்கையான உணவுகள் மூலம் தாய்ப்பால் சுரப்பதை அதிகரித்துக் கொள்ளலாம்.

**தாய்ப்பால் அதிகம் சுரப்பதற்காக தாய்மார் எடுக்க வேண்டிய உணவுகள்**

தகுந்த காலம் வரை தாய்ப்பாலை குழந்தைக்கு வழங்க ஒருதாய் 2ஆயிரம் கலோரி சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். பால்,முட்டை , எலுமிச்சை அல்லது தோடைரசம், இளநீர், மரக்கறி சூப், மோர் போன்ற திரவ உணவு வகைகள். பச்சைக் காய்கறிகள் மற்றும் பழங்கள், கீரை வகைகள், முழுத்தானிய உணவு வகைகள், கொழுப்புக் குறைவான இறைச்சி வகைகள் என்பவற்றைப் பாலூட்டும் தாய் கட்டாய மாகத் தனது உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இது மட்டுமல்லாது வெந்தயம், சீரகம், கொத்தமல்லி, உள்ளி, கடலை, எள்ளு, பாதாம்பருப்புப் போன்றவற்றையும் பாலூட்டும் தாய்மார் அடிக்கடி தங்கள் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

முருங்கைக்கீரை தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்வதில் பெரும்பங்கு வகிக்கிறது. இதனைச் சமைத்து மதிய நேரச் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ள தாய்ப்பால் அதிகம் சுரக்கும். முருங்கைக்கீரை, கொத்தமல்லி, மிளகு, சீரகம் சேர்த்து வைக்கப்படுகின்ற ரசம் சிறந்ததொரு ஊட்டச்சத்துள்ள உணவாகும்.

முருங்கைப் பூவைச் சேகரித்து வைத்துக்கொண்டு அதை துவையல் போல செய்து சோற்றுடன் சேர்த்து அருந்துதலும் சிறந்த ஒன்றாகும்.

தண்ணீர்விட்டான் கிழங்கு சேர்த்துச் செய்யப்படும் சதாவரி லேகியம், நெல்லிக்காய் லேகியம், என்பன தாய்ப்பாலை அதிகரிக்கும் சிறந்த சித்த மருந்துகள் ஆகும்.

இவ்வாறு சத்தான உணவுகளை அருந்துவதன் மூலம் நமது ஆரோக்கியத்தை வளப்படுத்திக் கொள்வதோடு தங்கள் குழந்தைக்குத் தேவையான தாய்ப்பாலை வழங்கி அதை ஆரோக்கியமாக வளர்த்தெடுக்க வேண்டியது ஒவ்வொரு தாயின் கடமையாகும். அன்னையால் எதுவும் ஆகும்.



## முதற் பாறை...?

அமெரிக்காவின் நாசா நிறுவனத்தால் ஏவப்பட்டுச் செவ்வாய்க் கிரகத்தில் தரை யிறக்கப்பட்டுவிட்ட பெர்சவரன்ஸ் ரோவர் என்கிற விண்கலம் செவ்வாயிலுள்ள பாறைத் துண்டங்களை எடுத்துக்கொண்டு வரவி ருக்கிறது. செவ்வாயிலுள்ள ஒரு தடிமனான பாறைத் திட்டில், அந்த ரோவர் இயந்திரம் துளையிட்டுப் பாறைத் துண்டங் களைச் சேகரித்துவிட்டது. இதற்கு முன் கடந்த ஆகஸ்ட் மாதம் பாறை மாதிரிகளைச் சேகரிக்க முயற்சிக்கப்பட்டபோது பாறைகள் நொருங்கியதால் அந்த முயற்சி பயனளிக் காமல் போயிருந்தது. இந்த நிலையிலேயே தற்போது பாறை மாதிரிகள் வெற்றிகரமாக சேகரிக்கப்பட்டுள்ளன. செவ்வாயிலிருந்து பூமிக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு சேகரிக்கப்பட்டுள்ள இந்தப் பாறைத் துண் டங்கள்தான், வேற்று கிரகத்தில் முதல்முறை யாகப் பூமிக்கு வரவிருக்கின்ற முதல் பாறை என்கிற புகழுக்குரியனவாக இருக்கப் போகின்றன. அடுத்தடுத்த ஆண்டுகளிலும், இதுபோல 24 பாறை மாதிரிகளைச் சேக ரிக்க திட்டமிடப்பட்டு இருக்கிறது. அமெ ரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கி ணைந்த முயற்சி மூலம் அவை பூமிக்குக் கொண்டு வரப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. குறித்த விண்கலம் செவ்வாய் கிரகத்திலிருந்து வெற்றிகரமாகப் பாறைக ளைச் சேகரித்துள்ளது என்பதை அது எடுத்து அனுப்பிய ஒளிப்படங்கள் காட்டினா லும், அதை உறுதி செய்ய நாசா காத்திருக் கின்றன. பாறை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இருப்பதற்கான வாய்ப்புகள் இந்த முறை மிக அதிகமாக இருக்கலாம் என நம்பிக் கையோடு காத்திருக்கிறது.


நாசா அனுப்பிய இந்தப் பெர்சவரன்ஸ் ரோவர் கடந்த மாசி மாதம் செவ்வாயின் ஜெசெரோ க்ரேடர் என்கிற இடத்தில் தரை யிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 3ஆயிரத்து200வயதுடைய அதிசயம் மிக்க நெல்....!

இந்தியாவின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சிவகளைப் பகுதியில் அகழாய்வுப் பணிகள் நடந்து வருவது பலரும் அறிந்த சங்கதி. அந்த அகழ்வாய்வில் பழைய பொருள்கள் பல வெளிப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அங்கு பாதுகாக்கப்பட்டிருந்த நெல் தானிய மும் கிடைத்துள்ளது. அந்த நெல்லைக் கரிம பகுப்பாய்வுக்கு உட்படுத்தியபோது அதன் வயது 3ஆயிரத்து 175 ஆண்டுகள் என்று தெரியவந்திருக்கிறது. கீழடி அகழ்வாய்வின் ஒரு பகுதியாகவே சிவகளை ஆய்வும் நடந்து வருகிறது. கீழடி ஒரு பெரிய நகரமாக இருந்திருக்கக்கூடும் என்றும் இந்தியாவுடனும் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருக்கக்கூடும் என்றும் தெரியவந்த நிலையில் சிவகளையில் இந்த நெல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. தாமிரபரணி ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள சிவகளை யில் நடந்த முதற்கட்ட அகழ்வாய்வில் 'ஆதன்' என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடு கிடைத்தது. கறுப்பு-சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடிகள் போன்றவற்றில் அழகிய வடிவமைப் பில் வெள்ளை வண்ணத்தால் வரையப்பட்ட வேலைப்பாடுகள் உள்ளன. சிவகளைப் பகுதி யில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் மேன்மை குறித்து தெரியவருகிறது. இந்த அகழாய் விலமுதுமக்கள் தாழிக்குள் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்லைக் கரிமப் பகுப்பாய்வு செய்தபோதுதான் அதன் காலம் கி.மு. ஆயிரத்து 155 எனத் தெரியவந்திருக்கிறது. எவ்வளவு பழமையான அதிசயிக்கத்தக்க நெல் பார்த்தீர்களா...?



# முக அழகை மெருகூட்டும் மாதுளை..!!



பழங்கள் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்லாமல், சருமப் பராமரிப்பிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் தான், பெண்களால் அதிகம் விரும்பிப் பயன்படுத்தப்படும் பழமாக மாதுளை விளங்குகிறது.

முக அழகிற்கான பேஷியல் செய்வதில், முதல்படி கிளென்சிங். இதற்கு மாதுளையின் விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் கொண்டு முகத்தை கிளென்சிங் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால், முகத்தில் உள்ள அழுக்குகள், எண்ணெய்கள் உள்ளிட்ட அனைத்தும் நீக்கப்படுகின்றன.



மேலும் மாதுளை விதைகளை பன்னீர் அல்லது சக்கரையுடன் கலந்து அரைத்து, முகத்தில் பூசி, சிறிதுநேரம் கைகளால், மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும். அப்போது சருமத்தில் உள்ள இறந்த செல்கள் அனைதும் வெளியேறி விடும். பின்னர் குளிர்ந்த நீரில் முகத்தை மென்மையாகக் கழுவினால், முகம் பொலிவாக இருப்பதை உணரமுடியும்.




அத்துடன் மாதுளைச் சாறுடன் அப்பிள் சைடர் வினிகரை சேர்த்துக் கலவையாக்கி முகத்திறகுப் பூசலாம். இவ்வாறு செய்வதால், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும்.

மாதுளையானது தோலின் உட்புறமும், வெளிப்புறமும் புத்துணர்ச்சியை ஊட்டுகிறது. இதன்மூலம் வயதான தோற்றத்தினை இல்லாமல் செய்து இளமையைத் தக்க வைக்க உதவுகிறது.

---

# கூந்தலைக் குளிர்த்தியாக்கும் செவ்வரத்தை...!



சிறுவயதில் செவ்வரத்தம் பூக்களையும், இலைகளையும் ஒன்றாகக் கசக்கி வழுவழுப்பான அந்தத் திரவத்தைத் தலையில் அம்மா வைத்துத் தேய்க்கின்றபோது அருவருப்பில் அவஸ்தைப்பட்டாலும் காலப்போக்கில் பழக்கத்துக்கு வந்த அந்தச் செவ்வரத்தைக் குளியல் ஆரோக்கியமானதாகவும், உடற்சூட்டைத் தணிப்பதாகவும், மூளைக்குப் புத்துணர்ச்சியூட்டுவதுடன் தலைமயிர் செழிப்புற்று வளர வழிவகுப்பதாகவும் இருந்தது. இப்போதெல்லாம் அந்தச் செவ்வரத்தைக் குளியலைக் காண்பது அரிது. ஆனாலும் தலைமுடிக்கு வலுச்சேர்க்கும் அதிக விடயங்கள் செவ்வரத்தையில் இருப்பதே உண்மை.

செவ்வரத்தையில் இருந்து தயாரிக்கப்படுகின்ற எண்ணெயைப் பயன்படுத்தும்போது அது முடிக்கு பலத்தைக் கொடுப்பதால் முடி கொட்டுவதைத் தவிர்க்க முடியும். முடியில் வேர்க் கணுக்களைச் செவ்வரத்தை வலிமையாக்குகிறது. இதனால், முடி உதிர்வு என்கிற பெரும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

முடியின் வளர்ச்சியை அதிகரிக்கக் குழந்தைப் பருவத்தில் இருந்தே தலைக்குத் தகுந்த, ஒரே எண்ணெய்யை பயன்படுத்துவது அவசியம். இதனால் முடி வளர்ச்சி ஆரோக்கியமாக இருக்கும். முடியை அடர்த்தியாக, பொலிவாக, நரையில்லாமல் வைத்திருக்கலாம். செவ்வரத்தை எண்ணை என்பது செவ்வரத்தம் பூக்களில் தயாரிக்கப்படுவதே. இதைத் தயாரிப்பதற்கு 30பூக்களுடன், ஒலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணை ஆகியன - கால் லீற்றர், வெந்தயம் - 5 கரண்டியளவு ஆகியன மாத்திரம் போதுமானவை.

செவ்வரத்தை எண்ணையைத் தயாரிப்பதாயின் முதலில் சட்டி ஒன்றில் ஒலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய் சேர்த்துக் கலந்து சூடேற்றிப் பின்னர், அவற்றை மெல்லிய நெருப்பில் மிதமாகக் கொதிக்கட்டும். செவ்வரத்தம் பூக்களின் மகரந்தங்களை நீக்கிவிட்டு இதழ்களைத் தனியாக நறுக்கியெடுத்து அவற்றில் அரைவாசியை மிக்சியில் அரைத்துக் காய்ச்சிய எண்ணெயில் சேர்க்க வேண்டும். அரைவாசி இதழ்களை அப்படியே எண்ணெயில் போட்டு, வெந்தயம் சேர்த்து அடுப்பை அணைத்துவிட்டால் போதும். சூடாறியதும் கண்ணாடிப் போத்தலுக்குள் அடைத்து வைத்துப் பயன்படுத்தலாம். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இவ்வாறு இந்த எண்ணெயை நாங்களே வீட்டில் காய்ச்சலாம். தொடர்ந்து இந்த எண்ணெயை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

வளரும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே இதை பயன்படுத்தலாம். இதனால், முடி வளரும் பகுதியில் குருதி ஓட்டம் அதிகரித்து முடி வளர்ச்சியை மேம்படுத்தக்கூடும். மேலும், குழந்தைக்கு எண்ணெய் குளியலின் போது இந்த எண்ணெயை மட்டும் பயன்படுத்தலாம். இது உடற் சூட்டைத் தணிக்க கூடியது. முடி ஆரோக்கியமாகச் செழித்து வளரும். வயதானவர்களும் இதை பயன்படுத்தலாம். இளநரையை வராமல் தடுக்க செய்கிறது. நரை பிரச்சனை தவிர்க்க உதவுகிறது. முடிக்கு அடர்த்தி கொடுக்கிறது. முடி வளர்ச்சியை மேம்படுத்துகிறது. பொடுகுப் பிரச்சினை அதிகரிக்காமல் செய்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கூந்தலில் கரிசணை கொள்ளும் பெண்களுக்கே இதனால் அதிக பயன் கிடைக்கும்.

■ரவீந்திரன்■

# அரிசி மாபியாக்களின் கழுத்தில் சுருக்கு...!

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற வித்தியாசமின்றிச் சிவப்பரிசிச் சோற்றை உண்பதே இலங்கையிலுள்ள அனைத்து மக்களினதும் பாரம்பரியமாக இருந்தது. 90களின் பின்பான காலப்பகுதியில் வெள்ளைச் சம்பா அரிசி புழக்கத்துக்கு வந்ததால் வெள்ளை அரிசிச் சோற்றை உண்கின்ற மக்கள் அதிகரித்தனர். ஆனால், வன்னியின் சில பகுதிகள், தென்னிலங்கையின் சில பகுதிகள் எனச் சில இடங்களில் மாத்திரம் சிவப்பரிசிச் சோற்றை உண்கின்ற மக்கள் தற்போதும் உள்ளனர்.

வெள்ளைச் சம்பா அரிசியை மக்கள் மத்தியில் பழக்கப்படுத்துவதற்காக அனுராதபுரம், பொலனறுவைப் பகுதிகளில் இருக்கின்ற பெரிய அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் அதிகமாகச் சம்பா நெல்லைப் பயிரிட்டனர். சிவப்பு நெல்லைவிட வெள்ளை நெல்லுக்கு அதிக விலையைக் கொடுத்துக் கொள்வனவு செய்த தோடுசம்பா பயிரிட விரும்புபவர்களுக்கு விதை நெல், பசளை, மருந்துகள், முற்பணம் எனப் இவர்கள் உதவினர். விவசாயிகளும் அதைநோக்கி ஈர்க்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக அரசின் பசளை மானியங்களும் (சிங்கள விவசாயிகளுக்கு அதிக முக்கியத்துவம்) இந்த விவசாயிகளை அதிகம் உற்சாகப்படுத்தின. இதனால்தான் (வெள்ளை அரிசி மற்றும் நவீன பசளை, இரசாயனங்களால்) அனுராதபுரம், பொலனறுவைப் பகுதிகளில் சிறுநீரக நோயாளர்களின் தொகை அதிகரித்தது. முடிவில் பொலனறுவையில் சீன அரசின் உதவியுடன் மிகப் பெரிய சீறுநீரக மருத்துவமனை ஒன்றை நிர்மாணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

### அரிசி மாபியாக்கள்

தமக்கு விருப்பமான அரிசியை மட்டும் உற்பத்தி செய்ய விரும்பிய பெரும் அரிசி ஆலைகளின் முதலாளிகள் விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்யும் விடயத்தில் தமக்கிருந்த அரசியல் செல்வாக்கையும் தனிப்பட்ட வகையில் உள்ளூர்ச் சண்டியர்களையும் பயன்படுத்தினர். அதனால், சிறிய அளவில் அரிசி ஆலைகளையும் களஞ்சிய அறைகளையும் வைத்திருந்த அரிசி ஆலைக்காரர்கள் நெல்லைக் கொள்வனவு செய்யவிடாது தடுத்துத் துரத்தப்பட்டனர். இதனால் பெரிய அரிசி ஆலைக்காரர்கள் விதித்த விலைக்கே விவசாயிகள் நெல்லை விற்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகினர். பெரிய அரிசி ஆலைக்காரர்கள் 50ரூபாவுக்குக் குறைந்த விலையில் ஒரு கிலோ நெல்லைக் கொள்வனவு செய்து கொள்வனவு விலையைவிட 3மடங்கு விலைக்கு ஒரு கிலோ அரிசியை விற்றனர். உற்பத்தி செய்த விவசாயிகள்கூட அதிக விலைக்கு அரிசி வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்த அரிசி மாபியாக்களால் விவசாயிகள் வருடா வருடம் நட்டமடைந்ததுடன் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற முடியாத நிலையும் ஏற்பட்டது. இதில் இடைத்தரகர்கள் விவசாயிகளைவிட அதிக லாபம் அடைந்தனர். அதற்கு மேலதிகமாகப் பல்வேறுபட்ட நோய்களுக்கு மக்கள் உள்ளாகினர். பாரம்பரிய அரிசிச் சோற்றைக் கைவிட்டதும் அதிக விலைச்சலைப் பெறுவதற்காக இரசயான உரங்களையும் மருந்துகளையும் பாவித்ததாலும் இந்த நிலை ஏற்பட்டது. தற்போதுள்ள இளம் சந்ததியினருக்கு வெள்ளை அரிசியின் பாவனை கடந்த கால்நூற்றாண்டு காலத்தில்தான் திணிக்கப்பட்டது என்ற செய்தி தெரியாது.

### தனி வர்த்தகக் குறியுடன் அரிசிகள்

இந்த அரிசி மாற்றமானது பல அரிசி ஆலைகளை வேறுவேறு பெயர்களில் அரிசிகளை உருவாக்க வழிவகுத்தது. மிக நீண்டகாலமாக ஆட்சியாளரைத் திருப்திப்படுத்தியதால் அவர்களின் வழி "தனி வழியாக" வருடா வருடம் பல பில்லியன் ரூபாய்களை உள்நாட்டிலேயே உழைக்க முடிந்தது. இந்தப் பின்னணியிலேயே நிபுண, அரலிய, நியூ ரத்ன, சூரியா, ஜெம் மற்றும் பல ஆங்கில எழுத்துக்களை வர்த்தகக் குறியீடாக வைத்தும் அரிசி உற்பத்திகள் நடக்கின்றன.

இந்த அரிசி ஆலை முதலாளிகளிடம் கட்சிப் பிளவுகள், இனம் சார்ந்த பிளவுகள் என அதிக சிக்கல்கள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுகின்றபோது உடனடியாக அரிசியைப் பதுக்கி அல்லது தாமதித்துச் சந்தைக்கு அனுப்புவதன்மூலம் சிறு உற்பத்தியாளர்களின் அரிசிகள் விரைவில் தீர்ந்துபோகும் வழி செய்துவிட்டுப் பின்னர் பெரு முதலாளிகளின் அரிசி அதிக விலையில் சந்தைக்கு வருகிறது. அந்தச் சூழலில் அவர்கள் தனியுரிமை பெற்றவர்களாக மாறுகின்றனர்.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளாக நீடிக்கும் கொரோனாத் தாக்கம், முடக்கக் கட்டுப்பாடுகள், மட்டுப்பாடுகள் அரிசி ஆலைகளில் பணிபுரிவோரின் தொகை 50வீதத்துக்குக் குறைவாக இருப்பது, விற்பனை நிலையங்கள் பெருமளவில் மூடப்பட்டிருப்பது போன்றவற்றால் பெரிய அரிசி ஆலைகளில் இருந்து அரிசியைப் பகிர்ந்தளிக்கும் பொறிமுறையும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

### அரிசி இறக்குமதியில் சிக்கல்

வெளிநாட்டு இறக்குமதிகளுக்கான பணக்கையிருப்பு அரசிடம் இல்லாத நிலையில் மலிவு விலையில் மக்களுக்கு அரிசியை வழங்கும் வாய்ப்பு இல்லை. இதனால் உள்நாட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சட்டபூர்வமற்ற அரிசிகளைக் கைப்பற்றிச் சதோச ஊடாக மக்களுக்கு வழங்கும் நடவடிக்கை அரசால் முன்னெடுக்கப்பட்டது. இந்தச் செயற்பாட்டுக்குச் சட்டபூர்வமான அங்கீகாரத்தை ஏற்பாடு செய்வதற்காகப் பெரும்பாலும் போர்ச் சூழலில் பயன்படுத்தப்படும் அவசரகாலச் சட்டத்தை அரசு பயன்படுத்தி அரச ஆணையைப் பிறப்பித்தது. இதன்மூலம் பதுக்கிய உணவுப்பொருள்களைச் சட்டபூர்வமற்றதாக மாற்றி (கள்ளச் சந்தை) பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அத்தியவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிஷன் ஹல்ல மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சந்த திசாநாயக்கவும் பொறுப்பாக இருந்தனர். இவ்விரு அதிகாரிகளும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் பரீச்சயமில்லாத அதிகாரிகளாக இருப்பதால் பணத்தை அள்ளிவீசிச் சமாளிக்கும் முதலாளிகளின் வழமையான வாய்ப்பு இல்லாது போனது. அண்மையில் 31லொறிகளில் ஏறத்தாழ 1மில்லியன் கிலோ அரிசி இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது. இது இறக்குமதிக்கான உடனடிப் பணப்பரிமாற்றத்துக்குத் தட்டுப்பாட்டுடன் இருந்த அரசுக்குச் சாதகமாக இருந்தபோதிலும் பல்வேறு விமர்சனங்களுக்கு அரசு உட்பட்டிருக்கிறது. இது இதுவரை தாம் நினைத்தவாறு செயற்பட்ட அரிசி மாபியாக்களுக்கு கழுத்தில் சுருக்குப்போட்ட சம்பவமாக மாறியிருக்கிறது.

## இந்த வார சுடோக்கு - 52

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | 3 | | |
| | 7 | | 8 | 9 | | 5 | | |
| | | 5 | 7 | | | 6 | 9 | 2 |
| | | | | 2 | | | 3 | 6 |
| | | | 5 | | 6 | | | |
| 3 | 6 | | | 4 | | | | |
| 8 | 9 | 6 | | | 1 | 4 | | |
| | | 2 | | 7 | 4 | | 8 | |
| | | 7 | | | | | 6 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மணி**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மணி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 9 | 3 |
| 8 | 7 | 6 | 2 | 9 | 3 | 5 | 4 | 1 |
| 3 | 5 | 9 | 6 | 1 | 4 | 7 | 2 | 8 |
| 7 | 8 | 4 | 3 | 6 | 1 | 2 | 5 | 9 |
| 2 | 3 | 5 | 8 | 7 | 9 | 1 | 6 | 4 |
| 6 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 | 8 | 7 |
| 5 | 4 | 8 | 1 | 2 | 7 | 9 | 3 | 6 |
| 1 | 6 | 3 | 9 | 8 | 5 | 4 | 7 | 2 |
| 9 | 2 | 7 | 4 | 3 | 6 | 8 | 1 | 5 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.*

### சுனில் பெரேரா...

மங் நத்தியுனே மங் உம்பலாட்ட நங் மொக்கத்த இத்திங்' (தோற்றது நான், இல்லாமல்போனது நான், உங்களுக்கு இனியென்ன?)

இன்னொரு பாடலில் 'தியவன்ன ஓயா என்ன தேம்பங்கே பட்டன்' (நாடாளுமன்றம் அமைந்துள்ள இடம் தியவன்ன ஆற்றுப்பகுதி அங்குள்ள தவளைகள் என நாடாளு மன்ற உறுப்பினர்களைக் கிண்டல் செய்த பாடல்) சுனில்பெரோ பாடத் தொடங்கிய காலத்திலிருந்து தனது இறுதிக் காலம் வரை சோர்வில்லாது செயற்படடவர். இலகுவில் யாராலும் நிராகரித்துவிட முடியாதபடி 1970கள் 18980கள் 90கள் 2ஆயிரம் என ஒவ்வொரு பத்தாண்டுகளும் ஏறுமுகத்திலேயே இருந்தவர். அதுவே அவரது மக்கள் அபிமானத்துக்குச் சாட்சியாகும்.

இவரது பாடல் வரிகளில் தேசப்பற்று, ஊழல், குடும்பப் பெண்களின் உழைப்பு, பெண்கள் படுகின்ற கஸ்ரங்கள் போன்ற கருப்பொருள்களை வைத்து உருவாக்கப்பட்டதாகும். இந்தப் பாடல்கள் பலரது காதுகளில் ஓங்கி அறைந்ததுபோல வீரியமிக்கதாக விளங்கின.

1978இன் பின்பான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட இன முரண்பாடுகளுக்கு எதிராக, அனைத்து மக்களுக்கும் இந்த நிலம் சொந்தம் என்று பொருள்பட "லான்ட் விளோங்ஸ் ரு அஸ்" என்ற பாடலை இயற்றினார். இலங்கை மக்கள் மத்தியில் 45 ஆண்டுகளுக்குமேல் முக்கிய கதாபாத்திரமாக வலம் வந்த சுனில் பெரேராவை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

# "பாடும்போது நான் தென்றல் காற்று" குன்றாப் புகழுடைய புலமைப்பித்தன்



▮ ஜீவிதா ▮

இந்தியாவின் கோயமுத்தூரில் 1935ஆம் ஆண்டில் பிறந்து கவிஞராகவும், பாடலாசிரியராகவும் பிரபலமடைந்த ராமசாமி கடந்த 8ஆம் திகதியன்று இயற்கை யெய்தியிருந்தார். அப்போது அவருக்கு 85 வயது. 1968ஆம் ஆண்டில் திரைப்படங்களுக்குப் பாடல் எழுதத் தொடங்கிய அவர் 2015ஆம் ஆண்டு வரையில் நூறுக்கு மேற்பட்ட திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதிக் குவித்தவர். ஆரம்பத்தில் தமிழ் ஆசிரியராக இருந்து பின்னர், தமிழக சட்ட மேற் சபையின் துணைத் தலைவராகவும், அ.தி.மு.க சவைத் தலைவராகவும் பதவி வகித்துத் தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனின் நெருங்கிய நண்பராக இருந்தவர். 2001ஆம் ஆண்டில் தமிழக அரசின் பெரியார் விருதுடன், 1978இல் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன், 1981இல் எங்கம்மா மகாராணி, 1993இல் பத்தினிப்பெண் ஆகிய திரைப்படப்பாடல்களுக்காகச் சிறந்த பாடலாசிரியருக்கான விருதுகளை வென்றவர். 1960கள், 70கள், 80கள், 90கள், 2ஆயிரம் வரை என ஐந்து தசாப்த காலம் வரை இந்தியப் பாடல்துறையில் கால்பதித்து நின்ற பெருவிருட்சம்தான் புலவர் புலமைப்பித்தன். 1968ஆம் ஆண்டில் குடியிருந்த கோயில் திரைப்படத்தில் தொடங்கி, அடிமைப் பெண், குமரிக்கோட்டம், நல்ல நேரம், இதய வீணை, நான் ஏன் பிறந்தேன், உலகம் சுற்றும் வாலிபன், சிரித்து வாழ வேண்டும், சிவகாமியின் செல்வன், நேற்று இன்று நாளை, நினைத்ததை முடிப்பவன், பல்லாண்டு வாழ்க, இதயக் கனி, ஊருக்கு உழைப்பவன் எனப் பலதரப்பட்ட படங்களின் தொடர்ச்சியாக, 2ஆயிரமாம் ஆண்டில், காசி, தொடர்ந்து நந்தா, ஜெயம் பின்னர் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி, இந்திரலோகத்தில் நா. அழகப்பன், தெனாலிராமன் என வடிவேலுவின் நகைச்சுவைப் படங்கள், 2014இல் அரிமா நம்பி, 2015- எலி என 50வருடகாலத்துக்குள் ஏகப்பட்ட படங்களுக்குப் பாடல்களை எழுதிக் குவித்தவர் புலமைப்பித்தன்.

1968ஆம் ஆண்டில் வெளியாகிய குடியிருந்த கோயில் திரைப்படத்துக்காக அவர் எழுதிய முதல்பாடல் "நான் யார் நான் யார்". அந்தப் பாடலை டி. எம். சௌந்தரராஜன் பாட ம. சு. விசுவநாதன் இசையமைத்திருப்பார். அடிமைப்பெண் படத்தில் ஆயிரம் நிலவே வா என்கிற இவரது பாடலை எஸ். பி. பாலசுப்பிரமணியம், பி. சுசீலா ஆகியோர் இணைந்து பாடியிருப்பார்கள். நேற்று இன்று நாளை படத்தில் வரும் "பாடும்போது நான் தென்றல் காற்று" என்கிற இவரது பிரபல பாடலை எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாடியிருப்பார். அர்த்தங்கள் நிறைந்த அந்தப் பழைய பாடல்கள் இப்போதும் செவிக்கு இனிமை பயப்பதாகவே இருக்கின்றன.

மரபுக்கவிதைகளை எழுதுவதில் கைதேர்ந்த புலமைப்பித்தன் பாடல்கள் பலவற்றை எழுதிக் குவித்த குறைவற்ற புகழுக்குரியவர். சமூக அக்கறையுள்ள இவரது பாடல்கள் தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் மறையாத இடத்தைப் பிடித்து விட்டன. 'உன்னால் முடியும் தம்பி' படத்தில் புஞ்சை உண்டு நஞ்சை உண்டு என்கிற கமல்ஹாசனுக்குரிய பாடல், 'நாயகன்' படத்தில் தென்பாண்டிச் சீமையிலே தேரோடும் வீதியிலே என நீட்சியாக வடிவேலு நடித்த 'எலி' படத்தில் தனது கடைசிப் பாடல்களை எழுதினார். வயது முதிர்வின் காரணமாக உடல்நலம் குன்றியிருந்த புலமைப்பித்தன் சிகிச்சை பலனின்றி இவ்வுலகைவிட்டுச் சென்று விட்டாலும் அவரது காணங்கள் இங்கு தொடர்ந்தும் நிலைத்திருக்கின்றன.

# சுனில் பெரேரா என்கிற மக்கள் கலைஞன்

▮ ஆன்கொலின்

இலங்கைப் பாடகன் சுனில்பெரேராவை அவரது 68ஆவது வயதில் கொரோனா பலியெடுத்துவிட்டது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை எல்லோராலும் விரும் பப்பட்ட ஒருவர்தான் சுனில்பெரேரா. அரசியல்வாதிகளுக்கு அவரைப் பிடிக்காது. அவ்வளவுக்கு அரசி யல்வாதிகளின் ஊழல்கள், நேர்மையின்மை, மக்களுக்குச் சேவை செய்வேன் என்று சொல்லி நாடாளுமன்றம் சென்றபின் வாக்களித்த மக்களைக் கைவிடுகின்றமை ஆகியவற்றை நையாண்டி பண்ணி அவர் பாடிய பாடல்கள் பிரசித்தமானவை. இவர் சிங்கள மொழியில் பல புதுமைகளை உருவாக்கிய பாடகர்.

தனது 18வயதிலிருந்து பாடல்களைப் பாடிவரும் இவர், ஒரு பாடகனாக, பாடல் ஆசிரியராக, இசையமைப்பாளராக, அரங்க நிகழ்வுகளில் உற்சாகமாக ஆடிப்பாடுபவராக இருந்தார். இதைவிடப் பல்வேறு விளம்பரங்களில் நடித்தவர்.




1970களில் ஜிப்சி இசைக்குழு என்ற பெயரில் இசைக்குழு ஒன்றை ஆரம்பித்துப் பொதுமேடைகளிலும் திருமண விழாக்களிலும் தனது சொந்தப் பாடல்களை மக்கள் மத்தியில் பாடிப் பிரபல்யம் பெற்ற இவர் பைலாப் பாடல்களிலும் பிரசித்திபெற்றிருந்தார். 1981இல் முதற் தடவையாகத் தொடரிசைப் பாடல்களை (நிறுத்தாமல் தொடர்ந்து பாடுவது) அறிமுகம் செய்தவர். அதுதொடர்பான பல்வேறு ஒலி நாடாக்களை வெளியிட்டவர்.

**பிரபல்யமான பாடல்கள்**

இலங்கையின் 3இனத்தவராலும் கவரப்பட்ட ஒரு பாடல் 'லெவே செமா எக்க மதயே' (உலகம் பொதுவானது. உலகம் ஒன்று) என்கிற பாடலை சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பல முன்னணிப் பாடகர்களை இணைத்துப் பாடி அசத்தியவர். இந்தப் பாடலில் 'வாத மில்லை பேத மில்லை அழகிய உலகம் நாளை மலர்கிறதே' என்ற அடிகள் சிறப்பானவை.

ஒரு பெரிய அமைச்சராகப் படைபட்டாளங்கள், மக்கள் என வலம் வந்த ஒருவர் தேர்தலில் தோற்றதும் அதே மக்களால் கேலி செய்யப்படுவதாக அரசியல்வாதிகளுக்குச் சாட்டையடி கொடுக்கும் வகையில் பாடல் எழுதியிருப்பார். 'ஜீவித ஹம்பகர்லா'' என்ற அந்தப் பாடல் மிகவும் பிரபல்யமானது. இதில் வரும் வரிகளில் ஒன்று 'தாதுனே

(23ம் பக்கம் பார்க்க)

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781